1007

28 AUG

1007

சுந்தர வாசகம்

ஐந்தாம் புத்தகம்

...ப் பப்ளிஷிங் ஹௌஸ்

மதராஸ்

TB
031(5)
N33
86081

ஸ்ரீ

சுந்தர வாசகம்

(ஐந்தாம் புத்தகம்)

சென்னை
ஹிந்து தியாலாஜிகல் ஹைஸ்கூல்
தலைமைத் தமிழாசிரியராயிருந்தவரும், இலக்கிய,
இலக்கண, தர்க்க, வேதாந்த போதகாசிரியருமாகிய
ஸ்ரீமத்-கோ. வடிவேலு செட்டியாரவர்களால்

பார்வையிடப்பட்டது.

23 AUG 1934
MADRAS

பாரத் பப்ளிஷிங் ஹௌஸ்
150, அண்ணுப்பிள்ளை தெரு
மதராஸ்

காபிரைட்] 1933 [விலை அணா - 6

TB
031(5)
N33

PRINTED AT
THE KESARI PRINTING WORKS, MADRAS.

1480
494.81186
86082

முன்னுரை

நூதன முறையைத் தழுவி வெளியிட்ட சுந்தர வாசகப் புத்தகம் நான்கும் அறிஞர் பலரால் நன்கு மதிக்கப் பட்டு ஆசிரியர் பலரால் ஆதரிக்கப்பட்டமையால், இளைஞர் வகுப்புகளில் கடைசியான ஐந்தாவது வகுப்பு மாணவர் களுக்குரிய ஐந்தாவது புத்தகத்தை இப்பொழுது வெளி யிடலானோம்.

இப் புத்தகத்தில், நீதி, புகழ்பெற்றவரது ஜீவிய சரித் திரங்கள், (நாடக முறையில்) இதிகாசம், சரித்திர சம்பந்த மான கதைகள், பத்தியை ஊட்டும் பெரியோர்கள் சரித் திரங்கள், தாவரவர்க்கங்கள், கைத்தொழில் முதலியவற் றைப்பற்றிய பாடங்கள், எழுத்துப் பிழையின்றியும், வாக் கியத் தவறின்றியும் அமைந்திருத்தல் எவரும் கவனிக்கத் தக்கதாம்.

இளைஞருக்கு இனிக்கும்படி எளிய நடையில் அமைந் துள்ள இப்பாடங்களின் வாசகப்போக்கு, மாணவர் மேலும் மேலும் கற்கும்படி, அவர்களைத் தூண்டும் தன் மையில் அமைந்துள்ளது.

ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும், அரும்பத உரைகளும், இன்றியமையாத வினக்களும், முக்கியமான இலக்கணக் குறிப்புக்களும் எழுதியிருக்கின்றோம்.

ஸர். டி. முத்துசாமி ஐயர் அவர்களது பௌத்திர ரான பிர்மஸ்ரீ T. S. இராமசுவாமி ஐயர், B. A., B. L., (Advocate) அவர்கள் இப்புத்தகத்தின் பாடங்களில் ஒன்றாகிய 'ஸர். டி. முத்துசாமி ஐயர்' என்னும் பாடத் தைச் சீர்செய்து தந்தனர்; அதனோடு நில்லாது 'ஐயர்' அவர்களது படத்தையும் இப்புத்தகத்தில் சேர்ப்பதற்கு உதவி செய்தனர். இவரது பெருந்தகைமை என்றும் மறக்கத்தக்கது அன்றாம்.

பதிப்பாசிரியர்.

பொருளடக்கம்

பாடம்			பக்கம்
1.	சோழநாடு	....	1
2.	தேக்குமரம்	....	7
3.	வெண்ணிலா துதி	....	12
4.	சகோதர வாஞ்சை—I	....	13
5.	பழைய கருப்பனே கருப்பன்	....	17
6.	சகோதர வாஞ்சை—II	....	23
7	நன்முத்து	....	28
8.	மார்க்கண்டன்	....	30
9.	நம் நாடு	....	36
10.	விநோதச் செடிகள்	....	37
11.	ஸர். டி. முத்துசாமி ஐயர்	....	43
12.	சமயோசித புத்தி	....	49
13.	செல்வத்தின் சிறப்பு	....	54
14.	தியாகராச சுவாமிகள்	....	55
15.	சாரணச் சிறுவர்	....	62
16.	தீப்பெட்டி	....	68
17.	செய்யத் தக்கவை	....	72
18.	ஸர் ஐஸக் நியூடன்	....	73
19.	மண் எண்ணெய்	....	79
20.	பிதாக்கள்	....	84
21.	தேசிங்கு ராஜன்	....	85
22.	கண்ணப்பன்—I	....	92
23.	கண்ணப்பன்—II	....	96
24	வாக்குண்டாம்	....	104
25.	நல்வழி	....	106
26.	பதவுரை	....	109—119

மதிப்புரை

அன்பார்ந்த ஐயா,

தாங்கள் தந்த ஒன்று முதல் ஐந்துவரையிலுள்ள சுந்தரவாசக பாடப் புத்தகங்களைப் படித்துப் பார்த்தேன். அவை இளஞ்சிறாருக்கு எழுத்து மணம் நுகர்விப்பதுமுதல், தொடர் வாக்கியங்களை விரைந்து வாசிக்கவும் எழுதவும் பயில்வதுவரை முறையாகக் கற்பிக்க மிகவும் உதவக்கூடிய அமைவுடையனவாக எழுதப் பெற்றிருக்கின்றன. எளிய இனிய சொற்களும் சொற்றொடர்களும் சிறுவர் மனதைக் கவர்ந்து, அவர் விரும்பிக் கற்கும்படி இயல்பு மரபு நம்மவர் நாகரிக வழக்குகளை அனுசரித்தும் புதிய கல்வித்துறைகளின் நியம நுணுக்கங்களை மருவியும், இந்த வாசகங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. இத்தகைய இயலமைவுடையவற்றிற்கு இடப்பெற்ற பெயர் மிகவும் பொருத்தமுடையதென்றே தோற்றுகிறது. இவை ஐந்தும், சொல்லாக்கமும் பொருளடக்கமும் கதையமைப்பும் எல்லாம் அழகுபெற அமைந்துள்ள இவற்றிற்குச் " சுந்தர வாசகங்கள் "

என்று பெயரிட்டிருப்பது இயைபுடையதேயாகும். கல்வியிலாக்கா அதிகாரிகளும், கலாசாலையத்தியட்சரும் இச்சுந்தர வாசகங்களை முறையே பல பிரதம வகுப்புக்களுக்குப் பாடப்புத்தகங்களாக வைத்துத் தமிழ்ச் சிறுருக்கு நன்மையூட்டுவதுடன், இந்நன் முயற்சியை மேற்கொண்ட பிரசுராலயத்தார் தமிழ்த் தொண்டையும் ஊக்கி யுதவுவார்களென்று நம்புகிறேன். இத்தகைய இனிய எளிய வாசகங்களும் கதைகளும் இன்னும் பல பொறுக்கியும் எழுதுவித்தும் வெளியிட்டுத் தமிழகத்துக்கு நலம் விளக்குமாறு இவர்களுக்குப் பல்லாண்டு கூறுகிறேன்.

ச. S. BHARATI, M. A., B. L.,
Professor of Tamil,
Annamalai University.

அண்ணாமலைநகர்.



தியாகராச சுவாமிகள் (பக்கம் 55)

ஸ்ரீ

சுந்தர வாசகம்

ஐந்தாம் புத்தகம்

1. சோழநாடு

இந்தியாவின் தென்பகுதியில் தமிழ்மொழி வழங்கும் நாடு தமிழகம் எனப்படும். கிழக்கே வங்காளக் குடாக்கடலும், தெற்கே கன்னியாகுமரியும், மேற்கே அரபிக்கடலும், வடக்கே வேங்கடமலையும் அதன் எல்லைகள் ஆகும். இத் தமிழ்நாடு முன்னாளில் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என மூன்று பிரிவுடையதாக இருந்தது. சேரர், சோழர், பாண்டியர் என்னும் மரபுகளில் உதித்த மன்னர்கள் அவற்றை ஆண்டு வந்தனர்.

தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தென் ஆறுகாடு ஆகிய ஜில்லாக்களே அக்காலத்தில் சோழநாடாக இருந்தன. காவிரியாறு பாய்வதால் மிகவும் வளப்பமுடையதாய் இருந்தமையால், அந் நாடு "புனல் நாடு" எனவும் பெயர்

பெற்றது. காவிரிநதிக்குப் "பொன்னி" என்று மற்றொரு பெயரும் உண்டு; அதனால், சோழ நாட்டிற்குப் பொன்னிநாடு என்று வேறு ஒரு பெயரும் வழங்கப்பட்டு வந்தது.

சோழநாடு காவிரி நதியினால் செழிப்புற்று விளங்கினமையால், அந் நாட்டில் மக்கள்

அதிகமாகக் குடியேறி வாழலாயினர். பயிர்த் தொழில் செழித்து ஓங்கியதால், "சோழ வளநாடு சோறு உடைத்து" எனவும் அது புகழ் பெற்றது. அந் நாட்டில் கல்வியும், செல்வமும் சிறந்து விளங்கின; கைத்தொழிலும், வாணிபமும் பெருகி இருந்தன.

சோழர் என்னும் குடியில் தோன்றிய அரசர்கள் சோழநாட்டில் முறை வழுவாது செங்கோல் செலுத்தினர். கருவூர், உறையூர், திருவாரூர், காவிரிப்பூம் பட்டினம் என்னும் நகரங்கள் நான்கும் சோழர்களின் தலைநகரங்களாக இருந்தன; இவற்றுள், உறையூரும், காவிரிப்பூம் பட்டினமுமே முக்கியமானவை.

தமிழ் நூல்கள் யாவும் பெரும்பாலும் காவிரிப்பூம் பட்டினத்தைப் புகழ்ந்து உரைக்கின்றன. அந் நகரம் கடற்கரையில் இருந்தபடியால், துறைமுகப் பட்டினமாகவும் துலங்கியது. அந் நகருக்கு வியாபாரத்தின் பொருட்டு மரக்கலங்கள் வருவதும் போவதுமாக இருக்கும். அங்கு வெளிநாட்டுப் பொருள்கள் வந்து குவியும். அயல் நாட்டாரான யவனரும், ரோமரும் காவிரிப்பூம் பட்டினமென்னும் புகார்நகரில் வந்து இறங்கி வாணிபம் செய்தனர். அந்த அணிநகரம் கடல் கொள்ள

அழிந்துபோயிற்று. இப்பொழுது அங்கு அப் பெயரால் ஒரு சிறிய ஊரே உளது.

கி. பி. மூன்ரும் நூற்ருண்டு வரையில் சோழமன்னர் பராக்கிரமசாலிகளாய் இருந் தனர். பின்னர்ச் சிலகாலம் சோழநாடு பல்லவர் ஆட்சிக்கு உட்பட்டது. பத்தாம் நூற்ருண்டின் ஆரம்பத்தில் சோழமன்னர் மீண்டும் தலை யெடுத்து, பல்லவரையும் பாண்டியரையும் வென்று, தமது ஆட்சியை வடக்கே நெல்லூரி லிருந்து, தெற்கே கன்னியாகுமரி வரையில் ஸ்தாபித்தனர். பதின்மூன்ரும் நூற்ருண்டு வரையில் சோழராஜ்ஜியம் நிலைபெற்று இருந் தது.

இக் காலத்திலிருந்த சோழமன்னரில் பராந் தக சோழன் மிகக் கீர்த்தி பெற்றவன். அவன் பாண்டியரை வென்று, இலங்கைக்கும் படை யெடுத்துச் சென்று, அதையும் கைப்பற்றினுன். அவன் சிவபத்தி உடையவன். தில்லைச் சிதம்பரம் நடராஜப் பெருமான் ஆலயத்தின் விமானத்திற்குப் பொற்றகடு வேய்ந்தவன் அவனே.

பராந்தகன் சந்ததியில் இராஜ ராஜன் என்பவன் தோன்றினுன்; அவன் பெரிய வீரனுக விளங்கிப் பல போர்களில் வெற்றி

பெற்ருன். தென்னுடு முழுவதும் அவன் ஆட்சிக்கு உட்பட்டது. வடக்கேயுள்ள வெங்கி நாட்டை அவன் வென்று தன்வசமாக்கினுன்; கலிங்க தேசமும் அவன் கைவசமாயிற்று. இந்த வெற்றிகளின் அறிகுறியாகவே, தஞ்சையில் பிரகதீசுவரர் ஆலயம் அவனுல் கட்டப் பட்டது. இராஜ ராஜன் மிகுந்த சிவபத்தி உடையவனுய் இருந்தமையால், சிதம்பரம் நடராஜர் கோயிலுக்குத் தங்கத் தட்டுகளும், பாத்திரங்களும் வழங்கினுன். தில்லைவாழ் அந்தணர் இவனது சிவதரும பரிபாலனத்தை வியந்துபேசி இவனுக்கு "இராஜராஜன் சிவபாத சேகரன்" என்று புகழ் நாமம் சூட்டினர்.

இராஜ ராஜன் ஆட்சியில் குடிகள் இன் புற்று வாழ்ந்தனர். சோழநாட்டின் புகழ் பாரத தேசமெங்கும் பரவிற்று. ஆனுல், அவனுக்குப் பின் வந்த அரசர்கள் வலிமை குன்றி வர, வாழ்வு குலைந்தவராயினர். சோழர் வலிமை குன்றியதும், அக் காலத்தில் வடக்கே மிகவும் பிரசித்திபெற்று இருந்த விஜயநகர வேந்தர் சோழ நாட்டைச் சிறிது சிறிதாகக் கைப்பற்றி னர். அதனுல், சோழர் ஆட்சி மங்கி மறைந்து போயிற்று. அதன்பின் நாயக்க மன்னரும், முகம்மதிய அரசர்களும் சில நூற்ருண்டுகள்

வரையில் சோழநாட்டை ஆண்டனர். பிறகு அது ஆங்கிலேய துரைத்தனத்தார் ஆட்சிக்கு உட்பட்டு அவர்களால் ஆண்டுவரப்படுகின்றது.

அரும்பத உரை:—மரபுகளில் - வம்சங்களில்; புனல் - தண்ணீர்; வாணிபம் - வர்த்தகம்; பட்டினம் - துறைமுக நகரம்; துலங்கியது - விளங்கியது; மரக்கலங்கள் - கப்பல்கள்; அணி நகரம் - அழகான நகரம்; வேய்ந்தவன் - போட்டவன்.

வினா:—1. சோழநாட்டின் எல்லைகள் எவை?

2. சோழர்களின் தலை நகரங்கள் எவை?

3. புகார்நகர் என்பது எது?

4. 'இராஜ ராஜன் சிவபாதசேகரன்' என்ற பெயர் யாரால் யாருக்குக் கொடுக்கப்பட்டது?

இலக்கணக் குறிப்பு:—பின்வரும் வார்த்தைகளின் புணர்ச்சியை நோக்குக. தமிழ் + அகம் = தமிழகம்; முன் + நாள் = முன்னாள்; செழிப்பு + உற்று = செழிப்புற்று; கடல் + கரை = கடற்கரை; பத்து + மூன்று = பதின்மூன்று; பொன் + தகடு = பொற்றகடு; தெற்கு + நாடு = தென்னாடு; நூறு + ஆண்டு = நூற்றாண்டு.

2. தேக்குமரம்

மனிதர்க்குப் பயன்படும் மரங்களில், மா, பலா, தேக்கு, சந்தனம், கருங்காலி எனப் பல வகைகள் உண்டு; இவற்றுள், தேக்கே மிக உபயோகமுள்ள தாகும். இது குறிஞ்சி நிலச் சார்பான பெருங் காடுகளிலும் மலைகளிலும் உண்டாகும்; ஆனால், சந்தனக்கல் சம்பந்தமுள்ள பூமிகளிலே மிகச் செழித்து வளரும்; நமது நாட்டில் மலையாளத்திலும், மைசூரிலும், வட சர்க்காரிலும், பர்மா தேசத்திலும், இலங்கைத் தீவிலும் மிகுதியாக உற்பத்தி ஆகின்றது. ஆயினும், பர்மாவில் உண்டாகும் தேக்குமரமே மிகச் சிறந்ததெனக் கருதப்படுகின்றது.

தேக்கு நேராக உயர்ந்து வளரும் இயற்கை உடையது. இதன் உயரம் 50 அடி முதல் 70 அடி வரையில் இருக்கும். இம் மரம் முதிர்ந்து வைரம்பற்றச் சுமார் ஐம்பது வருடங்கள் செல்லும். முதிர்ந்த மரத்தின் அடிப்பாகம் சுமார் எட்டு அல்லது பத்து அடி சுற்றளவு உள்ளதாயிருக்கும். இதன் இலைகள் தடித்தும், பின்புறம் சுறசுறப்பாயும் இருக்கும். நன்றாக வளர்ந்த மரங்களின் இலைகள் 10 அங்குல முதல் 24 அங்குலம் வரையில் நீளமும், 6 அங்குல

முதல் 18 அங்குலம் வரையில் அகலமும் உள்ளனவாய் இருக்கும். அதனால், இந்த இலைகளை மலைவாசிகள் உண்கலமாக உபயோகிக்கின்றனர். இந்த இலைகள் வேனிற்காலத்தில் உலர்ந்து உதிரும்.

இம் மரத்தின் நுனிக் கொம்புகளில் மலர்கள் கொத்துக் கொத்தாகப் பூக்கும்; இவற்றுள், சில அரும்பி மலரும். இம் மலர்களிற் பிஞ்சுகள் உண்டாய்க் காய்த்துப் பழுக்கும். இப் பழங்கள் வட்டமாயும் கடினமாயும்



இருக்கும். பழங்களில், ஒன்று, அல்லது இரண்டு, அல்லது மூன்று விதைகள் இருக்கும். தேக்கு, விதை விதைத்துப் பயிராக்கப்படுகின்றது.

தேக்கு மரத்தின் அடிப் பாகத்தில் பொறுக்குப் போன்ற பட்டைகள் உண்டு. இப் பட்டைகள் மாதத்திற்கு ஒருமுறை செதுக்கப் படும். இவற்றிலிருந்து சிவப்பு நிறமுள்ள ஒருவிதச் சாயம் காய்ச்சப்படுகிறது. இம் மரத்தைச் செதுக்கினல், அதிலிருந்து ஒருவிதத் தைலம் வடியும். இதனை வேறு சில பொருள் களுடன் சேர்த்துக் காய்ச்சி, "வார்னிஷ்" என்னும் ஒருவித மெருகெண்ணெய் செய்யப் படுகின்றது.

தேக்கு மரத்தில் தைலப்பற்று அதிகமாக இருப்பதால், இதனைச் செல் அரிக்காது; அன்றியும், தேக்கு மிகவும் உறுதியானது; தச்சு வேலைக்கும் இலகுவானது. அதனல், அம் மரம், கட்டட வேலைக்கு வேண்டிய தூண், உத்திரம், விட்டம், வரிச்சல், பலகை முதலியவற்றிற்கு விசேஷமாக உபயோகப் படுகிறது. தவிர, தேக்குமரம் நீரில் கிடந்தா லும், வெயிலில் காய்ந்தாலும் நீண்டகாலம் கெடாமலிருக்கிறபடியால், படவுகள், கப்பல்கள், இரயில் வண்டித் தொடர்கள் முதலியன செய்வதற்கு உபயோகப்படுகின்றது. மேலும், தேக்குமரம் உறுதியும் நயமும் பெற்றிருப்ப தால், நன்ருகத் தேய்த்து வார்னிஷ் பூசுங்கால்

பளிங்குபோல் வழ வழப்பும் பள பளப்பும் பெறும்; அதனால், வீட்டிற்கு வேண்டும் பெட்டி, பீரோ, மேஜை, நாற்காலி முதலியவை தேக்கினாலேயே விசேஷமாகச் செய்யப்படு கின்றன.

தேக்குமரங்கள் பெரும்பாலும் மலைப்பிர தேசங்களிலேயே செழித்து வளருமென்பதை முன்னரே வாசித்தோம் அல்லவா? அவற்றைத் தொழிலாளர்கள் வெட்டிச்சாய்த்து, அடையாளம் செய்து, அருகில் உள்ள நதிகளில் உருட்டித் தள்ளி விடுவார்கள். அவை ஆற்றில் மிதந்து கொண்டே செல்லும். மரத்தை அறுத்து வேலை செய்யும் வாட்

சாலைகள் அநேகமாக நதிகளின் கரைக்குச் சமீபத்திலேயே இருக்கின்றன. அம் மரங்களை தொழிலாளர்கள் தேக்கி எடுத்துக்கொண்டு போய் வாட்சாலையில் அடுக்கி வைப்பார்கள். ஆற்று வசதி இல்லா இடங்களில் யானைகளைப் பழக்கி அவைகளின் உதவியால் மரங்களை வாட்சாலைக்குக் கொண்டுபோவது வழக்கம்.

இப்படி வாட்சாலையில் சேர்க்கப்படும் மரங்களிலுள்ள ஈரத்தைப் போக்குதற் பொருட்டு, தொழிலாளர்கள் அவைகளைப் பரப்பி உலர்த்துவார்கள்; உலர்ந்தபின், அவை வேண்டிய அளவுப்படி அறுக்கப்படும்; அறுக்குங் காலத்தில் அத் தொழிற் சாலையைச் சுற்றி நாற்புறமும் நறு மணம் வீசும்; அறுத்த பின் பார்த்தால், மரத்தின் அறுப்புவாய் பொன்னிறம்போலத் தோன்றும்.

விலை மதிப்புள்ள தேக்கு, கருங்காலி, சந்தனம் முதலிய மரங்கள் காடுகளிலும், மலைப் பிரதேசங்களிலும் அதிகமாக வளர்கின்றமையால், அரசாங்கத்தார் அவற்றைப் பாதுகாக்கக் 'காட்டு இலாகா' என ஒரு இலாகா ஏற்படுத்தி இருக்கின்றனர்.

அரும்பத உரை:—குறிஞ்சி நிலம் - மலைசார்ந்த இடம்; வேனிற் காலம் - வெயில் காலம் (சித்திரை முதல் ஆடி வரையில்); அறுப்புவாய் - அறுத்த இடம்.

வினு :—1. தேக்கு எங்கு நன்ருக உற்பத்தியாகிறது?
2. வார்னிஷ் என்பது என்ன? அது எப்படி செய்யப்படுகிறது?
3. தேக்கு எவ்வாறு உபயோகப்படுத்தப்படுகிறது? ஏன்?

இலக்கணக் குறிப்பு :—1. ஐம்பது, வேனிற்காலம், மெருகெண்ணெய், வாட்சாலை, பொன்னிறம்; இவை எப்படி பிரியும்? 2. "இம்மரத்தின் நுனிக்கொம்புகளில் மலர்கள் கொத்துக் கொத்தாகப் பூக்கும்." இவ் வாக்கியத்தின் எழுவாய் பயனிலைகளை எழுதுக.

---

3. வெண்ணிலா துதி

1. நாதமுடி மேலிருந்த வெண்ணிலாவே!—அங்கே
நானும்வர வேண்டுகின்றேன் வெண்ணிலாவே!

2. ஆதியந்த மென்றுரைத்தார் வெண்ணிலாவே!—அந்த
ஆதியந்த மாவதென்ன வெண்ணிலாவே!

3. முப்பொருளு மொன்றதென்பார் வெண்ணிலாவே!—அந்த
மூன்றுமொன்ருய் முடிந்ததென்ன வெண்ணிலாவே!

4. நானதுவாய் நிற்கும்வண்ணம் வெண்ணிலாவே!—ஒரு
ஞானநெறி சொல்லுகண்டாய் வெண்ணிலாவே!

5. அண்டபகி ரண்டமெல்லாம் வெண்ணிலாவே!—ஐயர்
ஆட்டமென்று சொல்வதென்ன வெண்ணிலாவே!

4. சகோதர வாஞ்சை (நாடக முறை)—I.

அங்கம் 1. காட்சி 1.

இடம்: நந்திக் கிராமம்.

காலம்: சூரியோதயம்.

பாத்திரங்கள்: பரதன், சத்துருக்கன், சோதிடர்.

பரதன்: (இராமரது பாதுகைகளின் முன் அமர்ந்து) ராம்! ராம்! ராம்! (எனச்சொல்லிக்கொண்டிருந்து திடீரெனக் கண்விழித்து) தம்பி! சோதிடரைக் கூப்பிடு. ராம்! ராம்! ராம்!

சத்துருக்கன்: அண்ணா! அவர் இங்கேவந்து காத்திருக்கின்றார்.

பரதன்: பெரியீர்! என் அண்ணா வருவதற்கு இன்னும் எத்தனை நாள் ஆகும்? ராம்! ராம்! ராம்!

சோதிடர்: மகராஜ்!

பர: (செவிகளைப் பொத்திக்கொண்டு) மறுபடியும் அப்படி அழையாதீர்! அபசாரம்! அபசாரம்! (கன்னத்தில் அடித்துக்கொள்ளுகிறான்.)

சோதி: பிரபோ! மன்னிக்கவேண்டும். இன்றுடன் பதினான்கு வருஷங்கள் முடிந்தன.

பர: ஆஹா! எனக்கும் கடைத்தேறும் காலம் வந்ததா? இளையோய்! சேவகர்களை நாற்

புறமும் போக்கு; தசரத குமாரர் வரு கிருரா என்று பார்க்கச்சொல். நாமும் எதிர்கொள்ளச் செல்லலாம்; வா. ராம்! ராம்! ராம்! (வெளியே செல்லுகிருன்).

சத் : அண்ணு! அப்படியே வருகிறேன்.

பர : (நாற்புறமும் சுற்றிநோக்கி) ஐயோ! இன்னும் என் கண்ணனைக் காணேமே! என் இறைவர் சொன்ன சொல் தவருர். அவருக்கு ஏதேனும் துன்பம் வந்து அடுத்ததோ? ஹே! ராமா!

சத் : அண்ணு! ஏன் இவ்வாறு கலங்கிக் கூற வேண்டும்? நம் தமயனுரை வெல்வது மும்மூர்த்திகளுக்கும் ஆகுமோ?

பர : தம்பி! உண்மை, உண்மை; அவர் வாரா திருக்க யாது காரணம்? (சிறிது யோசித்து) என்ன மூடன் யான்? இப்பொழுது அன்ருே உண்மை ஒருவாறு விளங்குகிறது! "பரதனுக்கும் நாட்டை ஆள அவா இருக்கலாம்; நாம் திரும்பி அயோத்திக்குச் செல்லவேண்டுவதில்லை." என்று நினைத்து விட்டனர்போலும்! இராமர் வாராத காரணம் அதுவே. அண்ணு! அப்படியா நினைத்தீர்? இனி எது எவ்வாறு ஆனுலும் எனக்கு என்ன? இராமர்

வனத்தில் இருக்கட்டும் ; அன்றி வையகம் ஆள வந்து சேரட்டும்; இரண்டும் ஒன்றே. "குறித்த நாளில் வரத் தவறினுல் உயிர் தரியேன்," என்று நான் அப்பொழுதே இராமருக்குக் கூறிவிட்டேன். இனி நான் உயிர் வாழின், மாந்தர் என்னைப்பற்றி யாது கூறமாட்டார்? என் மனத்தில் களங்கம் இல்லை என்பதை உலகுக்கு உணர்த்த வேண்டுவதே எனது கடமையாம். என் உயிரைப்போக்கி நான் அதனை மெய்ப்பிக்கிறேன். சத்துருக்ன !

சத் : அண்ணு !

பர : இங்கே என் அருகில் வா ! (தழுவிக் கொள்ளுகிறுன்.) குழந்தாய் ! நீ உத்தமன் அல்லவா ? எனக்கு ஒரு வரம் அளிப்பாயா ?

சத் : அண்ணு ! என்ன வார்த்தை இது ! நானு தங்களுக்கு வரம் கொடுப்பது ? தங்கள் வாய்ச்சொல் எனக்குக் கட்டளை யன்றே ?

பர : கண்ணே ! மெச்சினேன் உன் குணத்தை ! நான் உன்னை வேண்டுவது வேறென்று மில்லை. குறித்த நாளில் இராகவர் குறுகிலர். யான் எரிபுகத் தீர்மானித்துவிட்டேன். எனக்குப்பின் அயோத்தியை நீ செம்மையாக ஆண்டுவர வேண்டும்.

சத் : (காதுகளை இறுக மூடிக்கொண்டு) அண்ணு ! அண்ணு ! இவ் வார்த்தைகளை நான் கேட்கும்படி தங்களுக்கு என்ன அபசாரம் செய்தேன் ; இப்படிக் கூறவும் தங்களுக்கு மனம் வந்ததே! இது என் துர்ப்பாக்கியமே! ஒரு தம்பி நாடு துறந்து இராமனுடன் காடு சென்ருன் ; இன்னொரு தம்பியோ குறித்த நாளில் இராகவன் வாராமையால் உயிர்விடத் துணிந்தான் ; மற்ருெரு தம்பியாகிய நானே அயோத்தியை ஆண்டு வர வேண்டும் ! அண்ணு ! நன்று கூறினீர் ! "அண்ணன் காடு சென்றதும் தம்பி நாடாள்கிருன்" என்பது தங்களுக்குத் தான் வசைச்சொல்லோ ? தாங்கள் இறந்த பின் கணமேனும் யான் உயிர் தரிப்பின், அயோத்தியைக் கவர்ந்து ஆண்ட பாவம் என்னைச் சேரட்டும் !

பர : தம்பி ! இக்கவலைகள் எனக்கு ஏன் ? நான் உயிருடன் இருப்பதாலன்ருே இராமர் காட்டிலிருக்கத் தீர்மானித்திருக்கின்ருர் ? யான் மாண்டால் அவர் வந்து முடிசூட்டிக் கொள்வார். நீ உடனே சென்று நான் அக்கினிப் பிரவேசம் புரிய ஏற்பாடு செய்.

சத் : அண்ணு ! இதோ செய்கிறேன்.

5. பழைய கறுப்பனே கறுப்பன்

இருகாவூர் என்னும் ஒரு கிராமத்தில் கறுப்பன் என்னும் ஒரு சிறுவன் இருந்தான். அவன் வயிறு வளர்ப்பதற்காக் அவ் வூரில் வாழும் வேளாளர் ஒருவரிடம் வேலைக்கு அமர்ந்தான். அவன் காலையில் பழைய சோறு உண்டு கன்று காலிகளை ஓட்டிக்கொண்டு போய்ப் புல் கண்ட இடங்களில் மேய்ப்பான்; பொழுது சாய்ந்ததும், அவைகளை மறித்து வந்து கொட்டிலில் கட்டி விடுவான்.

ஒரு நாள் கறுப்பன் வழக்கம்போலக் கன்று காலிகளை ஓட்டிச் சென்று மேயவிட்டு, பக்கத்தில் இருந்த கரட்டில் அமர்ந்து இருந்தான். அப்பொழுது அவன் விளையாட்டாக அங்கு இருந்த பாறை ஒன்றைப் புரட்டினன்; அதன் அடியில் ஒரு செப்புப் பாத்திரத்தில் பொற்காசுகள் இருப்பதைக் கண்டான். அதனல், கறுப்பன் களிப்பும் வியப்பும் எய்தி, சுற்றுமுற்றும் பார்த்தான்; கண்ணுக்கு எட்டியவரை ஒருவரும் இல்லாதிருப்பதைக் கண்டு, அப் பாத்திரத்தை அங்கேயே வைத்து, அந்தப் பாறையைக்கொண்டே மூடினன். பிறகு அவன் கன்று காலிகளைத் திரும்ப வீட்டிற்கு ஓட்டிக்

கொண்டு சென்று, கொட்டிலில் கட்டிவிட்டுத் தெருவுக்கு வந்தான்.



யஜமானன் அவனை நோக்கி, "அடே! கறுப்பா! கன்று காலிகளைச் சரிவரக் கட்டி வைக்கோல் போட்டாயா?" என்றான். எனலும், கறுப்பன் சிறிது முகத்தைச் சுளித்து, "என்ன ஐயா இது! அடா புடா என்கிறீர்களே? கறுப்பா என்று என் பெயரை மாத்திரம் சொல்லி அழைக்கலாகாதா?" என்றான். அது கேட்ட யஜமானன் திடுக்கிட்டுத் "தினந்தோறும் நாம் இவனை இப்படி அழைப்பது வழக்கமாய் இருந்தும், இன்று ஏன் இவன் பிணங்கு கின்றான்? இதில் ஏதோ ஒரு இரகசியம்

இருக்கிறது; அதனைக் கவனிக்க வேண்டும்,'' என்று எண்ணி, சும்மா இருந்து விட்டான்.

மறுநாள் கறுப்பன் கன்று காலிகளை ஓட்டிக் கொண்டுபோய் மேயவிட்டு, காட்டை அடைந்து பாறையைப் புரட்டிப் பார்த்தான்; தான் மூடி வைத்தவாறே புதையல் இருக்கக் கண்டு உள்ளம் பூரித்தான்; முன்போலவே அதனை மூடிவிட்டு, கன்றுகாலிகளை மறித்துக் கொண்டு மனைக்குச் சென்றான். அவன் வீட்டண்டை வந்ததும், யஜமானன் அவனைப் பார்த்து, "கறுப்பா! கன்று காலிகள் வயிறார மேய்ந்தனவா?'' என்று வினவினான். அதற்கு அவன் "ஐயா! கறுப்பா என்று தாங்கள் என்னைக் கூப்பிடும்போது எனக்கு அவமானமாக இருக்கிறது. கறுப்பண்ணா என்று அழைக்கலாகாதா?'' என்றனன். யஜமானன் "தம்பி வரவர முற்றுகிறானே! இதன் காரணத்தை விரைவில் கண்டு அறியவேண்டும்,'' என்று எண்ணி அன்றும் சும்மா இருந்துவிட்டான்.

அதற்கடுத்த நாளும் கறுப்பன் வழக்கம் போல் கன்று காலிகளை மேய்த்துப் பாறையின் அடியில் தான் வைத்த புதையல் பத்திரமாக இருக்கக்கண்டு, களிப்புடன் வீட்டிற்குத்

திரும்பினான். "பையன் இன்று எந்த அளவில் நிற்கிறான் என்று அறியவேண்டும்" எனக் கறுப்பன் வருகையை எதிர்நோக்கி இருந்த யஜமானன் அவனைப் பார்த்துக் "கறுப்பண்ணு! இங்கே வா," என்று அழைத்தான். அப்பொழுது சிறுவன், "ஐயா! கறுப்பண்ணப் பிள்ளை என்று கூப்பிடலாகாதா?" என்றான். யஜமானன் "சரி, இளைஞன் முற்றிவிட்டான்! இனிச் சும்மாயிருத்தல் கூடாது; பையனின் ஏற்றத்திற்கு உரிய காரணத்தை உடனே ஆராய்ந்து அறியவேண்டும்," என்று எண்ணினான்.

மறுதினம் மாலைப் பொழுதில் யஜமானன் மேய்காலுக்குச் சென்று ஓரிடத்தில் ஒளிந்து கொண்டிருந்தான். கறுப்பன் கல்லைப் புரட்டிப் பார்த்ததையும், களிப்பினால் சீழ்க்கையடித்ததையும் அவன் கண்டான். கறுப்பன் சென்றபின், யஜமானன்

அந்த இடத்தை அடைந்து, அக் கல்லைப் புரட்டிப் பார்த்தான்; அங்கிருந்த புதையலைக் கண்டு, "ஓகோ! இது அல்லவோ கறுப்பனை ஆட்டி வைக்கிறது!" என்று சந்தேகம் தெளிந்தான். பிறகு அவன் புதையலை எடுத்துக்கொண்டு, கல்லை முன்போலவே வைத்துவிட்டு இல்லம் ஏகினன்.

கன்று காலிகளுடன் வீட்டுக்குத் திரும்பிய கறுப்பண்ணப் பிள்ளை, அன்று இரவு உண்ணும்போது தனக்கு உணவு அளித்த யஜமானியைப் பார்த்து, "அம்மா! கப்பரையில் சோறு தின்ன எனக்கு மனங்கொள்ளவில்லை; வாழையிலை இட்டுப் பரிமாறுங்கள்," என்றான். யஜமானி ஆச்சரியமடைந்து தன் கணவனிடம் நிகழ்ந்ததை உரைத்தாள்.

மறுநாட் காலையில் வழக்கப்படி கன்று காலிகளை மேய்க்கச் சென்ற கருப்பண்ணப் பிள்ளை மாலையில் மந்தகாசத்துடன் சென்று கல்லைப் புரட்டிப் பார்த்தான்; அங்குப் புதையல் இல்லாமை அவனைத் தூக்கி வாரிப்போட்டு விட்டது. அவன் என்ன செய்வான் பாவம்! ஏக்கம் மேலிட அறிவிழந்து, நடைப்பிணமாய் மெல்லமெல்லக் கன்றுகாலிகளை ஓட்டிக்கொண்டு வீடுவந்து சேர்ந்தான். அன்றிரவு சிறுவன்

சாப்பிட உட்காரும்போது யஜமானன் அவனை நோக்கி, "ஸ்ரீமான் கறுப்பண்ணப் பிள்ளை அவர்களே! இன்று தாங்கள் அமுதுசெய்ய வெள்ளித் தட்டு ஒன்றைப் புதிதாக வாங்கி வந்திருக்கிறேன்; எழுந்தருள்க!" என்றான்.

அதுகேட்டதும், கறுப்பண்ணனுக்கு முகம் சுண்டிப்போய்விட்டது. துக்கம் மேலிட்ட அவன் மிகத் தாழ்ந்த குரலில், "ஐயா! எனக்கு எதற்காக இந்த மரியாதைகள் செய்யவேண்டும்! என்னை கறுப்பா என்றே அழையுங்கள். நான் பழய கறுப்பனே கறுப்பன்," என்று கூறினான்.

யஜமானன் அந்தக் கறுப்பனுக்கு நற்புத்தி புகட்டி அவன் பெரியவனானபின் அப்புதையலை அவனுக்கே அளித்து, அவனை நல்ல நிலைமைக்குக் கொண்டுவந்தான்.

அரும்பத உரை :—காலிகள் - மாடுகள்; கரட்டில் - கொல்லைநிலத்தில்; பிணங்குகின்றானே - மாறுபடுகின்றானே; சீழ்க்கை - நாவின் நுனியைக் கோலி (வளைத்து) ஊதும் ஒருவகை ஒலி (Whistle); அமுதுசெய்ய - சோறு உண்ண.

வினா :—1. கறுப்பன் கருவமடையக் காரணம் என்ன?

2. "கறுப்பன் சிறிது முகத்தைச் சுளித்து" என்பது எந்தச் சந்தர்ப்பத்தில் வந்திருக்கிறது?

3. யஜமானன் கறுப்பனது ஏற்றத்தின் காரணத்தை எவ்வாறு கண்டுபிடித்தான்?

4. இப்பாடத்தால் நீங்கள் அறிந்துகொள்ளுவது என்ன?

6. சகோதர வாஞ்சை—II

அங்கம் 1. காட்சி 2.

இடம்: மயானம்.

காலம்: முற்பகல்.

பாத்திரங்கள்: பரதன், சத்துருக்கன், கோசலை, அனுமான்.

பர: ராம்! ராம்! ராம்! (தீயை வலம் வருகிறான்; கோசலை ஓடிவருகிறாள்; பரதன் அவளை அடிபணியக் கோசலை வாரி எடுத்துத் தழுவிக்கொள்ளுகிறாள்.)

கோசலை: மைந்த! என்ன காரியம் செய்யத் துணிந்தனை. இதுவரை நடந்த காரியங்கள் யாவும் விதியின் விளைவு! விதியை வெல்ல வல்லவர் யார்? நீ தீப் பாய்ந்தால் என்ன நேரிடும் என்று அறிவாயா? நாட்டினர் யாவரும் இறப்பர்; தரும தேவதையும் உயிர் துறப்பாள்; வானவரும் மரித்து விடுவர். கோடி இராமர்கள் சேரினும் ஒரு பரதன் ஆவரோ? ஏ! பரத! இராமன் சொன்னசொல் தவறான்; இன்று வர வில்லை யெனில், நாளை வருவது நிச்சயம். அது வரையில் பொறு. உன் செய்கையை எவரும் ஒப்பார்.

பர: அன்னாய்! மாதாவின் கட்டளையை மறுக்கிறான் என்று எண்ணாதீர். நம் குலத்தின் பெருமை அளவிடற்கு அரியது. அதற்குப் பழுது வரலாமா? நான் முன் செய்த சபதத்தை நிறைவேற்றாவிடில், நம் குலப் பெயர் மாசு உறும் அன்றோ? தம் வாக்கை நிலைநிறுத்த தம் உயிரைக் கொடுத்தவர் தசரதர். அவர் மைந்தன் அல்லனோ யான்? தாய்சொற் கேட்டல், தந்தை சொற் கேட்டல் என்பனவெல்லாம் இராமரோடு நிற்கட்டும்! மனத்துக்கண் மாசு இலேன் என்பதை நிலை நிறுத்துவது ஒன்றே என் கடமையாம். அதற்காக நான் தீக்குளித்தல் திண்ணம். நீங்கள் என்னைத் தடுக்காதீர்கள். (தீயை மீண்டும் வலம் வருகிறான்.)

கோசலை: ஏ! பரத! பரத!

அனுமான்: (விரைந்து வந்து) திரும்பி விட்டார் இராகவர்; இரகு குல திலகர் வந்து விட்டார். தங்கள் உயிர் போய்விடின் இராமரது ஆவி நிற்குமோ? என்ன காரியம் செய்யத் துணிந்தீர்: (தீயை அணைக்கிறார்.)

பர: (பிரமித்து நின்று) நீ யார்? என்ன பிதற்றுகிறாய்?

அனு : (கை குவித்து) நாயேன் இரகுகுல திலகன் அடிமை! என் பெயர் அனுமன். ஆரியர் இன்னும் நாற்பது நாழிகையில் இங்கு வந்து விடுவார். தவறினால், நான் இவ் வெரியில் மூழ்கி மாள்வேன். இராகவர் பரத்துவாசர் ஆச்சிரமத்தில் தங்கி இருக்கிறார். அவர் கொடுத்த அடையாளம் இதோ இருக்கின்றது; பெற்றுக் கொள் ளுங்கள். (ஒரு மோதிரத்தைக் கொடுக்கிறார்.)

பர : (மோதிரத்தைக் கண்களில் ஒற்றிக் கொண்டு கூத்தாடுகிறான்.) வந்து விட்டாரா என் அண்ணா! அன்பர்காள்! இராகவர் மீண்டார்; ஓடிச் சென்று எதிர் கொள் ளுங்கள்; இராம நாமத்தை யாவரும் உரக்கச் சொல்லுங்கள். (பரிசனத்தை நோக்கி) நீங்கள் ஏன் சும்மா நிற்கிறீர்கள்? நற்செய்தி கொணர்ந்த இத் தூதனுக்கு மாலை சூட்டுங்கள். ஏ! இராம தூதா! இங்கு வா; என்னைத் தழுவிக் கொள்; இராமனைப் பற்றிய விவரங்கள் அனைத்தை யும் எடுத்துக்கூறு. அம்மா! தம்பீ! வாருங்கள்; இரகுநந்தருடைய க்ஷேமத்தை விசாரித்து அறிவோம்.

(யாவரும் செல்கின்றனர்.)

அங்கம் 1. காட்சி 3

இடம்: கங்கைக்கரை.

காலம்: பிற்பகல்.

பாத்திரங்கள்: பரதன், சத்துருக்கன், கோசலை, அனுமன், இராமன்.

பர: அனும! இராமரை இன்னும் காணேனே! என் மனத்தில் ஒரு சந்தேகம் தோன்று கிறது. எழுபது வெள்ளம் சேனையுடன் இராகவர் பரத்துவாசர் ஆச்சிரமத்தில் இருக்கிறாரென்று நீ கூறினாய். ஆச்சிரமம் இங்கிருந்து இரண்டு காத தூரமே உள்ளது; ஆகையால், சேனையின் ஆர வாரம் இங்குக் கேட்கவேண்டுமே!

அனு: எந்தாய்! சந்தேகம் வேண்டாம். முனிவர் தம் தவபலத்தால் தேவாமிர்தம் வரவழைத்து வானர சேனைக்கு வழங்கினார் போலும்! வானரங்கள் மதுவை அருந்தி மயக்கம் உற்று இருக்கலாம்! என் இறைவர் இப்பொழுதே இங்கு வருவார்; கவலை ஒழியுங்கள்.

கோசலை: மைந்த! அதோ பார் தென் திசையில்! மேகம் ஒன்று நகர்வதுபோல் தோன்றுகிறது. உன் முன்னவன் வரும் புட்பகமோ அது?

பர : அன்னையே ! ஆம், ஆம். அதோ வருகிறது என் உயிர் ! உடலே பதருதே ! (கை கூப்புகிறான்.)

இராமன் : (விமானத்திலிருந்து இறங்கிக் கைகேயியை நோக்கி) "அம்மையே! அடிபணிகின்றேன்;" (சுமித்திரையை, கோசலையை நோக்கி) "தாயே ! நமஸ்கரிக்கின்றேன்."

தாய்மார் : குழந்தாய் ! உன்னை இன்றே மீண்டும் பெற்றெடுத்தோம்.

பர : அண்ணா ! அண்ணா ! (பாதங்களில் வீழ்ந்து மூர்ச்சிக்கிறான்.)

இராமன் : ஹே ! பரத ! சகோதரோத்தம ! (வாரி அணைத்துக்கொள்ளுகிறார்.) யாது செய்ய நினைத்தனை நீ ? இவ்வளவு பதட்டம் உனக்கு ஆகாது ? நான் முடி புனைந்தால் தான் உன் பரிதவிப்பு நீங்குமோ ? புறப்படுவோம் யாவரும்; அயோத்திக்குச் செல்வோம். (செல்கின்றனர்.)

அரும்பத உரை :—வாஞ்சை - விருப்பம் ; வானவர் - தேவர் ; பழுது - குற்றம் ; பாதுகை - மிதி அடி, பாதரட்சை ; மும்மூர்த்திகள் - பிர்மா, விஷ்ணு, ருத்திரன் ; குறுகிலர் - வந்திலர் ; அபசாரம் - தவறு ; ஆரியர் - இராமர் ; மாசு - குற்றம் ; இரகு குலதிலகர் - இராமர் ; பரிசனத்தை - அரசாங்க

உத்தியோகஸ்தரை; முன்னவன் - தமையன்; புட்பகம் - தாமரை மலர்போல் வடிவமுள்ளதோர் ஆகாய விமானம்.

வினா:—1. இராமர் எத்தனை வருடம் வனவாசம் செய்தார்?

2. பரதன் தீப்பாய்தலைத் தடுத்தற்பொருட்டுக் கூறிய காரணங்கள் யாவை?

3. பரதன் இராமரது வருகையை அனுமனால் அறிந்தபோது சொன்னது என்ன?

இலக்கணக் குறிப்பு:—1. "விதியைவெல்ல வல்லவர் யார்?" இதில் வினாவை உணர்த்துவது எது? 2. "பெருமை" இதற்கு எதிர்மொழி "சிறுமை" 3. "தீக்குளித்தல்." இதனை விரித்துக் கூறுக.

---

7. நன் முத்து

ஆழ்ந்த கடலின் அடியினிலே
அழகு மிகுந்த சிறுமுத்து
தாழ்ந்த சிப்பி தன்வயிற்றில்
தனியே கிடந்து மனம்நொந்தே,

'ஆழ்ந்த கடலில் என்னுடனே
அழகோ டுதித்த முத்தெல்லாம்
சூழ்ந்த மன்னர் சபையின்கண்
துலங்கும் செல்வர் தோள்சேர்ந்தே:

தன்னந் தனியே நான்மட்டும்
    தாழ்ந்து கடலில் கிடந்தேனே !
என்னைமட்டும் ஏன் கொள்ளார் ?
    எனக்கும் அவைபோல் அழகிலையோ ?'
என்ன எண்ணி அழுதந்த
    எளிய சிப்பி தன்வயிற்றில்
சின்ன முத்து நாள்தோறும்
    சிணுங்கி வளர்ந்து வந்ததுவே !

முடிவில் ஒருநாள் முத்தேடுப்போர்
    முதிர்ந்த சிப்பி தனைஎடுத்துக்
கடிதில் திறந்த வுடன்கண்டார்
    கண்ணைப் பறிக்கும் நன்முத்தை.
வடிவில் மிகுந்த அம்முத்தை
    மன்னன் தனக்கே கொண்டேனே
முடிமேல் விளங்க வைத்தானே !
    முத்தும் களித்து விளங்கியதே !

சிறிய வயதில் சிறுவரெல்லாம்
    சிறந்த குணங்கள் நிரம்பிவர
அறிவில் வளர்ந்து முதிர்ந்துவந்தால்
    அழகு முத்தைப் போலிருப்பார் ;
செறியு மிருளில் தியங்குகின்ற
    செல்வத் தாய்நா டெங்கணுமே
அறிவின் ஒளியை விரித்திடுவார் !
    அடிமைத் தனத்தை அகற்றுவரே !

8. மார்க்கண்டன்

முன் ஒரு காலத்தில் மிருகண்டு என்ற ஒரு முனிவர் இருந்தார். நற்குணங்கள் எல்லாம் நிறைந்த மருத்துவதி என்னும் மங்கையை அவர் மணம் புரிந்து இல்லறம் நடத்தி வந்தார். ஒரு நாள் மிருகண்டு முனிவர் தம் ஆச்சிரமத்தில் இல்லாதபோது முனிவர் சிலர்

வந்தனர். மருத்துவதி அம்மையார் அவர்களை உபசரித்து, அமுது செய்தருளும்படி வேண்டினர். ஆனால், முனிவர்கள் "மகப் பேறு அற்றவர் வீட்டில் உண்பது மாபாவம்," என்று கூறி மறுத்துச் சென்றனர்.

அதனுல், மருத்துவதி அம்மையார் அடைந்த துயரத்திற்கு அளவேயில்லை. கணவர் இல்லம் வந்ததும், அம்மையார் அவரிடம் நடந்தவற்றைக் கூறினர். அவ் விருவரும் பல விரதங்களை மேற்கொண்டனர் ; கடைசியில் சிவ பெருமான், முனிவர் தியானத்தில் தோன்றி, "அன்ப! கவலை ஒழிக ; யாம் உனக்குப் புத்திரப் பேறு அருளுவோம். உனக்குத்தீய ஒழுக்கமும் தீர்க்க ஆயுளும் வாய்ந்த புதல்வர் நூற்றுவர் வேண்டுமா? அல்லது, குணசீலனும், பதினுறே பிராயம் வாழ்பவனுமான உத்தமப் புதல்வன் ஒருவன் வேண்டுமா?" என்றனர். மிருகண்டு முனிவர், "கருணை வள்ளால்! தம்மை என்றும் தன் அகத்தில் வைத்துப் பூசிக்க வல்ல உத்தமன் ஒருவனையே எனக்கு அருள் வீர்," என்று கூறிப் பணிந்தார். கைலைநாதனும் "அவ்வாறே ஆகுக!" என்று திருவாய்மலர்ந் தருளி மறைந்தனர்.

மருத்துவதி அம்மையாருக்கு ஈசன் அருளால் ஒரு ஆண் மகவு பிறந்தது. பெற்ருேர் அவனுக்கு நாராயணன் என்று பெயரிட்டனர். அவன் மிருகண்டுவின் ஒரே அருமைப் புதல்வனுக இருந்தமையால், யாவரும் அவனை மார்க்கண்டன் என்று செல்வப் பெயரால்

அழைக்கலாயினர். அவனும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தான்.

மார்க்கண்டனுக்கு ஐந்தாம் வயதில் உபநயனம் செய்விக்கப்பட்டது. அது முதற்கொண்டு அவன் தன் தந்தையுடன் இருந்து கலை பலவற்றையும் ஐயந்திரிபறக் கற்றுத் தேர்ந்தான். தந்தைக்கு வேண்டிய பணிவிடை புரிதல், சிவபூசை செய்தல் முதலிய காரியங்களிலேயே அவன் நாட்டம் கொண்டான்; இதனைக் கண்டு அவன் பெற்றோர் உள்ளம் பூரித்தனர். மார்க்கண்டன் பதினறும் வயதில் இறந்து விடுவானே என்ற எண்ணத்தையும் அவர்கள் ஒருவாறு மறந்திருந்தனர்.

பாலனுக்குப் பதினைந்தாம் பிராயம் நடக்கையில், மருத்துவதிக்கு ஈசன் அளித்த வரம் ஞாபகத்திற்கு வந்தது. அவ் வம்மையார் மிகவும் வருந்தித் தம் கவலையை நாதரிடம் தெரிவித்தார். மிருகண்டுவும் யாது செய்வது என்று தோன்றமல் திகைத்து நின்றார்.

பெற்றோர் வதனம் வாடி இருப்பதைக் கண்ட மார்க்கண்டன் அவர்கள் அடிகளில் பணிந்து, 'உங்கள் முகவாட்டத்திற்குக் காரணம் யாது?' என வினவினன். வரத்தின் வரலாற்றை

அவர்கள் கூற, பாலகன் "நீங்கள் இவ்வாறு வருந்துவதால் வருவது யாது? நான் ஈசனைக் குறித்துத் தவம் புரிவேன்; அவர் எனக்கு அருள் புரிவார்; நீங்கள் கவலைவிட்டிருங்கள்," என்று கூறி, அவர்களைத் தேற்றினான்.

உடனே மார்க்கண்டன் பெற்றோரிடம் விடைபெற்று, சிவஸ்தலங்கள் பலவற்றையும் தரிசித்துக்கொண்டே வந்து, கடைசியாகத் திருக்கடையூரை அடைந்தான்; அங்குத் திருக்கோயில் கொண்டுள்ள சிவலிங்கத்தின் முன் பணிவாக இருந்து, முன்னையினும் பன் மடங்கு ஊக்கத்துடன் சிவபூசை செய்து வந்தான்; ஊணையும், உறக்கத்தையும் அறவே விட்டு, எந்நேரமும் நிஷ்டையிலேயே இருந்தான். இவ்வாறிருந்த மார்க்கண்டனைக் கண்டோர்யாவரும் "என்னே இவன் உறுதி!" என்று வியந்தனர்.

மார்க்கண்டனுக்கு இறைவன் அளித்திருந்த வாழ்நாளும் முடிவடைந்தது. காலன் கடாமீது ஏறி, பாலகன் உயிரைக்கவர வந்தான். அவன் மைந்தனை நோக்கி, "குழந்தாய்! ஈசன் உனக்கு அளித்த ஆயுள் இன்றுடன் முடிந்தது; இப்பொழுதே என்னுடன் வருக," என்று அழைத்தான். அது கேட்ட மார்க்

கண்டன் "யான் சிவ பூசையில் ஆழ்ந்து உள்ளேன். எனக்கு உன்னுடன் வருவது முடியாது," என்று கூறினன். காலன் "குமரா! விதி வலிது; மீளுவது உனக்கு முடியாது; என் உலகிற்கு வந்துவிடு; மறு பிறவியில் சிவ பூசையை மீண்டும் தொடங்கிச் செய்யலாம்," என்றனன். ஆனல், மார்க்கண்டனே "யான் விதியின் குமரன் அல்லன்; ஈசனது குமரன்; பூசனைபுரிய இப் பிறவியே எனக்குப் போது மானது; என்னைத் தொந்தரவு செய்யாதே," என்று கூறி, மீண்டும் தியானத்தில் ஆழ்ந்தான்.

அதனல் காலனுக்குக் கோபம் பொங்கி எழுந்தது; உடனே தன் பாசக்கயிற்றைப் பாலன் மீது வீசினன்; அதற்குள் மார்க்கண்டன், "ஈசா! நீயே எனக்குத் துணை!" என்று அலறிக் கொண்டே சிவலிங்கத்தை இறுகத் தழுவிக் கொண்டான்.

காலன் எறிந்த கயிறு இலிங்கத்தையும் மார்க்கண்டனையும் ஒருங்கே பிணித்தது. இயமன் கயிற்றைப் பிடித்துப் பலமாக இழுத்தான். உடனே சிவபெருமான் இலிங் கத்தினின்றும் தோன்றி இயமனைத் தன் சூலத்தால் குத்தி வீழ்த்தினர். பிறகு அவர் மார்க்கண்டனை நோக்கி, "சிறுவ! மெச்சினேன்

உன் பத்தியை! நீ என்றும் பதினறு வயதினனுக வாழக்கடவாய்!" என்று ஆசீர்வதித்து மறைந்தார். மார்க்கண்டன் கடவுளைப் பலவாறு போற்றித் தோத்திரஞ் செய்தான். பின்னர், அவன் தன் பெற்ருேரிடம் சென்று, ஈசனின் அருள் திறத்தை எடுத்துக் கூறினுன்; அதனுல், தாய் தந்தையர் பேரானந்தம் அடைந்தனர்.

அரும்பத உரை :—மகப்பேறு - புத்திரபாக்கியம்; தியானம் - கடவுளை இடைவிடாது நினைத்தல்; கைலைநாதன் - சிவபெருமான்; ஐயந்திரிபற - சந்தேகம், விபரீதம் நீங்க; வதனம் - முகம்; உறக்கத்தையும் - நித்திரையையும்; பிணித்தது - கட்டியது.

வினு :—1. சிவபெருமான் மிருகண்டு முனிவர் தியானத்தில் தோன்றி யாது கூறினுர்? அதற்கு மிருகண்டு அளித்த விடை என்ன?

2. "விதி வலிது; மீளுவது உனக்கு முடியாது" இவ்வார்த்தைகள் யாருக்கு யாரால் எந்தச் சமயத்தில் சொல்லப்பட்டன?

3. இப்பாடத்தால் நீங்கள் கற்றுக்கொள்ளுவது என்ன?

இலக்கணக் குறிப்பு :—'இல்லறம்' இதற்கு எதிர்மொழி யாது? 'அவன், அம்மையார், அவ்வாறு, இவன், இல்லறம், உங்கள்,' இவ்வார்த்தைகளுள் உள்ள சுட்டெழுத்துக்களை எழுதுக. 'எல்லாம், என்னே, யாது, வேண்டுமா, யாம்,' இவ்வார்த்தைகளிலுள்ள வினுவெழுத்துக்களை எழுதுக.

9. நம் நாடு

1. விண்ணை யிடிக்கும் இமய மலையுடன்
கண்ணைக் கவரும் கடல் சூழ்ந்த
நன்னதிகள்பல ஓடி வரும்புகழ்
மன்னிய இந்தியா நம் நாடு.

2. கங்கை யுடன்உயர் கோதா வரிகிருஷ்ணை
காவேரி ஸிந்து நதியோடும்
பல்வளங்களுக் கிருப்பிடமாம் அது
பாரத நாடது நம் நாடு

3 பாவலர் வாழ்ந்த பெருநாடு வெகு
காவல ராண்ட நம் தாய் நாடு—படை
வீரர்கள் தோன்றிய திந்நாடு பெருஞ்
சூரர் மிகுந்தது மிந்நாடு.

4. வாணிபம் நிறைந்த தாய் நாடு புகழ்ச்
சேணியர் தோன்றிய திந்நாடு—பெரும்
சிற்பிகள் வாழ்ந்தது மிந்நாடு கவி
கற்பனைக் கேற்பது மிந்நாடு.

5. முனிவர்கள் வாழ்ந்த முதல்நாடு—உயர்
மூவருதித்த பெருநாடு—கோடைக்
கர்ணன் பிறந்தது மிந்நாடு புகழ்க்
கம்ப னிருந்தது மிந்நாடு.

6. நன்மை மிகுந்தது மிந்நாடு—அயல்
நாட்டினர் வந்தது மிந்நாடு—நிலை
ஆங்கிலர் கொண்டது மிந்நாடு—நிலை
ஆட்சி சிறப்பது மிந்நாடு.

10. விநோதச் செடிகள்

உலகத்திலுள்ள ஜீவராசிகள் உயிர் வாழ அவற்றிற்கு உணவு இன்றியமையாததாம். மனிதர்கள் ஓடியாடித் தமக்கு வேண்டிய உணவைச் சம்பாதிக்கிறார்கள். மிருகங்களும் பறவைகளும் மற்றப் பூச்சி முதலியனவும் அவ்விதமே செய்கின்றன. ஆனால், தாவரங்கள் இடம்விட்டுப் பெயர முடியாமையால், இருந்த இடத்திலிருந்தே வேர்கள் வழியாகப் பூமியிலிருந்து தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களைப் பெறுகின்றன.

மனிதரில் சிலர் சுத்த ஆகாரமே உட்கொள்ளுவர்; பெரும்பான்மையோர் ஊனும் உண்பார்கள். அதுபோலவே, மிருகங்களிலும் ஆடு, மாடு, மான், குதிரை, ஒட்டை, யானை, குரங்கு முதலியன சுத்த ஆகாரத்தையே உண்ணும்; பூனை, நாய், கரடி முதலியன சுத்த ஆகாரத்துடன் மாமிசமும் புசிக்கும்; புலி, சிங்கம் முதலிய மிருகங்களோ மாமிசமே தின்னும். இவைபோல, செடிகளிலும் சில ஊனே உட்கொள்ளும் என்று அறிய நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். கடவுள் படைப்பில் நாம் அறியாத அற்புதங்கள் பல உள; அவற்றுள், சில

விநோதச் செடிகளின் உற்பப்பின் அமைப்பு, தன்மை என்னும் இவற்றைப் பற்றிய விவரங்களை இப் பாடத்தில் அறியலாம்.

இத்தகைய செடிகள் வட அமெரிக்காவிலுள்ள காலிபோர்னியா, புளோரிடா, கனடா நாடுகளிலும், தென் அமெரிக்காவில் பிரேசில் நாட்டிலுள்ள கரோலினு என்னும் இடத்தின் சுற்றுப் பக்கங்களிலும், கிரேட் பிரட்டனிலும், கிழக்கு இந்தியத் தீவுகளிலும், இலங்கையிலும், நமது நாட்டில் திருவாங்கூரிலும் விசேஷமாய்க் காணப்படுகின்றன.

இவ் விநோதச் செடிகள் மூன்று வகையாக வகுக்கப்படும். அவையாவன:—(1) பூச்சிகள் தம்மை அடைந்ததும் அவற்றை உட்படுத்தி உண்ணும் செடிகள் ஒரு வகையாம்; (2) இயற்கையாகப் பூச்சிகள் வந்து உட்கார்ந்ததும் தம்மீதுள்ள பசையில் ஒட்டிக்கொள்ள அவற்றை உண்ணும் செடிகள் மற்றொரு வகையாம்; (3) பூச்சிகள் அருகில் வரும்போது தாமே அவற்றைப் பிடித்து உண்ணும் செடிகள் வேறொரு வகையாம்.

முதல் வகை :— மேற்கூறிய கிழக்கு இந்தியத் தீவுகளில் ஒரு வகைச் செடி உண்டு. ஆங்கில பாஷையில் இதற்குப் பிச்சர் பிளான்ட்

(Pitcher Plant) என்று பெயராம். இவ்விதச் செடியில் சிறியதும் பெரியதுமாக இருவகை யுண்டு. இதன் இலைகளின் நுனியிலிருந்து நிமிர்த்திவைத்த குடம் போன்ற ஒரு உறுப்புத் தொங்குகிறது. இவ்வுறுப்பின் வாயில் மூடி போன்ற ஒரு பகுதியிருக்கும். குடம் போன்ற இவ்வுறுப்பின் அளவும் செடியின் அளவிற்குத் தக்கவாறு இருக்கும். இவ்வுறுப்புப் பெரிதாய் இருக்குமாயின், பெரிய பறவைகளையும் அகப்படுத்திவிடும். இதன் வாய்ப் புறத்தில் தேனும், உட்புறத்தில் விஷத்திரவமும் அமைந்திருக்கின்றன. பூச்சிகளும் சிறு பறவைகளும் தேனை அருந்த வாயினுள்ளே புகுந்ததும், இவ்வுறுப்பின் மூடிபோன்ற பாகம் இறுக மூடிக் கொள்ளும்; அதனல், உட்சென்ற பிராணிகள் வெளியே வருதல் முடியாது, குடத்தின் உட்புறத்திலுள்ள விஷத்திரவத்தில் விழுந்து மாயும். பிறகு, அவை திரவத்தில் கரைந்து செடிக்கு

உணவு ஆகும். இவ்வுணவு ஜீரணம் ஆனதும் முன்போல் வாயினது மூடி திறந்து கொள்ளும்.

இரண்டாம் வகை:—முற்கூறிய காலி போர்னியா நாட்டில் டார்லிங்டோனியா (Darlingtonia) என்னும் ஒரு வகைச் செடியுண்டு. இதன் இலையும், இலையின் காம்பும் குழாய்போல் நீண்டிருக்கும். ஒவ்வொரு இலைக் காம்பின் நுனியிலும் கண்ணாடிபோல் பளபளப்பு வாய்ந்த ஒரு உறுப்பு, கொண்டை போன்று இருக்கும். இதன் அடியில் தேன் கசியும்; இவ்விலையின் நரம்புகள் சிவப்பு, ஊதா முதலிய நிறம் பொருந்தி மிகப் பகட்டாயிருக்கும். இவற்றின் அழகைக் கண்டு மயங்கி வரும் பூச்சிகள் அக் கொண்டையின் அடியில் கசியும் தேனை அருந்தி, அருந்தியவாறே இலையின் அடிப் புறத்திலுள்ள துவாரத்தின் வழியே குழாய் போன்ற தண்டிற்குள் நுழைந்து செல்லும். இவ்வாறு உட்சென்ற பூச்சிகள் வெளியே வர வழி தெரியாமல் தடுமாறி, கொண்டையின் உச்சியை நோக்கிப் பறந்து,

டார்லிங்டோனியா செடி

முட்டி முட்டிப் பார்க்கும்; எவ்வளவு முயன்றும் வெளிவர முடியாமல் கடைசியாகச் சோர்ந்து, தண்டின் அடியிலுள்ள திரவத்தில் விழுந்து மாயும். பிறகு அவை திரவத்தில் கரைந்து செடிக்கு உணவு ஆகும்.



சன்டியூ செடி



முள்ளுகள் குவிந்திருத்தல்



முள்ளுகள் விரிந்திருத்தல்

மூன்றும் வகை :—இது கிரேட் பிரட்டனிலுள்ள ஒருவகைச் செடி. இதன் பெயர் சன்டியூ (Sundew). இச்செடி தரை மட்டத்திற் படிந்து இருக்கும். இதன் இலைகள் ரோஜா மலரின் இதழ்கள்போலச் செந்நிற முடையன. இச் செடியில் இருவகை யுண்டு; இவற்றுள், ஒன்றின் இலை நீண்டிருக்கும்; மற்றொன்றின் இலை வட்ட மாயிருக்கும். இலையின் மேற்பக்கத்தில் மயிர் போன்ற முட்கள் நிரம்பியிருக்கும். இம்முட்கள் இலையின் ஓரத்தில் நீண்டும், நடுவில் வரவரக்

குறுகியுமிருக்கும். இவற்றின் நுனியிலிருந்து வேண்டும்போது பசையுள்ள ஒரு விதத்தைலம் கசியும். இச்செடிக்கருகே பூச்சிகள் வருமானால், இதன் இலைகள் அசைந்தாட ஆரம்பிக்கும். அது சமயம் பூச்சிகள் இம் முட்களிற் பட்டு, பசையில் ஒட்டிக்கொள்ளும்; உடனே இலை சுருண்டு கொள்ளும்; பூச்சிகள் முட்களால் குத்துண்டு சாகும். இலையிலிருந்து வெளிவரும் திரவத்தில் இப் பூச்சிகளின் உறுப்புக்கள் கரைந்து செடிக்கு உணவாகின்றன. செடி உணவை உட்கொண்டதும், இலை விரிந்து விடும். செடிகளில் இது விநோதமான தல்லவா?

அரும்பத உரை:—இன்றியமையாததாம் - அவச்யமான தாம்; தாவரங்கள் - மரம், செடி, கொடி முதலி யவை; மாயும் - சாகும்.

வினா:—1. விநோதச்செடிகள் எத்தனை வகைப்படும்?

2. அவற்றுள் மிக விநோதமானது எது? ஏன்? காலிபொர்னியா என்பது எங்கே இருக்கி றது? அது யாது?

இலக்கணக் குறிப்பு:—பெயர்ச்சொல் அறுவகைப்படும்: மனிதர்கள், பறவைகள்—பொருட்பெயர், உலகு, பூமி—இடப்பெயர்; வருஷம், மாதம்—காலப் பெயர்; நுனி, வாய்—சினைப்பெயர்; சிவப்பு, ஊதா, —குணப்பெயர்; படைப்பு, வருதல்—தொழிற்பெயர்.

11. ஸர். டி. முத்துசாமி ஐயர்

தஞ்சைஜில்லா தமிழகத்தின் நெற்களஞ்சியம் ஆகும்; மேலும், அது பல மேதாவிகள் பிறந்த இடமுமாம். அங்கே உச்சுவாடி என ஒரு சிறுகிராமம் உண்டு. அக் கிராமத்திலே வெகு காலத்துக்கு முன் வேங்கட நாராயண சாஸ்திரி என்று ஒருவர் இருந்தார். அவருக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தனர்; அவ்விருவரில் இளையவர் பெயர் முத்துசாமி.

பிள்ளைகளிருவரும் சிறுவராக இருந்த பொழுதே, தாயார் பரமபதம் அடைந்தார். தந்தைக்கோ ஆஸ்தி என்பது சிறிதும் கிடையாது; அதனால், குடும்பம் தத்தளிக்கலாயிற்று. தந்தையார் தமது குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு திருவாரூர்க்குச் சென்றார். அங்கே சிறுவர்கள் இருவரும் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்து வந்தனர்.

இதற்கு இடையில் தந்தையாரும் காலமானார். சிறுவர் இருவரும் அநாதை ஆயினர். அவர்களின் சாப்பாட்டிற்கோ வகை ஒன்றும் இல்லை. பிரபுக்களின் வீட்டில் அவர்கள் இருவரும் வாரச் சாப்பாடு சாப்பிட்டு வந்தனர். சிறிது எழுதப் படிக்கத் தெரிந்ததும், ஒரு கணக்கனிடம் முத்துசாமி ஐயர் வேலைக்கு

அமர்ந்தார். அவருக்கு மாதச் சம்பளம் ரூபாய் ஒன்றுதான்.

அந்நாளில் முத்துசாமி நாய்க்கர் என்பவர் திருவாரூரிலே தாசில்தாரராக இருந்தார். ஒரு நாள் அயல் கிராமம் ஒன்றில் வெள்ளப் பாழ் ஏற்பட்டது. கச்சேரிக்குச் சென்று ஒரு குமாஸ்தாவை அழைத்து வரும்படி அவர் சேவகனை ஏவினார். அன்று விடுமுறை நாளான தினால், ஒருவரும் கச்சேரிக்கு வரவில்லை. தெய்வச் செயலாக அங்கு வந்த முத்துசாமி ஐயரை அச் சேவகன் அழைத்துச் சென்றான்.

முத்துசாமி ஐயரை அத் தாசில்தார் முன்னதாகவே அறிவார்; ஆதலின், "வெள்ளப் பாழைப் பார்த்து வாரும்," என்று ஐயருக்குக் கட்டளையிட்டார். அவ்விதமே ஐயர் சென்று எல்லாவற்றையும் திட்டமாக அறிந்து கொண்டார்; பின்பு உடைப்பை அடைப்பதற்கு இவ்வளவு செலவு ஆகும் என்று ஒரு குறிப்பும் எழுதிக்கொண்டு வந்தார். "பையன் கணக்குப் பயன் படாது," என்று முதலில் தாசில்தார் நினைத்தார்; மறு நாள் அவர் ஒரு குமாஸ் தாவை அனுப்பி, உடைப்பைப் பார்த்துவரச் சொன்னார். குமாஸ்தாவின் குறிப்பினும் பைய னது குறிப்பே மிகவும் சரியாக இருந்தது.



அதன்மேல் முத்துசாமி ஐயரின் அறிவைக்கண்ட நாய்க்கருக்கு ஆச்சரியம் உண்டாயிற்று; அவர் மீது அன்பும் பிறந்தது. மற்ரெருநாள் பிரபு ஒருவர் வந்து தாசில்தாரருடன் பேசிக்கொண்டிருந்தார். அப்பிரபுவுக்குப் பல கிராமங்களில் நிலங்கள் இருந்தன. அவர் தாம் செலுத்தவேண்டிய மொத்த நிலத்தீர்வை எவ்வளவு என்று தாசில்தாரைக் கேட்டார். தாசில்தாரோ பக்கத்தில் இருந்த ஐயரைக் குறிப்பாக நோக்கினர். உடனே முத்துசாமி ஐயர் அதனை மனக் கணக்கினுல் மதித்து, இவ்வளவு என்று தெரிவித்தார். அவர் கணக்குப் புத்தகங்களுடன் ஒத்துப்பார்க்கையில் ஐயர் கூறியது சரியாக இருந்தது.

உடனே தாசில்தாரின் உதவியால், நாகை நகரிலே ஒரு பாடசாலையில் சேர்ந்து முத்துசாமி ஐயர் ஆங்கிலம் படிக்கலானுர். இரவிலே படிக்க அவரிடம் விளக்கு இல்லை; அதனுல், அவர் வீதி விளக்கிலே படித்து வந்தார். பின்பு ஐயர் சென்னைக்கு வந்து, அங்கே அரசாங்கப் பாடசாலையில் சேர்ந்து வாசித்தார். ஐயரின் ஊக்கத்தையும் உயர்குணத்தையும் கண்ட தலைமை ஆசிரியருக்கு அவர்மீது பரிவு பிறந்தது. அவரும் ஐயருக்கு உதவி புரிய முற்பட்டார்.

"துர்வழக்கங்களை ஒழிக்கும் வழி" என்பதைப் பற்றி ஒரு சிறந்த வியாசம் எழுதும் மாணவருக்குப் பரிசு தரப்படும் என்று ஓர் ஏற்பாடு ஆயிற்று. அதுபற்றி மாணவர்பலர் கட்டுரை வரைந்து கொடுத்தனர். அவற்றுள், ஐயரின் வியாசமே மிகவும் சிறப்பாக இருந்தது; அதனால், அவருக்கு ஐந்நூறு ரூபாய்ப் பரிசு கிடைத்தது. பின்பு அவர் பி.ஏ. பரீட்சையில் முதன்மையாகத் தேறினார்; உடனே அக்கலாசாலையில் அவருக்கு ஓர் உபாத்தியாயர் வேலை கிடைத்தது. அதன்பின் தஞ்சைக் கலெக்டராபீசில் அவர் ஒரு குமாஸ்தாவாக வேலை பார்த்து வந்தார். சில நாள் ஆனதும், கல்வியிலாகா இன்ஸ்பெக்டர் வேலை அவருக்குக் கிடைத்தது.

அப்பால், ஐயர் சட்டப் பரீட்சையில் முதலாவதாகத் தேறினார்; உடனே தரங்கம்பாடியில் ஜில்லா முனிசீப்பாக அரசாங்கத்தார் அவரை நியமித்தனர். அப்போது பிரபல வழக்கறிஞராக இருந்த புரூஸ் நார்ட்டன் என்பவர் ஐயரின் புத்திக் கூர்மையைக் கண்டு பெரிதும் வியந்தார். பின்பு தென் கன்னடம் ஜில்லா சப்ஜட்ஜ் வேலை ஐயருக்குக் கிடைத்தது.

அந்த வேலையில் அவர் திறமை விளங்கவே, சென்னை மாஜிஸ்டிரேட்டாக அவர் மாற்றப்

பட்டார். அரசாங்கத்தார் இந்த வேலையிலும் ஐயரின் திறமையைக் கண்டு வியப்படைந்தனர். அதனால், சென்னை மாகாணத்துக்கே உயர்ந்த நீதிஸ்தலமாயுள்ள ஹைகோர்ட்டில் ஒரு ஜட்ஜ் ஆக அவர் நியமிக்கப்பட்டார். சிறிது காலம், ஜட்ஜிகளின் தலைவராகவும் அவர் இருந்தார். அந்த நாளிலே எந்த இந்தியருக்கும் அந்த உயர்தரப் பதவி கிடைத்ததில்லை. ஐயர் வகித்த பதவிகளில் எல்லாம் அவரது சிறந்த மதிவன்மையும் திறமையும் பிரகாசித்தன. அதனால், அவரைப் பலரும் புகழ்ந்து பேசினர்.

பிறைச் சந்திரன் வளர்வதுபோல், ஐயரின் பதவியும் புகழும் வளர்ந்து வந்தன. அரசாங்கத்தார் அவருக்கு "ஸர்" என்னும் பட்டம் வழங்கினர். 'கூரை வீட்டிலே ஏழைக் குடும்பத்திலே பிறந்த ஐயர் தமது சாமர்த்தியத்தால் எவரும் புகழ்ந்து பேசுதற்குரிய பெரும்பதவி பெற்றார்' என ஜனங்கள் பலர் அவரைக் கொண்டாடினர். உத்தியோகம் உயர உயர, அவர் குணங்களும் உயர்ந்துவந்தன. அன்பும் அடக்கமும் பணிவும் பொறுமையும் அவரிடம் குடிகொண்டிருந்தன. பெரிய உத்தியோகம் கிடைத்த பொழுதும், மேன்மேலும் படித்து வருவதை அவர் கைவிடாது இருந்தார்.

"பாடை ஏறினும் ஏடு கைவிடேல்" என்பது ஒருயர்ந்த பழமொழி அல்லவா?

முத்துசாமி ஐயர் 1895-ம் ஆண்டில் பரகதியடைந்தார். அவருடைய ஞாபகத்தின் பொருட்டுச் சென்னை ஹைகோர்ட்டில் அவரைப்போல் சலவைக்கல்லால் ஓர் உருவம் செய்து வைக்கப்பட்டிருக்கிறது. "முயற்சி திருவினையாக்கும்" என்னும் திருவள்ளுவர் பழமொழியை ஐயரது சரித்திரம் நன்கு விளக்கும்.

அரும்பத உரை:—தமிழகம் - தமிழ் வழங்கும் நாடு; மேதாவி - நல்லறிவு உடையவர்; ஆஸ்தி - பொருள்; திட்டமாக - அளவாக; நாகை - நாகப்பட்டினம்; திருவினை - செல்வத்தை.

வினா:—1. முத்துசாமி ஐயரின் புத்தி கூர்மையை, தாசில்தார் எப்படி அறிந்தார்? அதனால் இவரவர்கள் அடைந்த பயனென்ன?

2. இவர் வகித்தப் பதவிகளை முறையே கூறுக.

3. ஐயரது குணாதிசயங்களை சுருக்கமாக எழுதுக.

இலக்கணக் குறிப்பு:—திணை, பால், எண்: மேதாவிகள், தாயார்—உயர்திணை; கிராமம், சம்பளம்—அஃறிணை. சேவகன்—ஆண்பால்; இலக்குமி—பெண்பால்; ஜனங்கள்—பலர்பால்; அது—ஒன்றன்பால்; நிலங்கள்—பலவின்பால். இந்த ஐந்துபால்களுள் ஆண்பாலும், பெண்பாலும், ஒன்றன்பாலும் ஒருமையாம். பலர்பாலும், பலவின்பாலும் பன்மையாம்.

12. சமயோசித புத்தி

பல நூற்றுண்டுகளுக்கு முன் நமது தேசம் முகம்மதியருடைய ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. அப்போது வங்காள மாகாணத்தில் ஒரு நவாபு அரசாட்சி செய்து வந்தார். அவருடைய மந்திரி சிறந்த படிப்பும், புத்தி கூர்மையும் வாய்ந்தவன் ; பெரியோர் நிறைந்த பெருங் கூட்டத்திலும் அதிவிரைவில் சமயத்துக்கு ஏற்ற விடையளிக்க வல்லவன். அதனுல், நவாபின் கௌரவமும் கீர்த்தியும் நாடெங்கும் பரவலாயின ; அம் மந்திரியின் மேன்மையும் பரவலாயிற்று.

இவ்வாறு வங்காளம் சீரும் சிறப்பும் பெற்று விளங்குங்காலத்தில், ஒரு நாள் டில்லிப் பாட்சாவின் கொலுமண்டபத்தில் ஒருவன் அம் மந்திரியின் சாமர்த்தியத்தைப் புகழ்ந்து பேசினுன் ; அப்போது அங்கிருந்த சபையோரும், சக்கரவர்த்தியும் விசேஷ வியப்பும் களிப்பும் எய்தினர். ஆனுல், சக்கரவர்த்தியின் அருகில் வீற்றிருந்த அவருடைய குருவுக்கு இச்செய்தி மிக்க மனக்கொதிப்பை உண்டாக்கியது. அவர், இவர்களால் கொண்டாடப்படும் அம் மந்திரியை அவமானப் படுத்து

வதே சரி என்று தீர்மானித்தார்; உடனே சக்கரவர்த்தியை நோக்கி "அவ்வாறு புகழ் பெற்று விளங்கும் அம் மந்திரியைப் பார்த்து வர எனக்கு அவா இருக்கின்றது; அதற்கு அனுமதி தரவேண்டும்," என்று சொல்லி விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டார்.

பாட்சாவினது குருவின் வருகையை யறிந்த நவாபு தமது நகரத்தைச் சிறப்பாக அலங்கரித்து விருதுகளோடு அவரை எதிர் சென்று அழைத்தார்; பிறகு நகர்வலம் வந்து தக்க ஆசனத்தில் இருக்கவைத்து, முறைப்படி அவருக்கு மரியாதைகளையெல்லாம் செய்து, தாமும் அவர் பக்கத்தில் உட்கார்ந்தார்; மந்திரிகளும், பிரபுக்களும், மற்றுமுள்ள அதிகாரிகளும் முறையே அவர்களைச் சூழ்ந்து நின்றனர்.

அப்போது குரு நவாபினுடைய பிரசித்தி பெற்ற மந்திரியை நோக்கி, "ஐயா! உங்களுடைய புத்தி கூர்மையையும் சொல் வன்மையையும் பற்றி நான் மிகவும் கேள்வி யுற்றிருக்கிறேன்; நீங்கள், ஒருவர் உள்ளத்தி லுள்ள எண்ணத்தை உள்ளது உள்ளபடி குறிப்பால் அறிந்து கூற வல்லவரென்றும் பலர் என்னிடத்துக் கூறி யிருக்கின்றனர். எனக்கு அதை நேரிற்கேட்டு களிப்புற வேண்டு

மென்னும் அவா இருக்கின்றது. நல்லது! "இப்போது நான் என் மனத்தில் என்ன எண்ணிக் கொண்டிருக்கின்றேன்? அதைச் சொல்லுங்கள், பார்ப்போம்!" என்ருர். குருவின் மோசக் கருத்தை எளிதில் அறிந்துகொண்ட அம் மந்திரி, அதற்குத் தக்க விடையளித்து அவர் வாயை அடைக்க வேண்டுமென்று நினைத்து, "சுவாமி! நல் வரவேற்று உரிய உபசரணைகளையும் தங்களுக்குச் செய்த எங்களுடைய நவாபுக்கு எல்லாவித பாக்கியங்களும் பெருகவேண்டித் தாங்கள் கடவுளை இப்போது பிரார்த்திக்கின்றீர்கள்; இது அல்லவா உங்கள் எண்ணம்?" என்று குரு வாய் மூடாமுன் சொல்லி முடித்தான்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட குரு திகைத்து, எமது எண்ணம் அதுவல்ல வென்று கூற மாட்டாதவராய், "நீர் புத்தியில் பிரகஸ்பதியே! நான் எண்ணியதை உள்ளபடி உரைத்து விட்டீர்," என்று கூறி, மீண்டும் மந்திரியை நோக்கி, "நான் இப்போது என்ன எண்ணுகிறேன்? சொல்லுங்கள்," என்ருர். அதற்கு மந்திரி, "அரசர்க்கு அடுத்த படியில், இருப்பவர் குடிகளானபடியால், தாங்கள் அவர்களுடைய க்ஷேமத்தைக் குறித்து கடவுளைப் பிரார்த்திக்

கின்றீர்கள் ; தங்களது நினைப்பு அதுதானே?" என்று விரைவிற் கூறினான். அப்போதும் அவர் மந்திரியின் வார்த்தையை மறுக்க மாட்டாமல், "ஆம்" என்று ஒத்துக்கொண்டு, "இவ்வாறு இந்த இரண்டு கேள்விகளுக்கும் மந்திரி தந்திரமாகப் பதிலளித்துத் தப்பித்துக் கொண்டான். இனிமேல் என்ன சொல்லுவான்? நிச்சயமாய் இந்தத் தடவை ஒன்றும் சொல்லத் தோன்றாமல் விழிப்பான்," என்று தமக்குள் ஆலோசித்து, "உம்முடைய புத்தி நுட்பத்தை மிகவும் மெச்சுகின்றேன். உமது விடையைக் கேட்கக் கேட்க எனக்கு ஆனந்த முண்டாகின்றது. ஆயினும், இந்தத் தடவை என் மனத்திலுள்ளது யாது? சொல்லுங்கள்," என்று திரும்பவும் கேட்டார்.

மூன்றாந் தடவையும் மந்திரி அஞ்சாமல், குருவை நோக்கி, "ஐயனே! எங்கள் நவாபு இவ்வளவு புகழ்பெற்றிருப்பதற்கும், நாடெங்கும் குடிகள் குறைவின்றி வாழ்வதற்கும், எங்கள் இராணியின் கற்பே காரணமாகும் என்பது தங்களுடைய தீர்மானம்; அல்லவா? நான் சொல்லுவதில் பிழையிருந்தால் சொல்லுங்கள்" என்றான். "இந்தத் தடவையும் நமது எண்ணம் பலிக்கவில்லை ; இது என்னுடைய தீர்மானம்

அல்ல என்றால், உடனே நவாபு நமது தலையை வாங்கி விடுவான். பெரிய தர்ம சங்கடத்தில் அல்லவா அகப்பட்டுக்கொண்டோம்! கௌரவமாய் ஊர் போய்ச்சேர வேண்டுமானால் 'ஆம்,' என்று ஒத்துக் கொள்ளுவதே நலம்," என்று தமக்குள் தீர்மானித்து, மந்திரியைப் பார்த்து, "ஐயா! மந்திரி என்றால் உங்களைப் போல் அல்லவா இருக்கவேண்டும்? நீரும், உமது பெற்றோரும் நவாபும், அவரது குடிகளும், ஆண்டவன் அருளால் நீடூழி வாழ்க!" என்று ஆசி கூறினர்; பிறகு சில நாட்கள் அங்கேயே தங்கியிருந்து நவாபினிடம் விடை பெற்றுக் கொண்டு டில்லிக்குத் திரும்பினர்.

அரும்பத உரை :—வாய்ந்தவன் - பொருந்தியவன், உடையவன்; கொலுமண்டபம் - உல்லாச வீற்றிருப்பு மண்டபம்; எய்தினர் - அடைந்தனர்; அவா - ஆசை; திகைத்து - பிரமித்து; பிரகஸ்பதி - தேவ குரு, மஹாபுத்திமான்.

வினா :—1. வங்காள நவாபின் கீர்த்திக்குக் காரணம் என்ன?

2. நவாபின் மந்திரியைப்பற்றி டில்லிப் பாட்சாவின் கொலு மண்டபத்தில் நடந்த வரலாற்றைக் கூறுக.

3. பாட்சாவினது குருவின் மூன்றாவது கேள்விக்கு மந்திரி அளித்த விடை யாது?

இலக்கணக் குறிப்பு :—இடம்: பேசுவோனைக் குறிக்குஞ் சொல் நிற்குமிடம் தன்மை இடம்; கேட்போனைக்

குறிக்குஞ் சொல் நிற்குமிடம் முன்னிலை இடம்; மற்றப் பொருள்களைக் குறிக்கும் எல்லாச்சொற்களும் நிற்குமிடம் படர்க்கை இடம். "ஐயனே! எங்கள் நவாபு இவ்வளவு புகழ்பெற்றிருப்பதற்கும், நாடெங்கும் குடிகள் குறைவின்றி வாழ்வதற்கும், எங்கள் இராணியின் கற்பே காரணமாகும் என்பது தங்களுடைய தீர்மானம் அல்லவா? நான் சொல்லுவதில் பிழையிருந்தால் சொல்லுங்கள்" என்றான். இந்த வாக்கியத்திலுள்ள தன்மை, முன்னிலை, படர்க்கை இடங்களைக் கூறுக.

---

13. செல்வத்தின் சிறப்பு

பொருளுள்ள பேர்களுக் கருளுண்டு புகழுண்டு
புண்யவச மிகவுமுண்டு
பூதலத் தவரெலாம் கண்டவுட னேதொழுது
பூபதி குபேர னென்பார்
திருகோன் றிலாதமதி யுண்டுதிற னுண்டுமெய்த்
தேசிகர்தம் அருளு முண்டு
தீங்கியற் றினுநன்மை யென்பார்கள் பெருமையும்
தீரமொடு வீர முண்டாம்
அருளுண்டு பந்துஜன வுறவுண்டு நண்பினர்க
ளானோர்க ளுண்டு நிதமும்
அவர்முகந் தன்னிலழ குண்டுகளை யுண்டுநல்
லானந்த பூர்த்தி யுண்டு
கருணைசெய் தன்பர்கட் கழியாத நிதியுதவு
கற்பக விராச வேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே.

[கயிலாசநாதர் சதகம்.]

14. தியாகராச சுவாமிகள்

நமது தமிழ் நாட்டில் பிரசித்தி பெற்று விளங்கும் சிவத் தலங்களில் ஒன்றும் திருவாரூர். இது தஞ்சை ஜில்லாவில் மாயவரம் என்னும் மாயூரம் நாகப்பட்டினம் ரயில் பாதையிலுள்ளது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தங்கியிருந்த தலம் இதுவேயாம். இவ் வூரில் சுமார் 150 வருடங்களுக்கு முன் இராமப்பிரமம் என்னும் ஓர் ஏழைப் பிராமணர் இருந்தார். இவர் தமது தாய்ப் பாஷையாகிய தெலுங்கு மொழியில் விசேஷப் பயிற்சியும் இசை பாடுவதில் அதிகப் பழக்கமும் உள்ளவர்; கடவுளிடத்து மிகுந்த பத்தி உடையவர். இவர் பத்தினியின் பெயர் சாந்தை. இவ் வம்மையார் கற்பிற் சிறந்தவர். இவர்கள் இருவரும் இல்லற தர்மத்தை இனிது நடத்தி வரும் நாளில் இவர்களுக்கு இரண்டு மைந்தர் பிறந்தனர்; இவ் விருவரில் தியாகராசர் இளையவர். தந்தையாகிய இராமப்பிரமம் இரண்டு மைந்தருக்கும் கல்வி கற்பித்துவந்தனர்; அவருள் இளையவராகிய திராகராசரே கல்வியிற் சிறந்து விளங்கினர். தியாகராசர் இளம் பருவத்திலிருந்தே தாய் மொழியிற் பற்றும், இசை பாடுவதில்

விருப்பமும், கடவுளிடத்து இடைவிடாப் பத்தியும் உடையவராக இருந்தனர்.

இராமப்பிரமம் திருவாரூரில் சில காலம் இருந்து, பிறகு தஞ்சாவூரை அடுத்த திருவையாறு என்னும் சிவத் தலத்திற்குக் குடும்பத்துடன் வந்திருந்தார்; தாம் ஏழைக் குடும்பியாயிருந்தும், பொருள் தேடுவதில் ஊக்கமின்றி இறைவனிடத்தில் பற்றுடையவராயிருந்தார்; பசியைத் தீர்ப்பதற்கு வேண்டிய அளவு பிச்சையெடுத்து வருவார். இவருடைய பத்தியின் பெருமையைக்கண்டு அனைவரும் இப் பெரியார் மீது பிரீதி கொண்டனர். தஞ்சை மன்னன் இராமப்பிரமத்தின் பெருமையைக் கேள்வியுற்று, இவரை வரவழைத்து, வீடு ஒன்றை இவருக்கு இனமாகக் கொடுத்தான். இவர் அவ் வீட்டிலிருந்து வழக்கம்போல் காலங் கழித்து வந்தார். மைந்தரிருவருக்கும் மணம் செய்வதற்கு உரிய காலம் வந்ததும், இராமப்பிரமம் அவ் விருவருக்கும் மணம் முடித்து வைத்தார்.

தியாகராாசர் பூர்வதவப் பயனாலும், பெரியோர் வம்சத்தில் பிறந்தமையாலும், தந்தையாகிய இராமப்பிரமத்தின் தெய்வ ஆராதனைக்கு உரிய பணிவிடைகளைச் சிரத்தை

யுடன் செய்து வந்தார்; அதனால், இவர் சிறு வயதிலிருந்தே பத்தியிற்சிறந்து விளங்கினர். இவர் இசை பாடுவதில் அதிக விருப்ப முடையவரா யிருந்தமையால், அக் காலத்தில் சங்கீதத்தில் வித்வானென விளங்கிய வேங்கட ரமணதாசர் என்பவரை ஆசிரியராக அடைந்த னர்; வெகு சீக்கிரத்தில், ராகம் தாளம் இரண்டி லும் தேர்ச்சி யடைந்து சிறந்த பண்டிதர் ஆனார். பின்னர்ச் சில ஆண்டு கழிந்தபின் அம் மைந்தர்களின் தாய்தந்தையர் இருவரும் முன் பின்னாகப் பரகதி யடைந்தனர்.

இவரும் தந்தையாகிய இராமப்பிரமத் தைப் போல உலகப் பற்று இல்லாதவராய் இருந்தார்; தம் மனைவியாருடன் ஒருமனப்பட்டு இராமபிரான்மீது தாம் இயற்றிய பல கீர்த்தனை களை உருக்கமாகப் பாடிக் காலங்கழித்து வருவாராயினர். இவர் இவ்வாறு இருக்கை யில், காஞ்சிமா நகரத்தில் இருந்த அந்தணப் பெரியார் ஒருவர் இவருக்கு இராமமந்திரத்தை உபதேசித்தார். தியாகராசர் இம் மந்திரத்தை இடைவிடாது ஜபிப்பார்; அதனோடு நில்லாது இராமரின் மீது நவநவமாகக் கீர்த்தனைகளும் செய்து பாடுவார். இவையன்றி இவருக்கு வேறு வேலையில்லை. இவர் பசி வந்தபோது தெருவில்

இராம சங்கீர்த்தனங்களை மெய்ம்மறந்து பாடிக் கொண்டு சென்று அன்றைக்கு வேண்டிய அளவு பிச்சை எடுத்து வருவார். தியாக ராசரின் பத்திப் பெருமையைக் கண்ட அநேகர் அரிசியுடன் காசுகளைக் கலந்து பிச்சை யிடுவது வழக்கம். தியாகராசர் பிச்சை யெடுத்து வந்த அரிசியில் காசுகள் இருப்பதை இவர் மனைவியார் கண்டு, அவ் வரிசியை முறத்தி லிட்டுக் கொழித்து, காசுகளைப் பிரித்து வெளியில் போட்டு விடுவாராம்! பாருங்கள்!! இவ் வம்மையாரின் வைராக்கியத்தை நாம் என்ன வென்று சொல்வது!!!

தியாகராசர் செய்துள்ள கீர்த்தனங்கள் எல்லாம் விசேஷமாய் இராமபிரானைப் பற்றியே இருக்கும்; இருப்பினும், சிவனிடம் இவருக்கு வெறுப்புக் கிடையாது. இவர் பாடல்களெல் லாம் பத்திரசம் பொருந்தியனவாக இருக்கும்; கேட்போர் மனத்தை உருகச் செய்யும் தெய் வீகத் தன்மை உடையனவாம். ஒருசமயம் தியாகராசர் இராமபஜனை செய்துகொண்டி ருக்கும்பொழுது நாரத மகாமுனிவர் ஒரு துறவி வேடம்பூண்டு வந்து, இவருடைய கீர்த்தனங் களைக் கேட்டு மகிழ்ந்து, "சங்கீத ரத்நாகரம்" என்னும் ஓர் அரிய நூலை இவரிடம் கொடுத்து

மறைந்தனர், என்றும் பெரியோர் கூறு கின்றனர். இவரது பத்தியில் நாட்டங்கொண்ட இராமபிரான், சீதை அனுமான் இலக்குமண னுடன் இவருக்குக் காட்சியளித்தார் என்றும் சொல்லப்படுகின்றது.

தென்னுட்டில் தியாகராசருக்கு மிஞ்சிய பத்தரும், பாடகரும் இவர் காலத்தில் இல்லை யென்றே சொல்லலாம். இவர் பாடல்களெல் லாம் "தியாகராஜ" என்றே முடிவு பெறும். இதைக் கொண்டு இவருடைய கீர்த்தனைகளைத் தியாகராச கீர்த்தனைகள் என்று எளிதில் அறிந்து கொள்ளலாம். இவரிடத்தில் ஜனங் கள் தாம் கொண்ட மரியாதையை விளக்க இவரை இவர் பெயரால் சொல்லாது "ஐய ரவர்கள்" என்று கௌரவமாகச் சொல்வது வழக்கம். இன்றைக்கும் தியாகராசர் கீர்த் தனையை "ஐயரவர்கள் கீர்த்தனம்" என்று சொல்லக் கேட்கலாம்.

ஒருசமயம் ஐயரவர்கள், திருவேங்கடம், திருவள்ளூர் முதலிய தலங்களைத் தரிசித்து விட்டு ஊருக்குத் திரும்பும்பொழுது கள்வர் சிலர் வந்து, இவர் பொருளைப் பறிக்க எண்ணினர். அப்பொழுது அவர்கள் கண் ணிற்கு முன்னும் பின்னும் இரண்டு வீரர்கள்

வில்லுங் கையுமாய்க் காவல் புரிந்து ஐயரவர் களோடு செல்வது தோன்றிற்று; இவ்வாறே இரவு முழுவதும் அவர்களுக்குத் தோன்றி வந்த அவ் வீரர்கள் விடிந்ததும் மறைந்தனர். அது கண்ட கள்வர்கள் ஐயரவர்களை வணங்கி நின்று, தாங்கள் கண்டதைச் சொன்னார்கள். தியாகராசர் அவ்வீரர் இருவரும் இராம இலக்கு மணர் என்று கருதிப் பரவசமடைந்தனர். அக் கள்வர்களும் ஐயரவர்களுக்குச் சீடர் ஆனார்கள் என ஒரு கதையும் உண்டு. இவர் ஒரு சமயம் இறந்த ஒருவரைப் பிழைக்கச் செய்தாரென்ற ஒரு கதையும் உண்டு. இவ்விதம் இவருடைய தெய் வத் தன்மையைக் குறிக்கும் கதைகள் பலவாம்.

இவ்வாறு ஐயரவர்கள் பூலோக நாரதராய் நீண்ட காலம் விளங்கினர். தாம் பூவுலகை விட்டு நீங்கும் காலத்தை முன்னரே அறிந்த தியாகராசர் தமது சீடர்களுக்கு அதை அறி வித்தார். இச் செய்தி எங்கும் பரவியபடியால், அது சமயம் ஆயிரக் கணக்கான அடியார்களும் பெரியோர்களும் இவருள்ள இடத்தில் வந்து கூடினர்; வேத பாராயணமும் இராமநாம சங் கீர்த்தனங்களும் முழங்கின; குறித்த காலம் வந் ததும், ஐயரவர்களின் ஆன்மா உடம்பை விட்டு இறைவன் திருவடி சேர்ந்தது. பத்தர்

அனைவரும் கூடி இவருடைய திருமேனியைத் திருவையாற்றிலே காவிரி நதிக்கரையில் அடக்கம் செய்தனர். அந்த இடத்திலே இப்பொழுது ஆலயம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. வருடந்தோறும் தியாகராசர் பரகதி அடைந்த தினத்தன்று இவரது பத்தர் அனைவருங்கூடி வெகு விமரிசையாகத் திருவிழா நடத்தி வருகின்றனர்.

அரும்பத உரை :—இசை - சங்கீதம் ; பணிவிடை - இட்ட வேலை ; உருக்கமாய் - (மனம்) உருகும் தன்மையாய் ; வைராக்கியம் - பகை, வெறுப்பு, ஆசையற்றிருத்தல் ; திருமேனி - திவ்வியதேகம்.

வினா :—தியாகராசரின் தந்தையைப்பற்றி உனக்குத் தெரிந்ததை சுருக்கமாய்ச் கூறுக.

2. சாந்தை அம்மையின் மேன்மை எதனால் விளங்குகிறது ?

3. தியாகராசர் தலயாத்திரைசெய்து திரும்பும் போது என்ன நடந்தது ?

இலக்கணக் குறிப்பு :—வேற்றுமை என்பது பெயர்ச் சொல்லின் பொருளை வேறுபடுத்துவது ; வேற்றுமை எட்டு ; அவை : முதல், இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம், ஆறாம், ஏழாம், எட்டாம் வேற்றுமை என்பன. இவற்றுள் முதல்வேற்றுமையும், எட்டாம் வேற்றுமையும் உருபு இல்லாத வேற்றுமைகள்.

இராமப்பிரமம்	முதல் வேற்.	வீட்டிலிருந்து	5-ம் வேற்.
தஞ்சாவூரை	2-ம் வேற்.	இவருடைய	6-ம் வேற்.
அவரோடு	3-ம் வேற்.	திருவாரூரில்	7-ம் வேற்.
சிவத்தலத்திற்கு	4-ம் வேற்.	சுவாமீ !	8-ம் வேற்.

15. சாரணச் சிறுவர்

பாடசாலை மாணவரில் சிலர் பச்சை நிறமான தலைப்பாகையும், காக்கி நிறமான உடற் சட்டையும் காற் சட்டையும் அணிந்து கொண்டு, கையில் நீண்ட மூங்கிற் தடியுடன் ஜனங்கள் விசேஷமாய்க் கூடும் திருவிழாக்களிலும், பொதுஜனக் கூட்டங்களிலும், சமூகச் சேவை செய்து கொண்டிருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். இவர்களுக்கு "வாலிபச் சாரணர்" என்று பெயராம். ஆங்கிலத்தில் இவர்கள் பாய் ஸ்கௌட்ஸ் (Boy Scouts) என்று அழைக்கப்படுவர். ஸ்கௌட் என்னும் மொழி வட அமெரிக்காவில் வசிக்கும் செவ்விந்தியர் (Red Indians) பாஷையைச் சேர்ந்தது. இவர்கள் சிறந்த சாரணராவர். இவர்களுக்கு ஸ்கௌட் என்னும் பெயர் ஏற்பட்டிருக்கின்றது. அதனால், வாலிபச் சாரணர்கள் ஸ்கௌட்ஸ் என்று அழைக்கப்படுகின்றனர். இளைஞரான வாலிபச் சாரணர்களுக்கு கப்ஸ் (Cubs) என்று பெயர்.

இந்த வாலிபச் சாரண இயக்கம் முதல் முதல் இங்கிலாந்தில் ஸர் ராபர்ட் பேடன் பவல் என்னும் ஆங்கில தளகர்த்தர் ஒருவரால் 1908-ஆம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்டது. இந்த

இயக்கத்தில் எவரும் சேரலாம்; ஏழு வயதிற்கு மேல் பதினெரு வயதிற்குட்பட்ட சாரணர்கள் கப்ஸ் என்றும், பதினெரு வயதிற்குமேல் பதினெட்டு வயது வரையிலுள்ள சாரணர்கள் ஸ்கௌட்ஸ் என்றும், பதினெட்டு வயதிற்கு மேற்பட்டவர்கள் ரோவர்ஸ் (Rovers) என்றும் அழைக்கப்படுவர்.

வாலிபச் சாரணரில் (Scouts) நான்கு வகுப்பு உண்டு. அந் நான்கும் வருமாறு:— (1) மூன்றும் வகுப்பினர் (இளம்பாதர்), (2) இரண்டாம் வகுப்பினர், (3) முதல் வகுப்பினர்; (4) அரசரது சாரணர். கடைசித் தரமான மூன்றும் வகுப்புச் சாரணர் ஆவதற்கு விரும்பும் வாலிபன்,

(1) நான் இயன்ற வரையில் கடவுளுக்கும், அரசனுக்கும், தாய்நாட்டிற்கும் என் கடமையைச் செலுத்துவேன்;

(2) நான் எப்போதும் இயன்றவரையில் பிறருக்கு உதவிபுரியத் தயாராயிருப்பேன்;

(3) சாரணச் சட்டத்திற்கு முற்றும் அடங்கி நடப்பேன்;

என்று தனது கௌரவத்தின் மேல் ஆணையிட்டு வாக்குத்தத்தம் செய்ய வேண்டும்;

இதற்கு அறிகுறியாகத் தன் கைச்சிறு விரலின் மீது கட்டை விரலை வைத்து மற்ற மூன்று விரல்களால் சலாம் செய்ய வேண்டும். இவ்விதம் ஒரு வாலிபன் சாரணர் படையைச் சேர்ந்த பின் ஒவ்வொரு வகுப்பிற்கும் உரிய பரீட்சையில் தேறி, மேல் வகுப்பிற்குப் போகலாம். முதல் மூன்று வகுப்பினரும்

பொது ஜனங்களுக்குத்தொண்டு செய்பவ்ராவர்; அரசர் சாரணர் பொது ஜனங்களுக்குத் துணை புரிவதோடு அரசர்க்கும் உதவி செய்பவராவர்.

ஸர் ராபர்ட் பேடன் பவல் என்பவரே இவ்வாலிபச் சாரணர் இயக்கத்திற்குத் தலைவரும், முக்கியச் சாரணருமாவர். இவருக்கு உதவியாக ஒரு பெரிய காரிய நிர்வாக சபையுண்டு. இச்சபையின் நிர்வாகத்திற்கு உட்பட்டுத் தேச கமிஷனர், மாகாணக் கமிஷனர், ஜில்லாக் கமிஷனர் எனப் படிப்படியாகத் தலைவர்களிருக்கிறார்கள். ஒவ்வொரு ஜில்லாக் கமிஷனரின்

தலைமைக்குக் கீழ்ப்பட்டு, பல சாரணப் படைகள் இருக்கின்றன. ஒவ்வொரு படையும் பல அணிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது; ஒவ்வொரு அணிக்கும் தலைவர் ஒருவரும் துணைத் தலைவர் ஒருவரும் உண்டு. ஒவ்வொரு ஊரிலுமுள்ள ஒவ்வொரு சாரணப் படையும் ஒவ்வொரு பெயரால் அழைக்கப்படும். ஒவ்வொரு அணியிலுமுள்ள சாரண வாலிபர்கள் ஒன்று முதலாக இலக்கமிட்டு முறையே அழைக்கப்படுவார்கள். ஒவ்வொரு அணிக்கும் ஒரு மிருகத்தின் பெயரை அல்லது ஒரு பறவையின் பெயரை வைத்து அதனைக் கூப்பிடுவது வழக்கம். சாரணத் தலைவர் எந்த அணியையேனும் அழைத்தால், அந்த அணியின் சாரணச் சிறுவர்கள் அந்த அணிக்கு இடப்பட்ட பெயருள்ள பிராணி எப்படிக் கூவுமோ அப்படிக் கூவிக்கொண்டு வருவார்கள்.

சாரணப் படையைச் சார்ந்த ஒவ்வொரு வாலிபனும் கீழ்க்கண்ட பத்து விதிகளை அனுசரிக்க வேண்டும்: (1) படையில் சேரும் பொழுது செய்த வாக்குத்தத்தப்படி தவறாமல் தன் கடமையைச் செய்ய வேண்டும்; (2) அரசரிடம் பிரீதி உள்ளவனாய், அவரால் குடிகளுக்கு வரும் நன்மைகளைப் பிறருக்குப் போதிக்கவேண்

டும்; (3) பிறருக்கு ஆபத்தில் உதவிபுரிய உபயோகமுள்ளவனும் தயாராயு மிருக்கவேண்டும்; (4) ஜாதிமத பேதமின்றியும், உயர்வு தாழ்வு என்ற வித்தியாச மின்றியும் எல்லாரிடத்தும் சமபுத்தியும் சிநேகமும் உள்ளவனுயிருத்தல் வேண்டும்; (5) எல்லாரிடத்தும் மரியாதையுடன் நடத்தல்வேண்டும்; (6) ஜீவகாருண்யம் உள்ளவனுய் மன்னுயிரைத் தன்னுயிர்போல் பாராட்டல் வேண்டும்; (7) பெற்ருேர், தன் படைத்தலைவர், ஆசிரியர் முதலாயினேருக்கு அடங்கி நடத்தல் வேண்டும்; (8) எவ்விதமான கஷ்டத்திலும் மனக்கலக்கமின்றி முகமலர்ச்சியோடு இருத்தல் வேண்டும்; (9) பொருளை வீணுக்காமல் செட்டாக வைத்திருத்தல் வேண்டும்; (10) மனம், வாக்கு, காயம் (நினைப்பு, பேச்சு, செய்கை) என்ற மூன்று வழியிலும் சுத்தமுள்ளவனுய் இருத்தல் வேண்டும்.

மேற்கூறிய சட்டங்களை ஒருவன் கடைப்பிடித்து ஒழுகுவானுனல், நாளடைவில் நற்குணங்கள் வாய்ந்தவனுய்த் தனது தேசத்திற்குப் பெரிய தொண்டனு யிருப்பான்; தேசமும் அவனுல் நலமடையும்; ஜனங்களும் தமக்குள் வித்தியாசமின்றிச் சகோதர வாஞ்சை யுள்ளவராவார்கள்; அதனுல், ஒற்றுமை விருத்தி

மாகாணச் சாரணப் படைத்தலைவர் கூட்டம்

யடையும்; அதனுடன் தேச நலமும் அபி விர்த்தியடையும். இதுவே சாரணப்படை இயக்கத்தின் முக்கிய நோக்கமாம். ஆகையால், பிள்ளைகள் ஒவ்வொருவரும் இந்த இயக்கத்தில் சேர்ந்து அதன் சட்டப்படி ஒழுகுதல் வேண்டும். இவ்வாறு ஒழுகுதல் ஒவ்வொரு பிள்ளைக்கும் முக்கியக் கடமையாம்.

அரும்பத உரை:—மன்னுயிர் - நிலைபெற்ற பிராணிகள்; காயம் - உடம்பு; அணிக்கும் - வரிசைக்கும்; கடைப் பிடித்து - உறுதியாகக் கொண்டு.

வினா:—1. சாரணர் இயக்கத்தின் வரலாற்றைக் கூறுக.
2. சாரணரில் எத்தனை வகுப்பு? அவை யாவை?
3. சாரணர் அனுசரிக்க வேண்டிய விதிகளில் ஏதாவது நான்கைக் கூறுக.

இலக்கணக் குறிப்பு:—காலத்தைக் காட்டும் சொல் வினைச்சொல்லாம். காலம்: இறந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் என மூன்று வகைப்படும். நடந்த தொழிலைத் தெரிவிப்பது இறந்த காலம்; நடக்கின்ற தொழிலைத் தெரிவிப்பது நிகழ் காலம்; நடக்கும் தொழிலைத் தெரிவிப்பது எதிர் காலம்.

(உ-ம்.) 1. 'செய்த வாக்குத்தத்தம்' இதில் 'செய்த' என்பது இறந்தகால வினைச்சொல்; 2. 'சாரணப்படைகள் இருக்கின்றன' இதில் 'இருக்கின்றன' என்பது நிகழ்கால வினைச்சொல்; 3. 'கூவிக்கொண்டு வருவார்கள்' இதில் 'வருவார்கள்' என்பது எதிர்கால வினைச்சொல்.

16. தீப்பெட்டி

பஞ்ச பூதங்களில் நெருப்பும் ஒன்ருகும். அது நமக்குப் பல வகைகளிலும் உபயோக மாகின்றது. சமையல் செய்யவும், விளக்கு ஏற்றவும், குளிர்ந்த தன்மையுள்ள எப்பொருளை யும் சூடாக்கவும் நெருப்பு நமக்கு இன்றி அமையாததாம். அதன்பொருட்டே உலகத்தில் பலர் அதனைத் தெய்வமாகக் கருதி வழிபடு கின்றனர்.

பண்டைக் காலத்தில் மனிதர் சிக்கிமுக்கி என்னும் ஒருவகைக் கல்லை ஒன்ருே டொன்று தாக்கி, அதனுல் உண்டாகும் நெருப்புப் பொறி களில் பஞ்சைப் பற்றவைத்து, தீயுண்டாக்கினர்; அரணிக் கட்டையால் கடைந்தும் அக்கினியை உண்டாக்கினர். இந்த முறைகளால் மனிதர்க்கு அடிக்கடி நெருப்பை உண்டாக்குவது சிரமமாக இருந்தது; அதனுல், அவர்கள் ஒருமுறை தீயுண்டாக்கி அதைக் கணப்பிலிட்டுப் பத்திரப் படுத்தி, வேண்டும்போது அதிலிருந்து நெருப்பை மூட்டி உபயோகித்து வந்தனர்; பின்னர் நெருப்பு எளிதில் பற்றக்கூடிய ஒரு வகைச் சுளுந்துக் குச்சிகளை மெல்லிய துண்டு களாக்கி, அவற்றின் நுனியைக் கந்தகக் குழம்

பில் தோய்த்து வைத்துக்கொண்டு, அவற்றின் மூலமாய் வேண்டும்போது கணப்பிலிருந்து நெருப்பை எடுத்துக் கொண்டனர். இந்த முறையே தற்காலத்தில் உபயோகித்துவரும் நெருப்புக் குச்சிகள் செய்வதற்கு வழிகாட்டி ஆயிற்று.

நெருப்பு எளிதில் பற்றக்கூடிய ஒருவகை மரம் எல்லா நாடுகளிலும் உண்டு. நமது தேசத்தில் அதற்குத் 'தேவதாரு' எனப் பெயராம். அது நம் நாட்டில், மத்திய மாகாணத்திலே அதிகமாக வளர்கின்றது. நெருப்புக்குச்சி செய்வோர் அம்மரக் கட்டைகளை இயந்திரங்களின் உதவியால் அறுத்து, ஒரே அளவுள்ள சிறு சிறு குச்சிகளாக நறுக்கி வைப்பர்; வஜ்ரம் என்னும் ஒருவகைப் பசைப் பொருளைப் பொடிபண்ணி, ஒரு பாத்திரத்தில் இட்டுத் தண்ணீர் சேர்த்துக் குழம்பாகக் காய்ச்சுவர்; பிறகு, அக்குழம்பில் 'குளோரேட்' என்னும் ஒருவகை உப்பையும், சிறிது கந்தகப் பொடியையும் போட்டுக் கலக்குவார்கள்.

மேலே கூறியபடி செய்யப்பட்ட குழம்பில் 'பாஸ்பரஸ்' (Phosphorus) என்னும் திமிர்ப் பாஷாணமும் சிறிதளவு சேர்க்கப்படும். அதைச் சேர்க்கும்போது மிகவும் ஜாக்கிரதையாக

இருத்தல் வேண்டும்; கையால் அதைத் தொடாமல், கத்தியின் முனையால் மெதுவாக எடுத்துப்போட வேண்டும். ஏனெனில், திடீரென்று தானாகவே தீப் பிடித்துக்கொண்டு அபாயம் விளைக்கும் தன்மை அதற்கு உண்டு.

இயந்திர உதவியால் நறுக்கப்பட்ட சிறு குச்சிகளின் நுனிகளை இக் குழம்பில் சிறிது தோய்த்து எடுத்து வெயிலில் காயவைத்து, காய்ந்தபின், அவற்றை எடுத்து சிறு சிறு பெட்டிகளில் போட்டு, விற்பனைக்கு அனுப்புவது வழக்கம். இக்குச்சிகளைச் சுரசுரப்பான இடத்தில் தேய்த்தால், தீ உண்டாகும்.

நெருப்புக் குச்சியில் சேப்டி மாச் (Safety match) என்று மற்றொருவகை உண்டு. அதன் நுனியில் அபாயகரமான திமிர்ப்பாஷாணம் இராது. இக் குச்சிகளைத் தரையிலோ, கல்லிலோ தேய்த்தால் அவை பற்ரு. இக் குச்சிகள் வைக்கப்பட்டுள்ள பெட்டியின் இருபுறமும் செந்நிறமுள்ள ஒரு விதத் திமிர்ப்பாஷாணம் பூசப்பட்டிருக்கும். அவற்றில் இக் குச்சிகளைத் தேய்த்தால் நெருப்பு உண்டாகும். இம்முறை அபாயகரம் அற்றது. ஆகவே, இதைச் ‘சேப்டி மாச்’ என்று சொல்லுவர். குழந்தைகளும் இதை உபயோகிக்கலாம்.

இவ்வித நெருப்புப் பெட்டிகளே இப்பொழுது மிகுதியாக உபயோகப்படுகின்றன.

ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள நார்வே, ஸ்வீடன் நாடுகளில் செய்யப்படும் நெருப்புப் பெட்டிகளையே நாம் பெரும்பாலும் உபயோகித்து வருகிறோம். ஜப்பான் தேசத்தார் செய்தனுப்பும் நெருப்புப்பெட்டிகளும் நம் நாட்டில் விற்பனை ஆகின்றன. நமது நாட்டிலும் இத்தொழில் சிறிது அளவில் நடைபெற்று வருகிறது. இதை விருத்திசெய்ய வசதிகள் நமது நாட்டில் ஏராளமாக உண்டு. அதனால், இதனை மேல் மேலும் விருத்தி செய்ய முயல்வது நமதுநாடு முன்னேற்றம் அடையும் வழிகளில் ஒன்றாகும்.

அரும்பத உரை :—சுளுந்து - சுள்ளி; பஞ்ச பூதங்கள் - ஐந்து பூதங்கள்; அவை : மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்.

வினா :—1. முன்காலத்தில் மனிதர் எவ்வாறு தீயை உண்டாக்கினர்?

2. நெருப்புக்குச்சிகள் எவ்விதம் செய்யப்படுகின்றன?

3. நெருப்புக்குச்சிகள் எத்தனை வகைப்படும்? அவற்றின் வித்தியாசத்தைக் கூறுக.

4. நெருப்புப் பெட்டிகள் விசேஷமாய் எங்கெந்த நாடுகளில் செய்யப்படுகின்றன?

இலக்கணக் குறிப்பு :—வினைச்சொல்லின் உறுப்புக்கள் ஆறும். அவை : பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை,

சந்தி, விகாரம் எனப்படும். இவற்றுள் முன்னே முக்கியமாய் அறியவேண்டியவை பகுதி, விகுதி, இடைநிலைகளாம்.

(உ - ம்) செய்வான் : செய் + வ் + ஆன். செய் பகுதி ; வ் இடை நிலை ; ஆன் விகுதி. இதில் வ் என்னும் இடைநிலை எதிர்காலத்தை காண்பிக்கின்றது.

வளர்கின்றது : வளர் + கின்று + அ + து. வளர்—பகுதி ; கின்று—இடைநிலை ; அ—சாரியை ; து—விகுதி ; கின்று என்னும் இடைநிலை நிகழ்காலத்தை காண்பிக்கின்றது.

கொண்டனர் : கொள் + ட் + அன் + அர். கொள்—பகுதி ; ட்—இடை நிலை ; அன்—சாரியை ; அர்—விகுதி ; கொள் என்பதிலுள்ள ள், ண் ஆனது சந்தி. ட் என்னும் இடைநிலை இறந்த காலத்தை காண்பிக்கின்றது.

---

17. செய்யத் தக்கவை

"வாலிபந் தனில்வித்தை கற்கவேண்டும், கற்ற
வழியிலே நிற்கவேண்டும் ;
வளைகடல் திரிந்துபொருள் தேடவேண்டும், தேடி
வளர்அறம் செய்யவேண்டும் ;
சீலமுடை யோர்களைச் சேரவேண்டும், பிரிதல்
செய்யா திருக்கவேண்டும் ;
செந்தமிழ்ப் பாடல்பல கொள்ளவேண்டும், கொண்டு
தியாகம் கொடுக்கவேண்டும் ;
ஞாலமிசை பலதருமம் நாட்டவேண்டும், நாட்டி
நன்ருய் நடத்தவேண்டும் ;
நம்பன்இணை யடிபூசை பண்ணவேண்டும், பண்ணி
னுலுமிகு பத்திவேண்டும்."

18. ஸர் ஐஸக் நியூடன்

இங்கிலாந்து தேசத்தில் லிங்கன் ஷைரில் உல்ஸ்தோர்ப் என்னு மிடத்தில் ஐஸக் நியூடன் என்பவர் 1642-ம் வருஷம் டிசம்பர் மாதம் 25வ கிருஸ்துமஸ் தினம் (Christmas Day) அன்று அவதரித்தார். ஐஸக் நியூடன் பிறக்கும் பொழுது மரப்பாச்சிபோல் உடல் மெலிந்து சிறிய அவயவங்களை யுடையவரா யிருந்தார். அவர், பிழைத்திருப்பார் என்று எவருமே எண்ணக் கூடியவராயில்லை. ஆயினும், அவரால் உலகிற்கு அநேகம் நன்மைகள் உண்டாக வேண்டியனவாய் இருந்தபடியால், கடவுள் அவரை நீண்ட காலம் இருக்கச் செய்தாரென்று நாம் நினைத்தல் வேண்டும்.

நியூடன் பிறப்பதற்குச் சிறிதுகாலத்திற்கு முன்பே இவருடைய பிதா காலகதி யடைந்தார். நியூடனுக்கு மூன்றும் வயதில் இவருடைய தாய் மறு விவாகம் செய்துகொண்டு, கணவன் வீட்டிற்குச் சென்று விட்டாள் ; அதனால், இவர் பாட்டியார் இவரை மிக்க கவனத்துடன் வளர்த்து வந்தாள் ; வயது பன்னிரண்டு ஆனதும், கல்வி கற்க இவரைப் பாடசாலைக்கு அனுப்பினாள். இவர் பாடங்களை யெல்லாம்

மிகக் கருத்துடன் படித்து, தம் வகுப்புப் பிள்ளைகளுள் தாமே சிறந்தவராக விளங்கினர்; எப்பொழுதும் கல்வியிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தனர்; தம்மை யொத்த பிள்ளைகள் விளையாடும் பொழுதும், தாம் ஒரு பக்கத்தில் தனிமையாக உட்கார்ந்து, தமக்குத் தோன்றும் கடினமான கணக்குகளைப்பற்றி ஆலோசித்துக் கொண்டிருப்பார்; ஒருபொழுதும் வீண் காலம் கழிக்க மாட்டார். சிறு வயதிலிருந்தே இவருக்குச் சித்திரங்கள் வரைவதிலும் செய்யுள் இயற்றுவதிலும் மிகப் பிரியமுண்டு. பிள்ளைகள், காற்றடிக்கும் மாதங்களில் பறக்க விடும் காற்றாடியை முதலில் கண்டுபிடித்தவர் இவரே.

ஐஸக் நியூடனுக்குப் பதினைந்தாவது வயதில், இரண்டாவது கணவனையும் இழந்த நியூடனது தாய் திருப்பவும் உல்ஸ்தோர்ப் என்னும் தனது பழய இடத்திற்கு வந்து சேர்ந்தாள். நியூடனின் தந்தை வைத்துப் போன நிலங்களையும் மற்றுமுள்ள சொத்துக்களையும் பார்க்கும்படி இவருடைய தாய் இவருக்கு உத்தரவளித்தாள். அதனல், நியூடன் பள்ளிக்கூடத்தை பெருந் துக்கத்துடன் விட்டு விட்டார். பண்டங்கள் வாங்கி விற்பதில் பழக்க வேண்டுமென்று இவரது தாய் இவரைப்

பிரதிவாரமும் சந்தைக்கு அனுப்புவாள்; மற்ற நாட்களில் ஆடு மாடுகளை வயல்களில் மேய்த்து வரும்படி அனுப்புவாள். ஆனால், நியூடனே அவைகளையெல்லாம் எங்கேயாவது ஒருபக்கத்தில் மடக்கி விட்டு, புத்தகம் படித்துக் கொண்டிருப்பார்.

ஒருநாள் இவர் இவ்வாறு ஒருமரத்தடியில் உட்கார்ந்து ஏதோ ஒரு கடினமான கணக்கைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தார். அப்பொழுது அவ்வழியே போய்க் கொண்டிருந்த இவருடைய தாய்மாமன் நியூடனுக்குக் கல்வியில் இருக்கும் ஊக்கத்தைக் கண்ணுற்று, உடனே தம்முடைய சகோதரியிடம் சென்று, திரும்பவும் இவரைக் கலாசாலைக்கு அனுப்பும்படி வேண்டினர். அவ்வம்மையும் அவ்வார்த்தைக் கிணங்கி, ஐஸக்கைக் கேம்பிரிட்ஜ் கலாசாலையிற் சேர்த்தாள். அப்போது இவருக்கு வயது பதினெட்டு. இவர் சிலவருஷங்கள் அங்கேயே படித்து வந்தார்; அதற்குள், நக்ஷத்திரம், ஒளி, கணிதம் முதலிய சாஸ்திரங்களில் நிபுணராய் விளங்கினர். இவர் அதி ஆச்சரியமான தூரதிருஷ்டிக் கண்ணாடி யொன்றைத் தாமே செய்து, அதை அக்காலத்தில் இங்கிலாந்தை

ஆண்ட இரண்டாம் சார்ல்ஸ் மன்னனிடத்தில் சமர்ப்பித்தார். மன்னனும் இவருடைய சாமர்த்தியத்தைக் கண்டு வியந்தான். அது முதல் நியூடன் பெயர் நாடெங்கும் பரவலாயிற்று.

பிறகு ஒருசமயம் நியூடன் தமது தோட்டத்தில் ஒரு இலந்தை மரத்தடியில் உட்கார்ந்து யோசித்துக் கொண்டிருந்தார்; அப்பொழுது ஒருபழம் அம் மாத்திலிருந்து கீழே விழக் கண்டார். அதைப் பார்த்த ஐஸக் நியூடன் "இந்தப் பழம் கீழே விழ வேண்டுவதேன்? மேலே ஏன் செல்லக்கூடாது? இதில் ஏதோ ஒரு ஆச்சரியம் இருக்கின்றது," என்று ஆலோசிக்கலானுர்; பிறகு ஒரு சிறு கல்லை யெடுத்து ஆகாயத்தில் வீசி எறிந்தார்; அது கொஞ்சதூரம் உயரமாகப்போய் மீண்டும் கீழே விழுந்ததைக் கண்டார். அவர் அதிலிருந்து தாம் அதிக விசையுடன் எறிந்தபடியால் கல் மேலே போயிற்று என்றும், அந்த விசை தீர்ந்ததும் அது பூமியால் திருப்பவும் இழுக்கப்பட்டுக் கீழே விழுந்து விட்டது என்றும், தெரிந்து கொண்டார்; அதனுல், எப்பொருளையும் தன்னிடம் இழுத்துக் கொள்ளும் ஒருவிதமான சக்தி பூமிக்கு அமைந்திருக்கிறதென்று தீர்மானித்தார். இப்படி பூமியினிடத்து



அமைந்துள்ள சக்திக்கு "மத்திய கவர்ச்சி விசை" என்று பெயராம். இது ஆங்கிலத்தில் "கிராவிடி" (Gravity) என்று கூறப்படுகின்றது.

அதற்கடுத்த வருஷத்தில் நியூடன் கேம்பிரிட்ஜ் சர்வ கலாசாலையில் ஒரு உபாத்தி யாயராய் அமர்ந்தார்; கடைசியாக அதே கலாசாலையில் கணித சாஸ்திர பண்டித ஸ்தானத்தை வகித்து, அதை மிகத் திறமை யுடன் நடத்தி வந்தார். இக் காலத்தில், இவர் சந்திரன், ஒளி, நக்ஷத்திரம் என்பவைகளைப் பற்றித் தாம் கண்டுபிடித்திருந்த அநேக நூதன விஷயங்களை யெல்லாம் அச்சிட்டு வெளி யாக்கினர். அதனால், இவருடைய புகழ் எங்கும் பரவிற்று. இதன் பயனாக 1705-ம் வருஷம் இவர் 'ஸர்' என்ற கௌரவப் பட்டத்தை அரசாங்கத்தார் அளிக்கப் பெற்றார்.

ஸர் ஐஸக் கல்வியாலன்றிக் குணத்தினா லும் சிறந்தவர். இவருடைய அடக்கத்திற்கும் பொறுமைக்கும் அளவில்லை. கோபம் என்பதும் கர்வம் என்பதும் இவருக்குத் தெரியா. இவர் சாதாரண ஜனங்களிடத்தும் மிகப் பிரீதியுடன் இனிமையாகப் பேசுவார். இவர் ஏதாவது ஒருவிஷயத்தைப் பற்றி யோசிக்கும் போது

தேகம் முற்றும் மறந்து ஆழ்ந்த யோசனையி லிருப்பார்.

இவ்வாறு நாட்டிற்கு ஒரு திலகம் போல் விளங்கிய ஸர் ஐஸக் நியூடன் தமது எண்பத்து நான்காவது வயதில் காலமானார். இவர் ஞாபகத்தின் பொருட்டு கேம்பிரிட் ஜில் சர்வ கலாசாலைக்கு அருகிலுள்ள ஆலயத்தில் இவரைப் போல் சிலை யொன்று செய்து வைக்கப்பட்டிருக்கிறது.

அரும்பத உரை :—மரப்பாச்சி - தேய்ந்த மரப்பொம்மை; கண்ணும் கருத்துமாக - மிகக் கவனமாக; கலா சாலை - உயர்தரப் பாடசாலை; கவர்ச்சி - இழுத்தல்; திலகம் - பொட்டு.

வினா :—1. நியூடன் எவ்வாறு படித்து தேர்ச்சி யடைந் தார்?

2. இவர் 'மத்திய கவர்ச்சி சக்தியை'க் கண்டு பிடித்தது எப்படி?

3. இவருக்கு 'ஸர்' என்னும் பட்டம் எப் பொழுது கிடைத்தது? ஏன்?

4. இவரது ஜீவிய காலம் எவ்வளவு?

இலக்கணக் குறிப்பு :—1. 'அமர்ந்தார்' இதில் பகுதி எது? 2. 'அறிவார்' இதில் இடை நிலை எது? என்ன காலத்தைக் காட்டுகிறது? 3. 'போவேன்' இதில் விகுதி எது?

19. மண் எண்ணெய்

நான் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? நான் தான் மண் எண்ணெய் என்பவன்! ஒவ்வொரு இரவும் நீங்கள் என்முன் அமர்ந்தே படித்தாக வேண்டும். உங்களில் பலர் என்னைச் 'சிம்னி' (Chimney) உள்ள அழகிய விளக்குகளில் ஊற்றித் தீபத்தைப் பிரகாசமாக எரியச் செய்கிறார்கள். ஆனால், சிலரோ காய் விளக்குகளில் என்னை நிரப்பிப் புகையும்படி செய்கிறார்கள்; அதனால், அவர்கள் தங்கள் கண்ணையும் மூக்கையும், வீட்டுக் கூரைகளையும் கரியாக்கிக் கொள்ளுகிறார்கள். இது நியாயமாவென்று நான் உங்களைக் கேட்கிறேன்.

நான் பணக்காரர் வீடு, ஏழை வீடு என்ற வித்தியாசம் பாராட்டுவதில்லை. ஏழைகளுக்குப் பைசா விலைக்கும் நான் அடிமைப் படுகிறேன். பணக்காரர்களோ இரண்டு அல்லது மூன்று ரூபாய் கொடுத்து என்னை 'டின், டின்' ஆக வாங்குகிறார்கள். வியாபாரிகள் ஆயிரக் கணக்கான ரூபாய்களுக்கு என்னை வாங்கிவிற்று மிகுந்த இலாபம் அடைகின்றனர். எத்தனை ஏழைகளை நான் குபேரனாக ஆக்கியிருக்கின்றேன் என்பது உங்ளுக்குத் தெரியுமா?

என்னைப் பார்த்துப் புரளியாக நகைக்கும் அந்தப் பையன் யார்? நான் வந்தது முதல் வாணியர்கள் வாயிலும், செக்கின் வாயிலும் மண் விழுந்து விட்டது என்று அவன் சிரிக்கிறான்? இவ் விந்திய நாட்டில் எவ்வளவு காலம் வரை இலுப்பை எண்ணெயும் ஆமணக்கு எண்ணெயும் தனியரசு செலுத்தி வரலாம்? "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல" என்பதை அவர்கள் அறிவார்களா?

"நீயும் சில வருடங்களில் வீழ்ச்சியடைவாய்! மின்சாரம் அநேகமாக உன்னை ஓட்டி விட்டது!" என்று அதோ அங்குள்ள ஒருவன் கூறுகிறான். மின்சாரத்திற்கு முற்றிலும் என்னை ஓட்டி விடுவது முடியுமா என்று நான் ஒரு கை பார்த்து விடுகிறேன். முட்டை பொரியும் முன் குஞ்சுகளை எண்ண ஆரம்பிக்க வேண்டாம்.

இருக்கட்டும்! என் பிறப்பு வளர்ப்புச் சரிதையை உங்களுக்குச் சொல்லுகின்றேன்; கேளுங்கள்! பல்லாயிரக் கணக்கான வருடங்களுக்கு முன்னர் நான் பெரிய காடாக உலகின் பல பாகங்களிலும் பரவி இருந்தேன். புயல் என்னும் பாவிப் பயலும், பூகம்பம் என்னும் அரக்கனும் என்னைத் தரையோடு தரையாய்ச்

சாய்த்து விட்டனர். என் அழிவைப் பார்க்கப் பொருத என் அன்னை நிலமகள், என் சவக் குழியைத் தானே மூடினுள். இச் சவக்குழியில் நான் ஆயிரக் கணக்கான ஆண்டுகள் அடைந்து கிடந்தேன்; அழுது அழுது நான் உருகி விட்டேன். உடம்பு என்ற என் கட்டை என் தாபத்தினுல் வெந்து கரியாகி விட்டது. நான் உகுத்த கண்ணீர் பூமிக்குள் சுவரக் கூடிய இடமெல்லாம் பரவிவிட்டது. இவ்வாறு நான் அலங்கோலமாய்க் கிடந்த காலம் எண்ணில் அடங்காது; நான் பட்ட துன்பத்தைப் பகர்வது ஒருவர்க்கும் முடியாது.

ஆனுல், 'முயற்சி திருவினையாக்கும்' என்பது பொன்மொழி யன்றே? நான் மிகுந்த கஷ்டப்பட்டுச் சிறிது சிறிதாகத் தரையின் மட்டத்திற்கு வந்து சேர்ந்தேன். என்னைப் பார்த்த சில அமெரிக்கா நாட்டுப் பூர்வக் குடியினர் என்னை ஒரு மருந்துப்பொருளாக மதித்துத் தமது உடலில் பூசிக்கொள்வார் ஆயினர். சில ஆண்டுகள் இவ்வாறு பிணி தீர்க்கும் தொழிலில் நான் அமர்ந்து இருந்தேன்.

அதன்பின் ஐரோப்பியர் ஒருவர் என்னைக் கண்டார். நான் விளக்கு எரிக்கப் பயன்

படுவேன் என்று அவர் தெரிந்துகொண்டார் ; பூமியில் கிணறு தோண்டி என்னை ஏராளமாகச் சேகரிக்க ஆரம்பித்தார். அது முதல் அவரைப் போலவே பிறரும் என்னை விரும்பி நாடலாயினர். அவர்கள் அதிர்ஷ்டமும் என் நற்காலமும் ஒன்று சேர்ந்தன. அதனால், அவர்கள் 'பூலோகக் குபேரர்கள்' ஆயினர். நானே அக் குபேரர்களும் பிறரும் பூசிக்குப் திருமகள் ஆயினேன்.

நான் வசிக்குமிடங்கள் எங்கு உள்ளன என்று நீங்கள் அறிய விரும்புகிறீர்களா ? ஏன்? உங்கள் தேசத்திற் கருகிலுள்ள பர்மாவிலேயே என் பங்களாக்கள் பல உள ; பாரசீகத்திலும், ருஷியாவிலும், அமெரிக்காவிலும் எனக்கு அநேக அரண்மனைகள் இருக்கின்றன.

ஒளி கொடுப்பதற்கு மட்டுமே நான் உதவுகிறேன் என்று நீங்கள் கருதவேண்டாம். 'ஸ்டவ்' (Stove) என்ற அடுப்பில் ஊற்றி அக்கினிபகவானாகவும் மக்கள் என்னை உபயோகிக்கின்றனர். சூரியபகவான் இரதத்தை இழுத்துச் செல்லும் குதிரைகளை ஒப்ப நானும் 'பெட்ரோல்' (Petrol) என்னும் நாமம் பூண்டு மோட்டார்களை ஓடச்செய்கிறேன்.

இவ்வளவு கீர்த்திவாய்ந்த நான் மண் எண்ணெய் என்ற தாழ்வான பெயருடன் விளங்குவது எனக்கு இழிவைத் தரும் என்று நீங்கள் எண்ணுதீர்கள். கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும் சாமானிய மரமாக என்னை நினைத்து விடாமல், உலகில் எவரும் என்னை விரும்பி என் தயவை நாடுமாறு செய்வித்தவள் என் அன்பு மிக்க அன்னை பூமி தேவியே யன்றோ? அவள் செய்த நன்றியை என்றும் மறவாதிருக்கவே நான் 'மண் எண்ணெய்' என்று நாமம் பூண்டுளேன். நான் என் அன்னையிடம் கொண்டுள்ள பத்தியைப் பார்த்தீர்களா?

அரும்பத உரை:—அமர்ந்தே - இருந்தே; சிம்னி - புகைப் போக்கி; காய் விளக்கு - புகைப்போக்கியில்லாத தகர விளக்கு; குபேரன் - செல்வத்திற்கு அதிபதி; புரளியாக - துடுக்காக; வீழ்ச்சியடைவாய் - விழுந்து விடுவாய்; அரக்கன் - இராட்சதன்; நிலமகள் - பூமிதேவி; உகுத்த - உதிர்த்த, சிந்திய; திருமகள் - இலக்குமி.

வினா:—1. மண் எண்ணெய் எப்படி உண்டாகிறது?

2. மண் எண்ணெயின் உபயோகங்கள் என்ன என்ன?

3. மண் எண்ணெய் கிடைக்கும் இடங்களைக் கூறுக.

இலக்கணக் குறிப்பு:—இடைச்சொல் பெயர்ச் சொல்லையும் இடைச் சொல்லையும்போல தனித்து வாராமல் அச்சொற்களைச் சார்ந்துவரும் சொல் இடைச்சொல்லாம். இந்த இடைச்சொல் பலவகையாகும்; அவை: (1) வேற்றுமை உருபு, (2) விகுதி, (3) இடைநிலை, (4) சாரியை, (5) சுட்டு, (6) வினா முதலியனவாம்.

'இது நியாயமா என்று நான் உங்களைக் கேட்கிறேன்' இதில் (1) ஐ வேற்றுமை உருபு இடைச்சொல்; (2) என் விகுதி இடைச்சொல். (3) கிறு இடைநிலை இடைச்சொல்; (4) ஆ வினா இடைச்சொல்; (5) இ சுட்டு இடைச்சொல்; (6) அடைகின்றனர்—அடை + கின்று + அன் + அர்: அன் சாரியை இடைச்சொல்.

---

20. பிதாக்கள்

" தவமது செய்தே பெற்று எடுத்தவன் முதல் பிதா,
தனை வளர்த்தவன் ஒரு பிதா,
தயையாக வித்தையைச் சாற்றினவன் ஒரு பிதா,
சார்ந்த சற்குரு ஒரு பிதா,
அவம் அறுத்து ஆள்கின்ற அரசு ஒரு பிதா,
நல்ல ஆபத்து வேளை தன்னில்
அஞ்சல் என்று உற்றதுயர் தீர்த்துளோன் ஒரு பிதா,
அன்புள்ள முன்னோன் ஒரு பிதா,
கவளம் இடும் மனைவியைப் பெற்றுளோன் ஒரு பிதா,
கலி தவிர்த்தவன் ஒரு பிதா,
காசினியில் இவரை நித்தம் பிதா என்று உளம்
கருதுவது நீதி யாகும். "

21. தேசிங்கு ராஜன்

ஆங்கில அரசாட்சி இந்தியாவில் நிலை பெறுவதற்கு முன் இந் நாட்டை மொகலாய மன்னர்கள் அரசாண்டுவந்தனர். அவர்களில் ஒருவரான ஷா ஆலம் டில்லியில் சக்கரவர்த்தியா யிருக்குங் காலத்தில், தென் ஞட்டில் சில சிற்றரசர்கள் இருந்தார்கள். இவர்கள் டில்லிச் சக்கரவர்த்திக்கு அடங்கி, அவருக்குக் கப்பம் செலுத்தி வந்தனர். இக் கப்பத்தை வசூலித்தனுப்புவது ஆறுகாட்டு நவாபின் கடமையாம். ஒரு சமயம் நவாபுக்குச் செஞ்சிக் கோட்டைத் தலைவனிடமிருந்து கப்பம் வசூலிப்பது முடியாதாயிற்று. அதனல், அதனை வசூலிகக டில்லிப் பாட்சா டில்லியிலிருந்து ஸைரோப் சிங் என்னும் வீரன் ஒருவனை அனுப்பினர். ஸைரோப் சிங் செஞ்சி மன்னனை வென்று கப்பத்தை வசூலித்தனுப்பினன். அதனல், டில்லிச் சக்கரவர்த்தி இவ்வீரனையே செஞ்சிக் கோட்டைக்குத் தலைவனுக்கினர். இவன் வம்சத்தில் தோன்றியவன் தேசிங்கு ராஜன்.

தேசிங்கு ராஜனின் தந்தையாகிய தரணி சிங் செஞ்சியை ஆண்டு வந்தபொழுது, டில்லிப்

பாட்சாவுக்கு ஓர் அருமையான குதிரை கிடைத்தது. அவர் கிடைத்தற்கரிய குதிரையைப் பெற்றது பற்றிப் பெருமகிழ்ச்சியடைந்தார்; ஆனுல், அதன் மேல் ஏறி சவாரி செய்வது எவருக்கும் முடியவில்லே. அதனுல், பாட்சா அக் குதிரையை அடக்கி அதன்மீது சவாரி செய்பவருக்குத் தகுந்த பரிசும் அக் குதிரையும் கொடுக்கப்படு மென்று அறிக்கை செய்தார். அது பற்றிப் பலர் முயன்றனர்; முடியாமல் டில்லி மன்னரது சீற்றத்திற்காளாகிச் சிறையில் வைக்கப்பட்டனர். இவற்றைக் கேள்வியுற்ற தரணி சிங் தனது சகோதரனுன தேரணி சிங்குடன் டில்லிக்குச் சென்ருன். அவ்விருவரும் எத்துணே முயன்றும், அக் குதிரையை அடக்கி ஆள முடியாது திகைத்தனர். அதனுல், அவர்கள் இருவரும் வழக்கம் போல் டில்லிச் சக்கரவர்த்தியால் சிறையிலடைக்கப்பட்டனர்.

தரணிசிங் செஞ்சியை விட்டேகும்பொழுது அவன் மனேவி கர்ப்பவதியாயிருந்தாள். அவள் தான் எவ்வளவு சொல்லியும் கேளாது சென்ற தனது கணவன் திரும்பவாராதது கண்டு, பெருந் துன்பமடைந்தாள்; அவ்வாறு சிலநாள் சென்றபின் ஒருமகனேப்பெற்று அதனுல் சிறிது துயரம்



செஞ்சிக்கோட்டை

நீங்கப் பெற்ருள்; அம் மகனுக்குத் தேசிங்கு என்று நாமம் சூட்டி, அவனை மிக்க அன்புடன் வளர்த்து வந்தாள்; மகனுக்குத் தக்க வயது வந்ததும், அவனை அரசர்க்குரிய படைக் கலைகளில் பழக்கினுள். தேசிங்கு பதினுரும் ஆண்டு அடைவதற்குமுன், குதிரை ஏற்றத்தில் நிகரற்ற வீரனுனன். தேசிங்கின் திறமையை யறிந்த அவன் தாய் ஒருநாள் அவனிடம் பாட்சாவின் அறிக்கையை அறிவித்து, அவன் தந்தைமார்களின் வரலாற்றையும் விளம்பினுள்.

அது கேட்ட தேசிங்கு தாயிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு விரைவாக டில்லிக்குச் சென்று, தன் வரவைப் பாட்சாவுக்குத் தெரிவித்தான். பாட்சாவும் சிறுவன் விண்ணப்பத்திற்கு இணங்கி, குதிரையைத் தருவித்தார். பாட்சாமுதலிய யாவரும் வியப்புறுமாறு அவன் அக்குதிரையை நொடிப்பொழுதில் தன் வசப்படுத்தி அதன் மீதேறி அதனைச் செலுத்திஞன். பாட்சாவும் மற்றெல்லோரும் அதுகண்டு திகைத்து நின்றனர். பின்னர்ப் பாட்சா தமது அறிக்கைப்படி தேசிங்குக்கு அக்குதிரையையும் தக்க பரிசையும் அளித்து, அன்று முதல் அவன் கப்பம் கட்டவேண்டுவதில்லை யென்றும் மகிழ்வுடன் மொழிந்தார்; தேசிங்கின் வேண்டு

கோனுக்கிணங்கி, அவனது தந்தைமார்களையும் சிறையினின்று விடுவித்தார். தேசிங்கின் வீர தீரத்தைக் கண்ட பாட்சாவின் சேனைத்தலைவன் தனது அருமைப் புதல்வியை அவனுக்குத் திரு மணம் செய்வித்தான்; அதனோடு தக்க சீரும் அளித்தான். பின்னர், தேசிங்கு தன் தந்தைய ரோடு மிகக் களிப்புடன் செஞ்சிக்கு வந்து சேர்ந்தனன். தரணி சிங் வழக்கம் போல் தன் நாட்டை செவ்வனே ஆண்டு வந்தான்.

இவ்வாறு சில மாதம் கழிந்தபின் தரணி சிங் திடீரென்று கடவுள் திருவடி சேர்ந்தான். பிறகு தேசிங்கு மகுடம் பூண்டு தன் தந்தை யிலும் பதின் மடங்கு அதிக விமரிசையாய் நாட்டை ஆண்டுவந்தான். குடிகள் எல்லோரும் தேசிங்கைத் தெய்வம்போலக் கொண்டாடினர்.

இவ்விதம் குடிகளாலும், டில்லிச் சக்கர வர்த்தியாலும் நன்கு மதிக்கப்பட்டு, புகழுடன் வாழும் தேசிங்கின் மீது ஆறுகாட்டு நவாபு அடங்காப் பொருமை கொண்டான். அவன் டில்லிப் பாட்சாவால் செஞ்சித் தலைவனுக்கு அளிக்கப்பட்ட சுதந்தரத்தை அறிந்திருந் தும், அவனிடமிருந்து கப்பம் வசூலிக்க ஆளை அனுப்பினன். தேசிங்கு அவனிடத்தில் தான் பெற்ற சுதந்தரத்தை எடுத்துரைத்து,

அதற்கு மாருக நவாபு தன்னைக் கட்டாயப் படுத்திஞல், தன்னைப் போரில் வென்றே கப்பம் பெறலாம் என்று சொல்லி அனுப்பி ஞன். அதைக் கேட்ட நவாபு கோப முற்று, தன் பெருஞ் சேனையுடன் செஞ்சிக் கோட்டையின் மீது படையெடுத்து வந்தான். நவாபின் வருகையை அறிந்த தேசிங்கு தனது உயிர் நண்பனும் சேனைத் தலைவனு மான முகம்மதுகானுக்கு இச் செய்தியைத் தெரிவித்தான். அப்போது முகம்மதுகான் திருமணஞ் செய்யும் பொருட்டு மணையில் மணப் பெண்ணுடன் வீற்றிருந்தான்; இருந்தும், தன் தலைவன் அனுப்பிய செய்தியை அறிந்த வுடன் திருமணத்தை நிறுத்திவிட்டுச் செஞ்சிக்குச் சென்ருன்; தனது படையுடன் நவாபை எதிர்த்து அவனுடைய சேனையை முறியடித்தான். பகைவர் படையில், முகம்மது கானுடைய வாளுக்கு இரையானவர் பலர்; மற்றவர் உயிர் தப்ப ஓடி ஒளிந்தனர். பகைவ ரெல்லாம் ஒழிந்தனர் என்று மகிழ்ச்சியுடன் கோட்டைக்குத் திரும்பிக் கொண்டிருந்த முகம்மதுகானை ஒளிந்திருந்த நவாபின் வீரன் ஒருவன் சுட்டுக் கொன்ருன். அதனை அறிந்த மற்ற வீரர்கள் திரண்டு வந்து திரும்பவும் போருக்குத் தயாராயினர்.

தன்னுடைய உயிருக்கு உயிரும் நிகரற்ற வீரனுமான முகம்மதுகானுக்கு நிகழ்ந்ததை அறிந்த தேசிங்கு ராஜன் அளவிலாக் கோப முற்று, போருக்குச் சித்தமானுன் ; போர்முகத் திற்குப் போவதற்கு முன் தனது இஷ்ட தெய்வமாகிய அரங்கநாதன் கோயிலுக்குச் சென்று, அரங்கநாதனை வணங்கி நின்ருன். அப்போது அவனுக்கு எப்பொழுதுமில்லாத அபசகுனங்கள் பல தோன்றின. அதனுல் தேசிங்கு சிறிதும் கலங்காமல் போருக்குப் புறப்பட்டுச் சென்ருன். செஞ்சிக்கு அருகிலுள்ள பத்தப்பட்டு என்னுமிடத்தில் இருதிறத் தார்க்கும் பெரும் போர் நடந்தது; முடிவில் நவாபின் சேனைகள் சிதறி ஓடின. நவாபும் யுத்தத்தில் இறந்தானென்று எண்ணிய தேசிங்கு வெற்றியுடன் திரும்பிப் போகையில் நவாபு உயிருடன் இருக்கிருனென்று கேள்வியுற்று, திரும்பவும் சென்று, அவனுடன் கடும்போர் செய்தான். அது சமயம் மறைவிலிருந்த பகை வீரன் ஒருவன் தேசிங்கை வஞ்சகமாகக் கொன்று விட்டான்.

கணவன் யுத்தத்தில் மாண்டசெய்தியை அறிந்த தேசிங்கின் மனைவி தீ மூட்டி, அதில் மூழ்கிச் சுவர்க்க மடைந்தாள். இராணியின்

கற்பை மெச்சிய நவாபு அவளுடைய பெயர் என்றும் மறவாதபடி ஆறுகாட்டிற்கு அருகிலுள்ள ஓர் ஊருக்கு இராணிப்பேட்டை என்று பெயரிட்டான். தேசிங்கு யுத்தத்தில் மடிந்தாலும், சுத்த வீரனுனபடியால், அவன் பெயர் இன்றும் யாவராலும் கொண்டாடப்பட்டு வருகின்றது. இன்றைக்கும் செஞ்சிக்குச் சுற்றுப் பக்கங்களிலுள்ள மக்கள் யாவரும் தேசிங்கு ராஜன் சரிதையைப் பாட்டாகப் பாடுவதைக் கேட்கலாம்.

அரும்பத உரை :—சக்கரவர்த்தி - பேரரசன், மற்றொரு அரசரைப் பணியாது தனி அரசாட்சி செய்வோன்; சீற்றம் - கோபம்; திகைத்தனர் - பிரமித்தனர்.

வினு :—1. தேசிங்கின் முன்னோர் செஞ்சிக்கு வந்த காரணம் என்ன?

2. தேசிங்குக்கும், ஆறுகாட்டு நவாப்புக்கும் சண்டை ஏன் உண்டாயிற்று?

3. இப்பாடத்தில் எஜமான் விசுவாசத்தைக் குறிக்கும் பாகத்தை எடுத்துரைக்க.

இலக்கணக் குறிப்பு :—'வந்தனர்'; இதில் சாரியை எது? விகுதி எது? 'தனது கணவன்', 'ஒரு மகனைப் பெற்று', 'அதனுல் சிறிது துயரம் அடைந்து' 'நிலைபெறுவதற்கு முன்' இவற்றுள்ள வேற்றுமை உருபுகளை எடுத்து எழுதி அவை இன்ன இன்ன வேற்றுமை உருபுகள் என்று சொல்லுக.



22. கண்ணப்பன்

சென்னைக்கு வடமேற்கில் சுமார் ஐம்பது மைல் தூரத்தில் மூக்கு மலை யென்ற நகரி மலைக்கும் சிகாளத்தி மலைக்கும் இடையிலுள்ள மலைப் பிரதேசத்தில் உடுப்பூர் என்று ஒரு கிராமம் உண்டு. அதில் பல நூற்றாண்டுகளுக்கு முன் நாகன் என்று ஒரு வேடன் இருந்தான். அவன் சரீர பலத்திலும் வில் வித்தையிலும் வேட்டையாடும் திறமையிலும் நிகரற்றவன். அதனால், அவன் தன் இனத்தார் யாவருக்கும் தலைவனாக விளங்கினான். நாகன் தனது மனைவியான தத்தை என்னும் மாது சிரோமணியுடன் நீண்ட காலம் இல்லற வாழ்க்கை நடத்தி வந்தான்; செல்வத்திலும் சிறப்புற்றவனாய் இருந்தான்; இருந்தும், புத்திர பாக்கிய மில்லாமையால் மனம் வருந்தி யிருந்தான்.

அதனுல், அவன் தனது மனைவியோடு தனது குலதெய்வமாகிய முருகக்கடவுளை வழிபட்டு வந்தான். முருகன் திருவருளால் அவர்கட்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. நாகன் அக் குழந்தையை மிக்க அன்போடு தனது இரு கரங்களாலும் பற்றி யெடுத்தான்; குழந்தை அதிக கனமாயிருக்கக் கண்டு, அதற்குத் திண்ணன் என்று பெயரிட்டான்.

குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. திண்ணன் தக்க வயதடைந்ததும், நாகன் நல்ல ஆசிரியன் ஒருவனைக் கொண்டு அவனுக்கு வேடர்க்குரிய வில் வித்தையைக் கற்பித்தான். திண்ணன் நாளடைவில் தனது தந்தையினும் சிறந்த வீரனுக விளங்கினுன். நாகன் வயது ஆக ஆகச் சக்தி குறைந்தவனுய், தனது மகனை வேடர்க்குத் தலைவனுக்கக் கருதினுன்; ஒருநாள் திண்ணனைப் பார்த்து, "மைந்தாய், எனக்கோ வயது ஆய்விட்டது. நான் வழக்கம் போல் வேட்டையாடவும், வேடர்களைப் பரிபாலிக்கவும் முடியாதவனு யிருக்கிறேன்; அதனுல், உன்னை என்னுடைய பதவியில் அமர்த்த எண்ணு கிறேன்; அதற்குரியவனுக, நீ உன் வயதுள்ள வேடருடன் காடு சென்று கன்னி வேட்டை

ஆடிவர வேண்டும்;'' என்ருன். திண்ணனும் அதற்கு இணங்கினன்.

திண்ணன் உடனே ஆயுத பாணியாகி, நாணன், காடன் என்ற தனது இணைபிரியா நண்பரிருவர்களும், மற்றுமுள்ள வேடர்களும் தன்னுடன் வர, வேட்டையாடக் காட்டிற்குப் புறப்பட்டுச் சென்ருன். வேடர்கள் வலைகட்டி, கொம்பு, பறை முதலியவற்றின் முழக்கத்தால் மிருகங்கள் நாலா பக்கங்களிலிருந்தும் மருண் டோடச் செய்தார்கள். திண்ணனும் அவற்றை மிக்க திறத்துடன் வேட்டை யாடினன். கடைசியாக, காட்டுப் பன்றி யொன்று வலையில் சிக்கிக் கொண்டது. திண்ணன் ஆயுதத்துடன் தன்னைநோக்கி வருவதைக் கண்ட அப்பன்றி வலையை அறுத்துக்கொண்டு அதிவேகமாய் ஓடத்தொடங்கியது. திண்ணனே அதைப் பின்பற்றி விரைந் தோடினன். வேடர்கள் உடன் செல்ல முடியாமற் களைத்து ஊருக்குத் திரும்பினர். நாணனும், காடனுமே அவனை விடாமற் பின்பற்றித் தொடர்ந்தனர். தப்பி யோடிய பன்றி காளத்திமலையண்டை வரவும் வழியில் பெரும்பாறையொன்று குறுக்கிட்டது; அதனல், அதைக் கடந்து செல்ல முடியாமல் திகைத்து நின்றது. திண்ணன் தன்னை நெருங்கி


A. D. acharya

வருவதைக் கண்ட அப்பன்றி மருண்டு அவன் மேல் திரும்பிப் பாய்ந்தது; பாயவும் திண்ணன் அதன் குறியிலிருந்து சற்று விலகினன். அதனல், பன்றி அவனைத் தாண்டி அப்பால் குதித்தது. திண்ணன் ஒரு நொடி நேரத்திற்குள் அதன்மேல் பாய்ந்து தன் இடையிலிருந்த வாளை உறையினின்றும் உருவி அதை ஒரே குத்தாய்க் குத்திக் கொன்றனன். அப்போது நாணனும், காடனும் இரைக்க இரைக்க அவனிடத்திற்கு ஓடிவந்து சேர்ந்தனர்.

நீண்ட தூரம் ஓடிவந்தபடியால், திண்ண னுக்குத் தாகம் மேலிட்டது; அவன் நாணனை நோக்கி ஜலம் உள்ள இடத்தைக் காண்பிக்கும் படி கேட்டான். நாணனுக்கு அங்குள்ள சுற்றுப் பக்கங்களெல்லாம் தெரியுமாகையால், அவன் "குறுக்கிட்டிருக்கும் பாறையைக் கடந்து சென்றல், எதிரில் தோன்றும் காளத்தி மலையின் அடிவாரத்தில் ஒரு நதியைக் காணலாம்; அதில் தண்ணீர் அருந்தி, தாகமும் பசியும் தீர்த்துக்கொள்ளலாம்," என்றன். திண்ணன் பன்றியைத் தோளில் சுமந்து கொண்டு நண்பருடன் புறப்பட்டான்; சிறிது தூரஞ் சென்று காளத்தி மலையை அடைந்து அதன்மீது ஏறத்தொடங்கினன்;

ஏற ஏறத் தன் தோள்சுமையின் பளுவு குறையக் கண்டான் ; உடனே ஒன்றும் தோன்றாதவனாய் அசைவற்று நின்றான் ; பிறகு மெய்ம்மறந்து ஓட்டமாய் ஓடி நதியண்டை வந்து நின்றான் ; காடனை அழைத்து, அப் பன்றியை சுட்டுப் பக்குவம் செய்யச் சொன்னான். அப்போது நாணன் "நம்முடைய குலதெய்வமாகிய குடுமித் தேவர் இம்மலையில் இருக்கின்றார்" என்று கூறினன். அது கேட்ட திண்ணன் காளத்தியிலுள்ள கடவுளை வணங்கிவரச் சென்றனன்.

---

23. கண்ணப்பன்—II

திண்ணன் ஆற்றைக் கடந்து மலையின் மேலுள்ள சமவெளியை அடைந்தான் ; அடைந்ததும், மரங்களுக்கிடையே ஒருவாறு மனிதர் தலைபோன்றுள்ள ஒரு சிலையைக் கண்டான் ; கண்டதும், காணமற் போன குழந்தையைக் கண்ட தாய்போல் ஓடி, அதனைக் கட்டிக் குலாவினான் ; அதற்கு தலை முதல் அடிவரையில் தடவிக்கொடுத்தான்; முத்தமிட்டான். அவனது கண்ணினின்று நீர் தாரை தாரையாய்ப் பெருகிற்று ; அவன் மனமும் குழைந்து அன்பு பெருகியதாயிற்று. திண்ணன் சிலைக்கும் தெய்வத்திற்கும் உள்ள வித்தியாசத்தை அறி

யாது, சிலையை நோக்கி, "தேவரீர் துஷ்டப் பிராணிகள் நிறைந்த இந்த இடத்தில் துணையின்றி இருப்பது சரியோ? இந்தத் தனிமையான இடத்தில் தங்களுக்கு வேண்டிய உணவு கொடுப்பார் யார்? நீர் என்னுடன் ஊருக்கு வருதலே சரி. தேவரீருக்குத் தெளிதேனும், தினைமாவும், சுவையுள்ள பழவகைகளும், இளமான், முயல், பன்றி முதலியவற்றின் இறைச்சியும் அளிப்பேன். என் ஏவலாளர் உங்களுக்குக் காவல் புரிவர். தேவரீர் ஒரு குறைவுமின்றிச் சுகமா யிருக்கலாம்; வாரும்!" என்று அதனைக் கெஞ்சிக் கெஞ்சி அழைத்தான்.

மனிதர் தலைபோன்றுள்ள அச் சிவலிங்கம் ஒன்றுக்கும் பதிலுரைக்க வில்லை. மீண்டும் திண்ணன், "தங்களுக்கு என்னுடன் வர விருப்பம் இல்லைபோலும்! அதனால், நான் இங்கேயே யிருந்து உமக்குத் தொண்டு செய்வேன். நேரமாய் விட்டபடியால் சுவாமிக்குப் பசியா யிருக்கும். நான் இப்பொழுதே சென்று நொடி நேரத்தில் இறைச்சி கொணர்ந்து தங்களுடைய பசியை ஆற்றுவேன். இடையில் உமக்கு ஏதேனும் அபாயம் நேர்ந்தால், என்னைக் கூப்பிடும்," என்று சொல்லிச் சிவலிங்கத்தை உற்று நோக்கினான். அதன்மேல் பச்சை இலைகளும், நறுமணம்

வீசும் பூமாலையும் இருக்கக் கண்டு, தன்னைத் தொடர்ந்து வந்த நாணனை நோக்கி, "இவ்விடத்திற்கு மனிதர் யாரேனும் வந்திருத்தல் கூடுமோ?" என்று வினவினன். நாணன் "நான் முன் ஒரு தடவை இவ்விடத்திற்கு வந்திருந்த பொழுது பெரியார் ஒருவர், இத் தெய்வத்திற்கு நீராட்டி, பூச்சூட்டி, அமுதூட்டி, இதனுடன் பேசிக்கொண்டிருந்ததைக் கண்டேன். ஒரு சமயம் அவரே இங்கு வந்து இவ்வாறு செய்திருத்தல் கூடும்" என்றான். அது கேட்ட திண்ணன் தானும் அவ்வாறே செய்ய ஆசை கொண்டான்.

திண்ணன் உடனே காடன் இருக்குமிடம் சென்று, அவனால் பக்குவம் செய்து வைக்கப் பட்டிருந்த பன்றிமாமிசத்தைத் தின்றுபார்த்து, உருசியான பாகத்தை ஒரு தேக்கு இலைத் தொன்னையில் வைத்து எடுத்துக்கொண்டான்; காட்டில் பச்சை இலைகளையும், நறுமணம் கமழும் மலர்களையும் பறித்து, குற்றுச்செடி போன்ற தனது மயிர் முடியில் செருகிக்கொண்டான்; வரும் வழியிலுள்ள நதியில் வாய் நிறையத் தண்ணீர் முகந்துகொண்டு வந்து, அச் சிவலிங்கத்தை அடைந்தான். பிறகு அவன் அதன்மேலிருந்த நிர்மாலியத்தைக் காலால் ஒதுக்கித்தள்ளி, வாயிலிருந்த நீரை

அதன்மேல் உமிழ்ந்து அதற்கு நீராட்டித் தன் தலையிலிருந்த பத்திர புஷ்பத்தால் அதை அலங்கரித்துத் தொன்னையில் வைத்திருந்த இறைச்சியை மிக்க அன்போடு அதற்கு ஊட்டினான். சிவபெருமானும் அவற்றையெல்லாம் அன்போடு ஏற்றுக்கொண்டார். திண்ணனுக்குத் தன்னூரைப் பற்றிய விஷயம் மறந்தே போயிற்று. தன்னை நாகனும் காடனும் அழைத்ததும், தன் தந்தை வந்தழைத்ததும் அவன் காதிற்கு எட்டவேயில்லை. திண்ணன் அன்று மாலைப்பொழுதும் இரவும் அங்குத் தங்கி, சிவலிங்கத்திற்குக் காவல் புரிந்தான். மறுநாள் காலையில் திண்ணன் சுவாமிக்கு உணவு தேடிவரச் சென்றான்.

வழக்கம்போல் சிவகோசரியார் என்னும் பெரியார் சிவலிங்கத்திற்குப் பூசைசெய்ய அங்கு வந்தார்; வந்ததும், மாமிசத் துண்டுகளும் எலும்புகளும் சிவலிங்கத்திற்கு அருகே இறைந்து கிடத்தலைக் கண்டு மனம் திடுக்கிட்டார்; துஷ்ட வேடர்களில் எவனோ ஒருவன் இவ்விதம் அலங்கோலஞ் செய்யத் துணிந்திருப்பான் என்று உறுதி கொண்டார்; அடங்காத் துக்கக் கடலில் ஆழ்ந்தார். பிறகு அவர் அவ் விடத்தைச் சுத்தஞ் செய்து, பக்கத்திலிருக்கும் ஆற்றில் நீராடிச் சிவலிங்கத்திற்கு

அபிஷேகம் செய்து, வேதவிதிப்படி பூசை முடித்து, மனவருத்தத்தோடு வீடு சென்றார். இவ்விதம் ஐந்துதினம் திண்ணனும், சிவ கோசரியாரும் மாறிமாறிச் சிவலிங்கத்திற்குப் பூசைசெய்து வந்தனர். அதனால், சிவகோ சரியார் இன்னது செய்வது என்று தெரியாமல் பெருந்துக்கம் அடைந்தார். சிவபெருமான் ஐந்தாவது நாளிரவு சிவகோசரியார் கனவில் தோன்றி, "அன்பனே! நீ வருந்த வேண்டாம்; நீ அசுத்தமென்று நினைத்திருக்கும் முறையில், எனக்குத் தினமும் பூசை செய்து வருபவன் வேடனாவன்; அவன் வேடனேயாயினும், பத்தியிற் சிறந்தவன்; அவனுடைய அன்பிற்கு அளவேயில்லை; வேண்டுமானால், அதை நீ நாளையதினம் மறைந்திருந்து காணலாம்," என்று கூறி மறைந்தார்.

சிவகோசரியார் மறுநாட் காலையில் தமது பூசையை முடித்துக்கொண்டு, சிவபெருமான் கட்டளைப்படி சிவலிங்கத்திற்குப் பின்னுள்ள மரத்தின் மறைவில் ஒளிந்திருந்தார். வேடர் தலைவனான திண்ணன், வழக்கம்போல் சிவ லிங்கத்திற்கு உணவுதேடக் காட்டிற்குச் சென்று வேட்டையாடும்பொழுது, சில தீச்சகுனங்களைக் கண்டான்; கண்டதும், சிவலிங்கத்திற்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்திருத்தல் கூடுமோ

TB
O31(5)
N33

என்று நினைத்து அஞ்சி, சிவலிங்கமிருக்குமிடத்திற்கு விரைந்து ஓடிவந்தான்; சிவலிங்கத்தை அடைந்ததும், அதன் வலக் கண்ணிலிருந்து இரத்தம் பெருகக் கண்டான்; கண்டதும், துக்கத்தால் மூர்ச்சித்துக் கீழே விழுந்தான்; சற்றுநேரம் பொறுத்து, மூர்ச்சை தெளிந்து எழுந்து, சிவலிங்கத்தின் கண்ணைத் துடைத்தான்; திரும்பவும், இரத்தம் பெருகுவதைக் கண்டு, காட்டிற்குச் சென்று தனக்குத் தெரிந்த ஒரு பச்சை இலையைக் கொண்டுவந்து வைத்தியம் செய்தான்; அதனால், சிவலிங்கத்தின் கண்ணிலிருந்துவரும் இரத்தம் குறையாது அதிகப்பட்டது. அதுகண்ட திண்ணன் ஊனுக்கு ஊனிடலே தகுதியாகுமென்று தீர்மானித்து, அதற்குச் சிறிதும் அஞ்சாமல், தனது வலக் கண்ணை உன்றியிலிருந்தெடுத்த அம்பால் பறித்தெடுத்து, சிவலிங்கத்தின் இரத்தம் வரும் கண்ணில் சாத்தினான்; உடனே, இரத்தம் பெருகுவது நின்று விட்டது. அதுகண்டு திண்ணன் பேரானந்தம் அடைந்தான்.

சற்று நேரத்திற் கெல்லாம் சிவலிங்கத்தின் இடக் கண்ணிலிருந்து இரத்தம் வடிய ஆரம்பித்தது. அதுகண்ட திண்ணன் சிறிதும் கலங்காது, தனது மற்றொரு கண்ணையும்

86082

பிடுங்கி, சிவலிங்கத்தின் இரத்தம் வடியும் கண்ணில் வைக்கலாமென்று தீர்மானித்தான்; மற்றொரு கண்ணையும் பிடுங்கிய பிறகு தனக்குக் கண்ணை வைக்கும் இடம் தெரிய வேண்டி, தனது இடக்காலைச் சிவலிங்கத்தின் இடக் கண்ணில் அடையாளமாக வைத்துக் கொண்டு, தனது கண்ணை அம்பால் பறிககத் தொடங்கினான். உடனே சிவலிங்கத்தினின்று ஒரு கை தோன்றி, திண்ணன் கையைப் பிடித்துத் தடுத்தது; சிவலிங்கத்தின் உதடுகள் அசைந்தன. அப்போது சிவபெருமான் "நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப!! நில்லு கண்ணப்ப!!!" என்னும் சிவமணங் கமழும் நல்லுரை மும்முறை கூறி, "அன்பனே! உனது பத்திக்கு மெச்சினோம்; உனக்கு நிகரானவர் எவருமில்லை. நீ எனக்கு உனது கண்ணைக் கொடுத்தமையால், கண்ணப்பன் என்னும் பெயரோடு இனி நீ மூவுலகத்திலும் விளங்குவாயாக!" என்று திருவாய் மலர்ந்தருளி, கண்ணப்பனென்னும் திண்ணனுக்குத் தமது வலப்பக்கத்திலிருக்கும்படி கருணை செய்தனர். இவற்றையெல்லாம் மறைந்திருந்து பார்த்திருந்த சிவகோசரியார் கண்ணப்பன் பத்தியைப் புகழ்ந்துகொண்டே வீடு சென்றார். கண்ணப்பன் விக்கிரகம் திருக்காளத்தியில்

இன்றும் இருப்பதைக் காணலாம். கண்ணப்பர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர் ஆவர். "பத்தியுடையார் முத்திபெறுவர்" என்பதை இச் சரித்திரம் நன்கு விளக்கும்.

அரும்பத உரை :—திண்ணன் - வலியன்; கன்னிவேட்டை- முதல் முதல் ஆடும் வேட்டை; கமழும் - வீசும்; நிர்மாலியம் - பூசித்துக் களைந்த பூ; அலங்கோலம் - ஒழுங்கின்மை; ஊன் - மாமிசம்.

வினு :—1. உடுப்பூர் எங்கே இருக்கிறது? குடுமித்தேவர் எவர்?

2. சிவமணம் கமழப்படி கூறிய நல்லுரை யாது?

3. சிவகோசரியார் ஒளிந்திருந்ததற்குக் காரணம் என்ன?

இலக்கணக் குறிப்பு :—உரிச்சொல்: பெயர்ச் சொல்லும் வினைச்சொல்லும் போலத் தனித்து வாராது, அச் சொற்களைச் சார்ந்து குணத்தை உணர்த்தி வரும் சொல் உரிச்சொல். இது ஒரு குணத்தை உணர்த்துவது, பலகுணத்தை உணர்த்துவது என இருவகையாம். "நறு மணம் வீசும்". இதில் 'நறு' ஒரு குணம் உணர்த்தும் உரிச்சொல். "கடி மணம் வீசும்" இதில் கடி என்பது பல குணம் உணர்த்தும் உரிச்சொல்; இங்குக் கடி என்பது 'நல்ல' என்னும் பொருளைத் தருவதாம். "கடி" என்னும் இவ் வுரிச்சொல் காவல், கூர்மை, வேகம் என்னும் பொருளையும் வெவ்வேறு இடங்களில் தருவதாம். இக் காரணத்தால் "கடி" என்பது பலபொருள் உணர்த்தும் உரிச் சொல்லாம்.

ஔவையார் அருளிச்செய்த

24. மூதுரை என்னும் வாக்குண்டாம்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு. (1)

அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா—தொடுத்த
உருவத்தால் நீண்ட வுயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா. (2)

உற்ற விடத்தில் உயிர்வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ ?—கற்றூண்
பிளந்திறுவ தல்லால் பெரும்பாரம் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான். (3)

நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே யாகுமாந் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே யாகுங் குணம். (4)

பண்டு முளைப்ப தரிசியே யானாலும்
விண்டுமி போனால் முளையாதாம்—கொண்டபேர்
ஆற்ற லுடையார்க்கும் ஆகா தளவின்றி
ஏற்ற கருமஞ் செயல். (5)

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்லமரங்கள் ;—சவைநடுவே

நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவனன் மரம். (6)

வேங்கை வரிப்புலிநோய் தீர்த்த விடகாரி
ஆங்கதனுக்கு ஆகார மானாற்போல்—பாங்கறியாப்
புல்லறி வாளர்க்குச் செய்த உபகாரம்
கல்லின்மேல் இட்ட கலம். (7)

அடக்க முடையா ரறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா—மடைத்தலையில்
ஓடுமீ னோட வுறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாங் கொக்கு. (8)

சீரியர் கெட்டாலுஞ் சீரியர் சீரியரே
அல்லாதார் கெட்டாலங் கென்னாகும்—சீரிய
பொன்னின் குடமுடைந்தால் பொன்னாகும் என்னாகும்
மண்ணின் குடமுடைந்தக் கால். (9)

உடன்பிறந்தார், சுற்றத்தார் என்றிருக்க வேண்டா;
உடன்பிறந்தே கொல்லும் வியாதி;—உடன்பிறவா
மாமலையி லுள்ள மருந்தே பிணிதீர்க்கும்;
அம்மருந்து போல்வாரும் உண்டு. (10)

நற்றாமரைக் கயத்தில் நல்லன்னஞ் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்—கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை யுகக்கும் பிணம். (11)

நஞ்சுடைமை தானறிந்து நாகம் கரந்துறையும்;
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு;—நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர்; கரவார்
கரவிலா நெஞ்சத் தவர். (12)

கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்
அல்லாத மாந்தர்க் கறங்கூற்றம்—மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம் கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண். (13)

மருவினிய சுற்றமும் வான்பொருளு நல்ல
உருவு முயர்குலமு மெல்லாம்—திருமடந்தை
ஆம்போ தவளோடு மாகு மவள்பிரிந்து
போம்போ தவளோடும் போம். (14)

சாந்தனையும் தீயனவே செய்திடினும், தாமவரை
ஆந்தனையுங் காப்பர் அறிவுடையோர்;—மாந்தர்
குறைக்குந் தனையும் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம். (15)

25. நல்வழி

புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள்—எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை யெச்சமயத் தோர்சொல்லும்
தீதொழிய நன்மை செயல். (1)

எண்ணி யொருகருமம் யார்க்குஞ்செய் யொண்ணாது
புண்ணியம் வந்தெய்து போதல்லால்—கண்ணிலான்
மாங்காய் விழவெறிந்த மாத்திரைக்கோ லொக்குமே
ஆங்கால மாகு மவர்க்கு. (2)

எல்லாப் படியாலும் எண்ணினால், இவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிநோய்ப் புன்குரம்பை;—நல்லார்
அறிந்திருப்பார்; ஆதலினால் ஆங்கமல நீர்போல்
பிரிந்திருப்பார்; பேசார் பிறர்க்கு. (3)

ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும் அந்நாளும், அவ்வாறு
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் ;—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லையென மாட்டார் இசைந்து. (4)

ஆற்றங் கரையின் மரமும், அரசுஅறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே ;—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்!
பழுதுண்டு வேறோர் பணிக்கு. (5)

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சைபல சொல்லி யிடித்துண்கை—சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மான மழியா
துயிர் விடுகை சால வுறும். (6)

சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்
கபாய மொருநாளு மில்லை—உபாய
மிதுவே மதியாகு மல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும். (7)

செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ விருநிதியம்—வையத்
தறும்பாவ மென்னவறிந் தன்றிடார்க் கின்று
வெறும்பானை பொங்குமோ மேல். (8)

பெற்றார், பிறந்தார், பெருநாட்டார், பேருலகில்
உற்றார், உகந்தார் எனவேண்டா—மற்றோர்
இரணங் கொடுத்தால் இடுவர் ; இடாரே
சரணம் கொடுத்தாலும் தாம். (9)

நீரும், நிழலும், நிலம்பொதியும் நெற்கட்டும்,
பேரும், புகழும், பெருவாழ்வும்,—ஊரும்,
வருந்திருவும், வாழ்நாளும், வஞ்சமிலார்க்கு என்றும்
தரும்சிவந்த தாமரையாள் தான். (10)

வேதாளஞ் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே—மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரஞ் சொன்னார் மனை. (11)

மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை,
தானம், தவம், உயர்ச்சி, தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம். (12)

மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்தழைப்பார் யாவருமங் கில்லை—சுரந்தமுதங்
கற்றா தரல்போல் கரவா தளிப்பரேல்
உற்றா ருலகத் தவர். (13)

கல்லானே ஆனாலும்,கைப்பொருள்ஒன் றுண்டாயின்
எல்லாரும் சென்றங் கெதிர்கொள்வர் ;—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்
செல்லாது அவன்வாயிற் சொல். [டாள் ;

வினைப்பயனை வெல்வதற்கு வேத முதலாம்
எனைத்தாய நூலகத்தும் இல்லை—நினைப்பதெனக்
கண்ணுறுவ தல்லால் கவலைபடேல் நெஞ்சே ! மெய்
விண்ணுறுவார்க்கு இல்லை விதி. (15)

பதவுரை.

வாக்குண்டாம்.

1. துப்பு ஆர் - (செந்நிறத்தாலே) பவளத்தை ஒத்த, திருமேனி - திருமேனியையும், தும்பிக்கையான் - துதிக்கையையும் உடைய விநாயகக்கடவுளது, பாதம் - திருவடிகளை, பூக்கொண்டு - (பூசிக்கக் கைகளிலே) மலர்களைக்கொண்டு, தப்பாமல் - தவறாமல், சார்வார்தமக்கு - அடைகின்றவர்க்கு, வாக்கு உண்டாம் - (நல்ல) சொற்கள் உண்டாகும்; நல்ல மனம் உண்டாம் - நல்ல மனம் உண்டாகும்; மா - பெருமை பொருந்திய, மலராள் - இலக்குமியினது, நோக்குண்டாம் - அருட்பார்வை உண்டாகும்; மேனி - (அவரது) உடம்பு, நுடங்காது - (நோய் முதலியவற்றால்) இளைக்காது. [வாக்குண்டாம் என நூல் முதலில் கூறியசொல் நூலுக்கே பெயராயிற்று.]

2. தொடுத்த - (கிளைகள் தம்முள்தாம் நெருங்கிக் கிளைத்துத்) தொடுத்துள்ள, உருவத்தால் - வடிவத்தாலே, நீண்ட - நீண்டுள்ள, உயர் மரங்கள் எல்லாம் - உயர்வாகிய மரங்களெல்லாம், பருவத்தால் அன்றி - (தாம் பழுப்பதற்குரிய) காலம் வந்தால் அல்லாமல், பழா - (பழம்) பழுக்காவாம்; (அதுபோல), எடுத்த கருமங்கள் - (ஒருவர் தாம்) செய்யத் தொடங்கிய காரியங்களை, அடுத்து முயன்றாலும் - (செய்ய) மேலும் மேலும் முயற்சி செய்தாலும், ஆகுநாள் அன்றி - முடியும் காலம் வந்தால் அல்லாமல், ஆகா - (அவை) முடிவு பெறாவாம்.

3. கற்றூண் (கல் + தூண்) - கருங்கற் கம்பமானது, பெரும் பாரந்தாங்கின் - மிகுந்த பளுவைத்தாங்கினால், பிளந்து இறுவது அல்லால் - முறிந்து ஒடிவதல்லாமல், தளர்ந்து வளையுமோ - துவண்டு வளையுமோ? - (வளையாது); (அதுபோல), உற்ற இடத்தில் - (தமக்கு ஆபத்து) நேர்ந்தபொழுது, உயிர் வழங்கும் தன்மையோர் - (தம்) உயிரைவிடும் தன்மையுடைய மேலோர், பற்றலரைக் கண்டால் - (தம்) பகைவரைக் கண்டால், பணிவரோ - வணங்குவரோ? (வணங்கார்.) [தான் - அசை.]

4. நீர் ஆம்பல் - நீரில் இருக்கும் அல்லியானது, நீரளவே - (தானுள்ள) நீரின் அளவாகவே, ஆகும் - உண்டாகும்; (அதுபோல), நுண்ணறிவு - (ஒருவனது) நுட்பபுத்தியானது, தான்கற்ற - (அவன்) தான்படித்தறிந்த, நூலளவே - நூலின் அளவாகவே, ஆகும் - உண்டாகும். தான்பெற்ற செல்வம் - (ஒருவன்) தான் அடைந்துள்ள செல்வமானது, மேலை - (அவன்) முற்பிறப்பில் (செய்த), தவத்தளவே - தவத்தின் அளவாகவே, ஆகும் - உண்டாகும்; குணம் - (ஒருவனது) குணமானது, குலத்தளவே - (அவன் பிறந்த) குலத்தின் அளவாகவே, ஆகும் - உண்டாகும். [ஆம் மூன்றும் அசைநிலை.]

5. பண்டு முளைப்பது - (உமி நீங்குவதற்கு) முன்னே முளைப்பது, அரிசியே யானாலும் - அரிசியே ஆயினும், உமி விண்டுபோனால் - உமியானது நீங்கிப்போமாயின், முளையாது - (அவ்வரிசி) முளையாது. (அதுபோல), கொண்ட - (தம்மிடத்து நீங்காது) கொண்டுள்ள, பேராற்றல் உடையார்க்கும் - பெரிய வல்லமை உடையவர்க்கும், அளவின்றி - துணைவலி இல்லாமல், ஏற்ற கருமம் - (தாம்) எடுத்துக்கொண்ட காரியத்தை, செயல் - செய்தல், ஆகாது - முடியாது. [ஆம் - அசை.]

6. காட்டகத்தே - காட்டினிடத்தே, கவையாகி - கிளைகளையுடையனவாயும், கொம்பாகி - கொம்புகளை யுடையனவாயும், நிற்கும் - நிற்கின்ற, அவை - அந்தமரங்கள், நல்ல மரங்கள் அல்ல - நல்ல மரங்கள் அல்லவாம்; (ஆனால்) சபைநடுவே - சபையின் மத்தியிலே, நீட்டோலை - (ஒருவன்) நீட்டிக்கொடுத்த ஓலையை, வாசியாநின்றான் - வாசியாமல் நின்றவனும், குறிப்பறியமாட்டாதவன் - (பிறருடைய) மனக்குறிப்பை (அவரது கண்களாலாவது முகத்தாலாவது) அறியமாட்டாதவனுமே, நன்மரம் - நல்ல மரம் ஆவர். [வாசியா - வாசியாமல்.]

7. வரி - வரிகளையுடைய, வேங்கைப் புலி - வேங்கைப்புலியினது, நோய் - (விஷ) நோயை, தீர்த்த விடகாரி - (மருந்து கொடுத்து) ஒழித்த விஷ வைத்தியன், ஆங்கு - அப்பொழுதே,

அதனுக்கு - அப்புலிக்கு, ஆகாரம் ஆனாற்போல் - இரை ஆனாற் போல், பாங்கு - (பிறர்செய்த) உதவியை, அறியா - (எண்ணி) அறியாத, புல்லறிவாளர்க்கு - கீழ்மக்களுக்கு, செய்த உபகாரம் - செய்த உதவியானது, கல்லின்மேல் இட்ட - கருங்கல்லின் மீது போட்ட, கலம் - மட்பாத்திரம் (போல அழிந்துபோகும்). [புல்லறிவாளர் - அற்பபுத்தி உடையவர்.]

8. கொக்கு - கொக்கானது, மடைத்தலையில் - நீர் மடையி னிடத்து, ஓடுமீன் - ஓடுகின்ற சிறு மீன்கள், ஓட - ஓடிக்கொண் டிருக்க, (அவற்றைக் கவனியாது), உறுமீன் - (தனக்கு வேண் டிய) பெரு மீன், வரும் அளவும் - வருகின்ற வரைக்கும், வாடி இருக்கும் - அடங்கி இருக்கும்; (அதுபோல) அடக்கம் உடை யார் - (காலம்நோக்கி) அடங்கி இருக்கும் குணமுடையவரை, அறிவிலர் என்று எண்ணி - அறிவு இல்லாதவர் என்று நினைத்து, கடக்க - (அவரை) அடக்கும்படி, கருதவும் - (பிறர்) நினைத்தலும், வேண்டா - கூடாது.

9. சீரியர் - மேன்மக்கள், கெட்டாலும் - (தமது செல்வம் குறைவதாலே) கெட்டார் ஆயினும், சீரியரே - மேல்மக்களாக வே மதிக்கப்படுவர்; சீரியர் அல்லாதார் - கீழ்மக்கள், கெட் டால் - (தமது செல்வம் குறைவதாலே) கெட்டாராயின், அங்கு - அப்போது, என் ஆகும் - (அவருக்கு) என்ன மதிப்பு உண்டாகும். சீரிய - சிறந்த, பொன்னின் குடம் - பொன்னாலா கிய குடம், உடைந்தால் - உடைந்தாலும், பொன்னாகும் - பொன்னாகவே விளங்கும்; மண்ணின் குடம் - மண்ணாலாகிய குடம், உடைந்தக்கால் - உடைந்தால், என்னாகும் - (அதற்கு) என்ன மதிப்பு உண்டாகும். (சீரியர் அல்லாதார் - மேன்மக்கள் ஆகாதவர். மற்று - அசை.)

10. வியாதி - வியாதியானது, உடன்பிறந்தே - (ஒருவன்) உடம்போடு பிறந்தே, கொல்லும் - (அவனைக்) கொல்லுவதாம்; (ஆதலால்), உடன் பிறந்தார் - (ஒருவன்) தன்னோடு பிறந்த வரே, சுற்றத்தாரென்று - (தனக்கு) உறவினராவரென்று,

இருக்கவேண்டா - (அவரை நம்பி) இருத்தல் கூடாது ; உடன் பிறவா - (ஒருவன்) தன்னோடு பிறவாமல், மாமலையிலுள்ள - பெரிய மலையிலிருக்கின்ற, மருந்தே - (பச்சிலை முதலிய) மருந்தே, பிணிதீர்க்கும் - (அவனது) வியாதியை நீக்குவதாம் ; (ஆதலால்), அம்மருந்துபோல்வாரும் - அம்மலை மருந்தையொத்திருப்பாரும், உண்டு - (அவனுக்கு ஆபத்திலே உதவிசெய்ய) இருக்கின்றனர்.

11. கயத்தில் - தடாகத்திலுள்ள, நற்றாமரை - நல்ல தாமரைப்பூவை, நல் அன்னம் - சிறந்த அன்னப்பறவை, சேர்ந்தாற் போல் - (விரும்பிச்) சேர்ந்தாற்போல, கற்றாரை - கற்றறிந்தவரை, கற்றாரே - கற்றறிந்தவரே, காமுறுவர் - விரும்பிச் சேர்வர் ; முதுகாட்டில் - சுடுகாட்டில் உள்ள, பிணம் - பிணத்தை, காக்கை உகக்கும் - காக்கை விரும்பி அடையும், (அதுபோல), கற்பு இலா - கல்வி அறிவு இல்லாத, மூர்க்கரை - மூடரை, மூர்க்கர் - (கல்வி அறிவு இல்லாத) மூடர், முகப்பர் - (விரும்பிச்) சேர்வர்.

12. நாகம் - நாகப்பாம்பு, நஞ்சு உடைமை - (தன்னிடத்து) விஷம் இருத்தலை, தான் அறிந்து - தானே அறிந்து, கரந்து உறையும் - (தன்னைப் பிறர் காணாதபடி) மறைந்து வசிக்கும் ; நீர்ப்பாம்பு - (தன்னிடத்து விஷம் இல்லாத) தண்ணீர்ப் பாம்பு, (தன்னிடத்து விஷம் இல்லாமையால்), அஞ்சா - (எவர்க்கும்) அஞ்சாமல், புறம் கிடக்கும் - வெளியே கிடக்கும்; (அவைபோல), நெஞ்சில் கரவு உடையார் - (தம்முடைய மனதிலே) வஞ்சகம் உடையவர், தம்மைக் கரப்பர் - தம்மைத் (தாமே) மறைத்துக்கொண்டு ஒழுகுவர் ; கரவிலா - வஞ்சகம் இல்லாத, நெஞ்சத்தவர் - மனம்உடையவர், கரவார் - (தம்மைத் தாமே) மறைத்துக்கொண்டு ஒழுகார். (அஞ்சா - அஞ்சாமல்.)

13. மெல்லிய வாழைக்கு - மிருதுத்தன்மை வாய்ந்த வாழை மரத்திற்கு, தான் ஈன்ற - (அது) தானே ஈன்ற, காயே-குலையே, கூற்றம் - எமனாம் ; (அதுபோல), கல்லாத மாந்

தர்க்கு - (நூல்களைக்) கற்றறியாத மக்களுக்கு, கற்று உணர்ந் தார - (நூல்களைக்) கற்று அறிந்தவரது, சொல் - சொல்லே, கூற்றம் - எமனும் ; அல்லாத - (தர்ம குணம்) இல்லாத, மாந் தர்க்கு - மக்களுக்கு, அறம் - தர்மமே, கூற்றம் - எமனும் ; இல் விற்கு - இல்லற ஒழுக்கத்திற்கு, இசைந்து - பொருந்தி, ஒழு காத - (கணவனோடு ஒத்து) நடக்காத, பெண் - பெண்ணே, கூற்றம் - (அக்கணவனுக்கு) எமனுவள்.

14. மருவு - பொருந்திய, இனிய - நற்குணம் வாய்ந்த, சுற்றமும் - உறவும், வான்பொருளும் - சிறந்தபொருளும், நல்ல உருவும் - சிறந்த வடிவழகும், உயர் குலமும் - உயர் குடிப்பிறப் பும், எல்லாம் - (ஆகிய இவை) எல்லாம், திரு மடந்தை - இலக் குமி, ஆம்போது - (ஒருவனிடத்து) வரும்காலத்தில், அவளோடு - அந்த இலக்குமியுடன், ஆகும் - வந்து கூடும் ; அவள் - அந்த இலக்குமி, பிரிந்து போம்போது - (அவனை விட்டு) நீங்கிப் போகும் காலத்தில், அவளோடும் - அந்த இலக்குமியுடனே, போம் - நீங்கிப்போகும்.

15. மரம் - மரங்கள், மாந்தர் - மக்கள், குறைக்கும் தனை யும் - (தம்மை) வெட்டும் அளவும், குளிர் நிழலைத்தந்து - (அவர் க்கு) குளிர்ந்த நிழலைக்கொடுத்து, மறைக்கும் - (அவர் மீது படும் வெயிலை) மறைக்கும், (அதுபோல), அறிவு உடையோர் - விவேகம் உடையவர், சாந்தனையும் - (தாம்) சாகும் அளவும், தீயனவே செய்திடினும் - (பிறர் தமக்கு) தீங்குகளையே செய்தா ராயினும், அவரை - அவர்களை, ஆந்தனையும் - (தம்மாலே) ஆகும் அளவும், காப்பர் - (நன்மையே செய்து) காப்பாற்றுவர். [தாம், ஆம், கண்டீர் - அசை.]

பதவுரை.

நல்வழி.

1. புண்ணியம் - (ஒருவன் செய்யும்) புண்ணியமானது, ஆம் - (அவனுக்கு இன்பத்தைத் தருவது) ஆகும்; பாவம் - (ஒருவன் செய்யும்) பாவமானது, போம் - (அவனது நன்மையை நீக்கி) ஒழிவதாம், மண்ணிற் பிறந்தார்க்கு - மண்ணுலகத்தில் பிறந்த மக்களுக்கு, போன நாள் - (அவர்கள்) முற்பிறப்பில், செய்த அவை - செய்துள்ள அப்புண்ணியமும் பாவமுமே, வைத்த பொருள் - (இப்பிறப்பிற்கு உதவியாகச் சேர்த்து) வைத்த பொருளாகும்; எண்ணுங்கால் - ஆராயுமிடத்து, எச்சமயத்தோர் சொல்லும் - எந்தச் சமயத்தார் சொல்லுவதும், ஈது ஒழிய - (புண்ணியம் ஆம், பாவம் போம் என்னும்) இது தவிர, வேறில்லை - மற்றொன்றும் இல்லையாம். (ஆதலால், ஒவ்வொருவரும்), தீதொழிய - பாவம் நீங்க, நன்மை செயல் - புண்ணியத்தையே செய்யக்கடவர். [புண்ணியம் - நல்வினை; பாவம் - தீவினை; சமயம் - மதம்.]

2. யார்க்கும் - (மக்கள்) யாவருக்கும், புண்ணியம் - (அவர்கள் முன்பு செய்துள்ள) புண்ணியமானது, வந்து எய்து போது அல்லால் - (தனது பயனைக்கொடுக்க) வந்து கூடிய காலத்திலே அல்லாமல், (மற்றக்காலத்தில்) ஒரு கருமம் - ஒரு காரியத்தையும், எண்ணி - (இவ்வாறு செய்ய வேண்டுமென்று) நினைத்து, செய்யொண்ணாது - செய்தல் முடியாது. ஆங்காலம் - (புண்ணியம் வந்து) கூடுங்காலத்திலே, அவர்க்கு - அவர்களுக்கு, ஆகும் - (அக்கருமம் தானே) முடிவுபெறும்; (அது), கண்ணிலான் - குருடன், மாங்காய் - மாங்காய் ஆனது, விழ - கீழே விழும்படி, எறிந்த - (மாமரத்தின்மீது) எறிந்த, மாத்திரைக் கோல் - ஊன்றுகோலை, ஒக்கும் - போல்வதாம். [ஏ - அசை.]

3. இவ்வுடம்பு - இந்தச் சரீரத்தை, எல்லாப்படியாலும் - சகல விதங்களாலும், எண்ணினால் - ஆராய்ந்து நோக்குமிடத்

தும், (அது), பொல்லா - பொல்லாத, புழு - புழுக்களுக்கும், மலி நோய் - மிகுந்த நோய்களுக்கும், புன்குரம்பை - (இழிவாகிய ஒரு) சிறு வீடாக இருக்கின்றது. நல்லார் - நல்லறிவினையுடையவர், (உடம்பு இவ்வாறு இருத்தலை நன்றாக), அறிந்திருப்பார் - அறிந்திருக்கின்றனர். ஆதலினால் - அதனால், கமல நீர் போல் - தாமரை இலையின் நீர் (அவ்விலையோடு கூடியும் கூடாது இருப்பது) போல, பிறிந்திருப்பார் - (தம்முடம்போடு கூடியும்) கூடாது இருப்பர்; (உடம்பு இவ்வாறிருத்தலை), பிறர்க்கு - மற்றவரிடத்து, பேசார் - சொல்லார். [பிறர் - நல்லவரல்லாதவர்.]

4. ஆறு - நதியானது, பெருக்கு அற்று - வெள்ளம் பெருகுவது ஒழிந்து, (தனது மணலானது), அடிசுடும் அந்நாளும் - (நடப்பவர்களுடைய) பாதத்தைச் சுடுகின்ற அந்த வெயிற் காலத்திலும், அவ்வாறு - அந்த நதியானது, ஊற்றுப் பெருக்கால் - (தனது) ஊற்று நீர்ப்பெருக்கினாலே, உலகூட்டும் - உலகத்தாரை (நீர்) உண்ணச்செய்யும். (அதுபோல), நல்ல குடிப்பிறந்தார் - நல்ல குடியிலே பிறந்தவர், நல்கூர்ந்தாராலும் - (தீவினையால்) வறுமை யுடையவரானாலும், எற்றவர்க்கு - (தம்மை யடுத்துவந்து) யாசிப்பவர்களுக்கு, இசைந்து - மனமொத்து, இல்லையென மாட்டார் - (என்னிடத்தில் ஒன்றும்) இல்லையென்று சொல்லமாட்டார். (கூடிய அளவு தம்மிடத்துள்ளதைக் கொடுப்பர்.)

5. ஆற்றங்கரையின் மரமும் - ஆற்றினது கரையில் இருக்கின்ற மரமும், அரசு அறிய - அரசன் அறியும்படி, வீற்றிருந்த - (செல்வத்தால்) பெருமையாக வாழ்கின்ற, வாழ்வும் - வாழ்வும், விழுமன்றே - அழிந்துபோம் அல்லவா? (ஆதலால்), உழுது - உழுது பயிர்செய்து, (அதனால் பயனை), உண்டு வாழ்வு - உண்டு வாழ்வதே, எற்றம்-(ஒவ்வொருவருக்கும்) உயர்வாகும்; அதற்கு- அவ்வுழுது உண்டு வாழ்வதற்கு, ஒப்பு இல்லை - ஒப்பாயிருப்பது இல்லையாம். வேறோர் பணிக்கு - மற்ற ஒவ்வொரு தொழிலுக்

கும், பழுது உண்டு - அழிவு உண்டாம். [அம் - சாரியை, கண்டீர் - முன்னிலை அசை.]

6. பேசுங்கால் - ஆராய்ந்து கூறுமிடத்து, பிச்சைக்கு - பிச்சை எடுத்து உண்ணுதலைப் பார்க்கிலும், மூத்த - (இழிவிலே) பெரிய, குடிவாழ்க்கை - குடிவாழ்க்கையானது, பல இச்சை சொல்லி - (பிறரிடத்து) பலவாகிய இச்சக வார்த்தைகளைப் பேசி, இடுத்து - (அவரை) நெருக்கி, உண்கை - (அவர் தரும் உணவு வாங்கி) உண்ணுதலாம்; சிச்சீ - (இவ்வாழ்க்கை) இகழ்ச்சியைத் தருவதாம். வயிறு வளர்க்கைக்கு - (ஒரு சாண்) வயிற்றை வளர்த்தற் பொருட்டாக, மானம் அழியாது - மானம் கெடாமல், உயிர் விடுகை - உயிரை விட்டுவிடுதலே, சாலவுறும் - (அறிவுடையவற்கு) மிகவும் பொருந்தியதாம். [மானம் - பெருமை; சிச்சீ என்பது இகழ்ச்சிப் பொருளைத்தரும் இடைச்சொல்.]

7. சிவாய நமவென்று - சிவாய நமவென்று (அன்போடு கூறி), சிந்தித்து - (பரமேசுவரனைத்) தியானம் செய்து, இருப்போர்க்கு - இருக்கின்ற பெரியவர்களுக்கு, ஒருநாளும் - ஒரு காலத்திலும், அபாயம்-ஆபத்து, இல்லை - (உண்டாவது) இல்லையாம்; இதுவே - (சிவாய நமவென்று சிந்தித்திருத்தலாகிய) இதுவே, உபாயம் - (விதியை வெல்வதற்கு) சாதகமாம். (இதுவே), மதியாகும் - மெய்யறிவைத் தருவதாகும்; அல்லாத - இதுவல்லாத மற்றச் சாதனங்கள், எல்லாம் - எல்லாவற்றிலும், மதி - புத்தியானது, விதியே யாய்விடும் - விதியின் வசத்ததாகியே இருக்கும். [சிவாய நம என்பதின் பொருள் சிவனுக்கு வணக்கம் என்பதாம். மதி - மெய்யறிவு; உபாயம் - காரணம்.]

8. வையத்து-உலகத்திலே, பாவம் அறும்-(புண்ணியத்தினாலே) பாவம் ஒழியும், என்ன - என்று பெரியோர் சொல்ல, அறிந்து - (அதனை) அறிந்து, அன்று - அக்காலத்திலே, இடார்க்கு - (சத்பாத்திரத்திலே) தானம் செய்யாதவருக்கு, செய்தீவினை - (அவர் தாம்) செய்த பாவமானது, இருக்க - (தரித்திரத்திற்கு) காரணமாயிருக்க, இன்று - இப்போது,

தெய்வத்தை - கடவுளை, நொந்தக்கால் - வெறுத்துக்கொண்டால், இருநிதியம் - பெரிய திரவியம், எய்தவருமோ - பொருந்த வருவதாமோ? (வாராது ; அது எதுபோலெனின்), வெறும் பானை - (நீரில்லாத) வெறும்பானையை, (அடுப்பின்மீது வைத்து எரித்தால்), மேல் பொங்குமோ - (அது) மேலே பொங்கி எழுவதாகுமோ? (பொங்காது; இதுபோலவாம்) [அன்று - அப்பிறப்பு, இன்று - இப்பிறப்பு]

9. பேருலகில் - பெரிய பூமியிலே, பெற்றார் - (இவர் எம்மைப்) பெற்றவர், பிறந்தார் - (இவர் எம்முடன்) பிறந்தவர், பெரு நாட்டார் - (இவர் எமது) பெரிய தேசத்தவர், உற்றார் - (இவர் எமது) உறவினர், உகந்தார் - (இவர் எமது) சிநேகிதர், என - என்று, (எவரையும்), வேண்டார் - விரும்பாத உலோபிகள், மற்றோர் - (இவர்களினும் வேறாகிய) அன்னியர், இரணங்கொடுத்தால்-(தம் உடம்பிலே) படுகாயத்தைச் செய்வாராயின், இடுவர் - (அவருக்குப் பொருள் எல்லாம்) கொடுப்பர், (பெற்றோர் பிறந்தார் முதலியவர்கள்), சரணம் கொடுத்தாலும் - (தம்மை) அடைக்கலம் ஆக அடைந்தாலும், இடார் - (அவர்க்கு ஒன்றும்) கொடார். [தாம், ஏ, அசை.]

10. சிவந்த தாமரையாள் - செந்தாமரைப்பூவில் வசிக்கும் இலக்குமி, வஞ்சமிலார்க்கு - (நெஞ்சில்) வஞ்சனை இல்லாதவர்களுக்கு, நீரும் - நீர்வளத்தையும், நிழலும் - நிழல் வளத்தையும், நிலம்பொதியும் நெற்கட்டும் - விளைநிலத்திலே நிறையும் நெற்போரையும், பேரும் - (பெரிய) பெயரையும், புகழும் - (பெரிய) கீர்த்தியையும், பெருவாழ்வும் - (அளவிறந்த) பெரிய வாழ்க்கையையும், ஊரும் - (அளவிறந்த) கிராமத்தையும், வருந்திருவும் - (மேல்மேல்) வளர்கின்ற செல்வத்தையும், வாழ்நாளும் - (பூரண) ஆயுளையும், என்றும் தரும் - எப்போதும் கொடுத்தருளுவாள். [தான் - அசை.]

11. மன்று - நியாயசபையிலே, ஓரம் சொன்னார் - பட்சபாதம் பேசினவரது, மனை - வீட்டிலே, வேதாளம் சேரும் -

பேய்கள் (வந்து) சேரும்; வெள்ளெருக்குப்பூக்கும் - வெள்ளெருக்குச் செடி (முளைத்து) மலரும்; பாதாள மூலி படரும் - பாதாள மூலி என்னும் கொடி படரும்; மூதேவி சென்றிருந்து வாழ்வள் - மூதேவியானவள் போய் நிலைபெற்று வாழ்வள்; சேடன் குடிபுகும் - பாம்புகள் (சென்று) குடியாயிருக்கும். [பாதாள மூலி - ஆடு தின்னாப்பாளை, ஏ ஐந்தும் அசை. பட்ச பாதம் பேசல் - ஒருவர் பட்சமாக இருந்து பேசுதல்.]

12. பசிவந்திட - (ஒருவனிடத்தில்) பசிநோய் (ஒன்றுமாத்திரம்) வருமாயின், மானம் - மானமும், குலம் - குடிப்பிறப்பும், கல்வி - கல்வியறிவும், வண்மை - உண்மை உரைத்தலும், அறிவுடைமை - பகுத்தறிவுடைமையும், தானம் - ஈகையும், தவம் - தவமும், உயர்ச்சி - உயர்வும், தாளாண்மை - முயற்சியும், தேனின் - தேன்போல, கசி(வு) வந்த - இனிமை பொருந்திய, சொல்லியர்மேல் - சொற்களையுடைய மங்கையர் மீது, காமுறுதல் - ஆசைவைத்தலும், பத்தும் - (ஆகிய) பத்தும், பறந்துபோம் - (அவனைவிட்டு) ஓடிப்போம். [உயர்ச்சி - கௌரவம்.]

13 மரம் - மரமானது, பழுத்தால் - (பழம்) பழுக்குமாயின், வௌவாலை - வௌவாலை, வாவென்று - (இப்பழத்தைத் தின்பதற்கு இங்கே நீ) வரக்கடவாயென்று, கூவி இரந்து - கூவி வேண்டி, அழைப்பார் - அழைப்பவர், அங்கு - அம்மரத்தருகில், யாவருமில்லை - ஒருவருமிலராவர். கற்று - கன்றையுடைய பசு, அமுதம்சுரந்து - பாலை (ஒளிக்காது) சுரந்து, தரல்போல் - (கன்றுக்கு) கொடுத்தல்போல, (ஒருவர்), கரவாது - (தம்மிடத்திலுள்ளதை) மறைக்காது, அளிப்பரேல் - (பிறர்க்குக்) கொடுப்பாராயின், உலகத்தவர் - உலகத்தார் (யாவரும்), (அவ்வௌவால்போலத் தாமே வந்து அவர்க்கு), உற்றார் - உறவினராவர். [கன்று + ஆ = கற்று.]

14. கல்லானே ஆனாலும் - (ஒருவன் நூல்களைப்) படியாதவனேயாயிருந்தாலும், கை - (அவனது) கையிலே, பொருள்

TB
031(5)
N33

ஒன்று - திரவியம் ஒன்று (மாத்திரம்), உண்டாயின் - இருக்குமானால், (அவனை), எல்லாரும் சென்று - யாவரும் சென்று, எதிர்கொள்வர் - எதிர்கொண்டு அழைப்பர்; இல்லானை - (கற்றவனாயிருப்பினும் பொருள்) இல்லாதவனை, இல்லாளும் - (அவன்) மனைவியும், வேண்டாள்-விரும்பாள். ஈன்றெடுத்த - (அவனைப்) பெற்றெடுத்த, தாய் - தாயும், வேண்டாள் - விரும்பாள்; அவன் வாயிற் சொல் - அவன் வாயிலிருந்து வரும் சொல், செல்லாது - (எவரிடத்தும்) பயன்படாது. [அங்கு, மற்று, அசைநிலை.]

15. வேதம் முதலாம் - வேதம் முதலாகவுள்ள, எனைத்தாய - எவ்வகைத்தாய, நூலகத்தும் - நூலினுள்ளும், (ஆராய்ந்து நோக்கினாலும்), வினைப்பயனை வெல்வதற்கு - இருவினைப்பயனை ஒழிப்பதற்கு, (உரிய உபாயம்), அது - அவ்வினைப்பயன், நினைப்பென - (நம்முடைய) நினைவால் உண்டாயது என்று, கண்ணுறுவது - அறிவதேயாம், அல்லால் - (அவ்வுபாயம்) அல்லாமல், இல்லை - (வேறு உபாயம்) இல்லையாம்; (ஆகையினாலே), நெஞ்சே - மனமே, கவலை படேல் - (வினைப்பயனை வெல்வது பற்றி நீ) கவலை கொள்ளாதே; மெய் - உண்மையாகவே, விண் - கடவுளை, உறுவார்க்கு - அடைகின்றவர்க்கு, விதி - வினையின் பயன், இல்லை - இல்லையாம். [இருவினை - நல்வினை, தீவினை; விண் - கடவுள். 'நினைப்பதென' என்பதனை நினைப்பு, அது, என, என்று பிரித்துக்கொள்க.]

86082

BJR/1277